# அலகு - 1 இந்தியாவில் தேசியத்தின் எழுச்சி

## I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

**1. காந்தியடிகள் தென்னாப்பிரிக்கவில் இருந்து எந்த ஆண்டு இந்தியா திரும்பினார்?**

**அ) 1915** ஆ) 1916 இ) 1917 ஈ) 1918

**2. இந்தியாவில் ஆங்கிலக் கல்வி எந்த ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது?**

அ) 1825 **ஆ) 1835** இ) 1845 ஈ) 1855

**3. மாறுபட்ட ஒன்றைத் தேர்வு செய்க.**

அ) வில்லியம் ஜோன்ஸ் ஆ) சார்லஸ் வில்கின்ஸ்

இ) மாக்ஸ் முல்லர் **ஈ) அரவிந்த கோஷ்**

**4. "சுயராஜ்யம் எனது பிறப்புரிமை, அதை அடைந்தே தீருவேன்" - எனக் கூறியவர்.**

**அ) பாலகங்காதர திலகர்** ஆ) தாதாபாய் நௌரோஜி

இ) சுபாஷ்சந்திர போஸ் ஈ) பாரதியார்

**5. பின்வருவனவற்றை பொருத்தி சரியான விடையைத் தேர்வு செய்க.**

(அ) பாலகங்காதர திலகர் - 1. இந்தியாவின் குரல்
(ஆ) தாதாபாய் நௌரோஜி - 2. மெட்ராஸ் டைம்ஸ்
(இ) மெக்காலே - 3. கேசரி
(ஈ) வில்லியம் டிக்பை - 4. இந்தியக் கல்வி குறித்த குறிப்புகள்

அ) 2, 4, 1, 3 **ஆ) 3, 1, 4, 2** இ) 1, 3, 2, 4 ஈ) 4, 2, 3, 1

**6. பின்வரும் எது ஒன்று சரியாகப் பொருந்தியுள்ளது ?**

அ) ஆங்கிலக் கல்விச் சட்டம் - 1843
ஆ) அடிமைமுறை ஒழிப்பு - 1859
**இ) சென்னைவாசிகள் சங்கம் - 1852**
ஈ) இண்டிகோ கலகம் - 1835

**7. பின்வரும் அமைப்புகள் தொடங்கப்பட்ட சரியான கால வரிசையைத் தேர்வு செய்க.**

(i) கிழக்கிந்தியக் கழகம் (ii) சென்னை மகாஜன சங்கம்

(iii) சென்னைவாசிகள் சங்கம் (iv) இந்தியச் சங்கம்

அ) ii, i, iii, iv (ஆ) ii, iii, i, iv **இ) iii, iv, i, ii** (ஈ) iii, iv, ii, i

**8. இந்திய தேசியக் காங்கிரஸை நிறுவியவர்.**

அ) சுபாஷ் சந்திர போஸ் ஆ) காந்தியடிகள்

**இ) A. O. ஹியூம்** ஈ) பாலகங்காதர திலகர்

KAVIN GUIDE 2020

**9. இந்தியத் தேசியக் காங்கிரஸின் முதல் தலைவர்.**

அ) சுரேந்திரநாத் பானர்ஜி ஆ) பத்ருதீன் தியாப்ஜி

இ) A. O. ஹியூம் **ஈ) W. C. பானர்ஜி**

**10. "இந்தியாவின் முதுபெரும் மனிதர்" என அழைக்கப்படுபவர்.**

அ) பாலகங்காதர திலகர் ஆ) M. K. காந்தி

**இ) தாதாபாய் நௌரோஜி** ஈ) சுபாஷ் சந்திர போஸ்

**11. "வறுமையும் பிரிட்டனுக்கொவ்வாத இந்திய ஆட்சியும்" ( *Poverty and Un-British Rule in India* ) என்ற நூலை எழுதியவர்.**

அ) பாலகங்காதர திலகர் ஆ) கோபால கிருஷ்ண கோகலே

**இ) தாதாபாய் நௌரோஜி** ஈ) எம். ஜி. ரானடே

**12. சரியான விடையைக் கண்டறிக.**

**கூற்று : ஆங்கில அரசாங்கம் தடையற்ற வணிகக் கொள்கையைப் பின்பற்றியது.**

**காரணம் (கா) : இங்கிலாந்தின் தடையற்ற வணிகக் கொள்கையினால் இந்தியா நன்மையைப் பெற்றது.**

அ) கூற்று சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.

ஆ) கூற்று சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.

**இ) கூற்று சரி. காரணம் தவறு.** ஈ) கூற்று காரணம் இரண்டும் தவறு.

**13. ஒரிஷா பஞ்சம் குறித்த பின்வரும் கூற்றுகளில் சரியானவை எவை / எது ?**

**கூற்று 1 : 1866 ஆம் ஆண்டில் ஒன்றரை மில்லியன் மக்கள் ஒரிசாவில் பட்டினியால் இறந்தனர்.**

**கூற்று 2 : பஞ்ச காலத்தில் 200 மில்லியன் பவுண்ட் அரிசியை பிரிட்டனுக்கு ஆங்கில அரசு ஏற்றுமதி செய்தது.**

**கூற்று 3 : ஒரிஷா பஞ்சமானது தாதாபாய் நௌரோஜியை இந்திய வறுமை குறித்து வாழ்நாள் ஆய்வை மேற்கொள்ளத் தூண்டியது.**

அ) 1, 2 ஆ) 1, 3 இ) இவற்றுள் எதுவுமில்லை **ஈ) இவை அனைத்தும்.**

## II. குறுகிய விடையளிக்கவும்.

**1. தேசியம் என்றால் என்ன ?**

**தேசியம் என்பதன் பொருள் :**

- தேசியம் என்பது ஒரு நாட்டிற்கு விசுவாசமாகவும் பக்தியோடும் இருத்தல்.
- தனது நாட்டை ஏனைய நாடுகளைவிட உயர்வான இடத்தில் வைத்துப் போற்றுதல்.
- தனது நாட்டின் பண்பாடு, விருப்பங்களின் வளர்ச்சியில் சிறப்புக் கவனம் செலுத்தல்.

KAVIN GUIDE 2020

## 2. புதிய நிலவுடைமை உரிமைகளால் ஏற்பட்ட பாதிப்புகளை எழுதுக.

### புதிய நிலவுடைமை உரிமைகளால் ஏற்பட்ட பாதிப்புகள் :

- ◈ நிலத்தை விற்பனைப் பொருளாக்கியது - நிலத்திற்கு விலை நிர்ணயிக்கப்பட்டது.
- ◈ இந்தியாவில் வேளாண்மையை வணிக மயமாக்கியது - உணவு உற்பத்தி தடைபட்டது.
- ◈ நிலவரி செலுத்தாமல் இருந்தால் நிலங்களை பறிமுதல் செய்து ஏலம்விட்டனர்.

## 3. அவுரி கலகம் குறித்து குறிப்பு வரைக.

### அவுரி கலகம் - குறிப்பு :

- ◈ இந்தியக் குத்தகை விவசாயிகளை அவுரியை மட்டுமே பயிரிடக் கட்டாயப்படுத்தினர்.
- ◈ பண்ணையாளர் சந்தை விலையைவிடக் குறைவான விலைக்கு அவுரியை வாங்கினார்.
- ◈ புது ஒப்பந்தங்கள் போட மறுத்து விவசாயிகள் 1859 - 60 இல் புரட்சியில் ஈடுபட்டனர்.

## 4. இல்பர்ட் மசோதாவின் முக்கியத்துவத்தை விவாதி.

### இல்பர்ட் மசோதாவின் முக்கியத்துவம் :

- ◈ 1883 இல் இல்பர்ட் மசோதாவிற்கு ஆதரவாக இந்தியாவில் கிளர்ச்சிகள் நடந்தன.
- ◈ தேசிய அளவில் ஒரு அரசியல்சார் அமைப்பு தேவை என இந்தியர்கள் உணர்ந்தனர்.
- ◈ ஒருவித தேசிய உணர்வு தோன்றி இறுதியில் இந்திய தேசிய காங்கிரஸ் உதயமானது.

## 5. நவீன கல்வியில் சமயப் பரப்புக் குழுக்களின் பங்கினை விளக்குக.

### நவீன கல்வியில் சமயப் பரப்புக் குழுக்களின் பங்கு :

- ◈ இந்துமத பலகடவுள் கோட்பாடு, சாதிய ஏற்ற தாழ்வுகளை கிறித்தவர்கள் சாடினர்.
- ◈ கல்வி உரிமை மறுக்கப்பட்ட அடித்தட்டு மக்களுக்கு கல்வி பயிலும் வாய்ப்பை தந்தது.
- ◈ பல்வேறு சமூக, மத சீர்திருத்த இயங்கங்கள் தோன்ற வழிவகை செய்தது.

## 6. ஆங்கிலப் பாராளுமன்றத்திற்குச் சென்னைவாசிகள் சங்கத்தினர் அளித்த கோரிக்கைகள் என்ன?

### ஆங்கிலப் பாராளுமன்றத்திற்குச் சென்னைவாசிகள் சங்கத்தினர் அளித்த கோரிக்கைகள்:

- ◈ இந்தியாவில் ஆங்கிலக் கிழக்கிந்திய கம்பெனியின் ஆட்சி ஒழிக்கப்பட வேண்டும்.
- ◈ ரயத்துவாரி, ஜமீன்தாரி முறைகளை ஒழித்து விவசாயிகளை விடுவிக்க வேண்டும்.
- ◈ வட்டார மொழிகளில் புலமை பெற்ற திறமையான நீதிபதிகளை நியமிக்க வேண்டும்.

KAVIN GUIDE 2020

**7. இந்திய தேசிய காங்கிரசுக்கு முன்னர் தொடங்கப்பட்ட அமைப்புகளின் பட்டியலை தயார் செய்க.**

**இந்திய தேசிய காங்கிரசுக்கு முன்னர் தொடங்கப்பட்ட அமைப்புகள் :**

- ◈ தாதாபாய் நௌரோஜி நிறுவிய இந்திய சங்கம் - 1865
- ◈ தாதாபாய் நௌரோஜி நிறுவிய கிழக்கிந்தியக் கழகம் - 1866
- ◈ சென்னை வாசிகள் சங்கம் - 1852
- ◈ சென்னை மகாஜன சங்கம் - 1884

**8. தொடக்க கால முக்கிய தேசியவாதிகளைக் கண்டறிக.**

**தொடக்க கால முக்கிய தேசியவாதிகள் :**

- ◈ W.C. பானர்ஜி
- ◈ சுரேந்திரநாத் பானர்ஜி
- ◈ தாதாபாய் நௌரோஜி
- ◈ பக்ருதீன் தியாப்ஜி
- ◈ கோபால கிருஷ்ண கோகலே
- ◈ பெரோஸ்ஷா மேத்தா
- ◈ லாலா லஜபதி ராய்
- ◈ பிபின் சந்திர பால்
- ◈ பால கங்காதர திலகர்

KAVIN GUIDE 2020

## III. சுருக்கமாக விடையளிக்கவும்.

**1. மெக்காலேயின் "இந்தியக் கல்வி குறித்த குறிப்புகளை" ஆய்க.**

**மெக்காலேயின் "இந்தியக் கல்வி குறித்த குறிப்புகள்" :**

- ◈ 1835 இல் மெக்காலேயின் "இந்தியக் கல்வி குறித்த குறிப்புகள்" வெளியானது.
- ◈ ஆங்கில வழியில் மேற்கத்தியக் கல்வி கற்பிக்கப்பட வேண்டும் என வாதிட்டார்.
- ◈ இந்திய மக்கள் ரத்தத்திலும் நிறத்திலும் மட்டும் இந்தியர்களாக இருக்க வேண்டும்.
- ◈ விருப்பத்தில், கருத்தில், ஒழுக்கத்தில், அறிவில் ஆங்கிலேயராக இருக்க வேண்டும்.

**2. 1853 இல் இந்தியச் சீர்திருத்தக் கழக தலைவரின் சென்னை வருகையை குறித்து நீ அறிந்தது என்ன?**

**1853 இல் இந்தியச் சீர்திருத்தக் கழக தலைவரின் சென்னை வருகை :**

- ◈ H.D. செய்மோர் இந்தியச் சீர்திருத்தக் கழகத்தின் தலைவராக இருந்தார்.
- ◈ சென்னைவாசிகள் சங்கத்தின் மனுவை விசாரிக்க 1853 இல் சென்னை வந்தார்.
- ◈ குண்டூர், கடலூர், திருச்சி, சேலம், திருநெல்வேலி ஆகிய இடங்களை பார்வையிட்டார்.
- ◈ 1853 - பட்டயச் சட்டம், இந்தியாவில் கம்பெனியின் ஆட்சி தொடர அனுமதி அளித்தது.

**3. பிரிட்டிஷ் இந்தியாவில் தேசிய உணர்வினை உருவாக்கியதில் பத்திரிகைகளின் பங்கினை எழுதுக.**

**பிரிட்டிஷ் இந்தியாவில் தேசிய உணர்வினை உருவாக்கியதில் பத்திரிகைகளின் பங்கு :**

- தன்னாட்சி, மக்களாட்சி, குடிமை உரிமைகள் போன்ற சிந்தனைகளைப் பரப்பின.
- அரசியலை விமர்சனம் செய்தன. நாட்டினைப் பாதிக்கும் பிரச்சனைகளை பேசின.
- மக்கள் நலன் சார்ந்த பொதுவான செயல்களை மக்களுக்குக் கற்றுத்தர முயன்றன.
- தேசிய, பிராந்திய மொழிப் பத்திரிகைகள் மக்களிடம் தேசிய உணர்வை விதைத்தன.

**4. பிரிட்டிஷ் இந்தியாவில் ஒப்பந்தக்கூலி தொழிலாளர் முறை எவ்வழியில் ஏற்படுத்தப்பட்டது?**

**பிரிட்டிஷ் இந்தியாவில் ஒப்பந்தக் கூலி தொழிலாளர் முறை ஏற்படுத்தப்பட்ட வழிகள் :**

- தொழிற்புரட்சியால் வேலை இழந்த இந்தியர்கள் ஒப்பந்தக் கூலிகளாக சென்றனர்.
- 1833 மற்றும் 1843 இல் ஏற்பட்ட பஞ்சங்கள் இந்தியர்களை கூலிகளாக மாற்றியது.
- 1843 இல் அடிமைமுறை ஒழிக்கப்பட்டதால் ஒப்பந்தக் கூலிமுறை ஊக்கம் பெற்றது.
- வறட்சி மற்றும் வறுமையால் பாதிக்கப்பட்ட மக்கள் ஒப்பந்தக் கூலிகளாக மாறினர்.

**5. மே 1884 இல் நடைபெற்ற சென்னை மகாஜன சங்கத்தின் தொடக்க விழாவில் பங்கேற்ற முக்கியத் தலைவர்களின் பெயர்களை எழுதுக.**

**மே 1884 இல் நடைபெற்ற சென்னை மகாஜன சங்கத்தின் தொடக்க விழாவில் பங்கேற்ற முக்கியத் தலைவர்களின் பெயர்கள் :**

- G. சுப்ரமணியம்
- விஜயராகவாச்சாரி
- அனந்தாசார்லு
- ரங்கையா
- பாலாஜிராவ்
- சேலம் ராமசாமி

**6. தொடக்க காலத்தில் இலங்கைக்கு தொழிலாளர்களை அனுப்பி வைக்கப்பட்டது குறித்து எழுதுக.**

**தொடக்க காலத்தில் இலங்கைக்கு தொழிலாளர்களை அனுப்பி வைக்கப்பட்டது :**

- 1815 இல் சிலோன் ஆளுநர் இலங்கைக்கு "கூலிகளை" அனுப்பி வைக்கக் கோரினார்.
- 1837 இல் தமிழ்நாட்டில் இருந்து சுமார் 10,000 பேர் கூலிகளாக இலங்கை சென்றனர்.
- 1846 இல் 80,000 பேரும், 1855 இல் 1,28,000 பேரும் என தமிழர்கள் குடிபெயர்ந்தனர்.
- 1877 இல் சுமார் 3,80,000 தமிழ் கூலித் தொழிலாளர்கள் பணியில் அமர்த்தப்பட்டனர்.

KAVIN GUIDE 2020

**7. இந்திய நிர்வாகச் செலவின விவரங்களைக் கூறுக.**

**இந்திய நிர்வாகச் செலவின விவரங்கள் :**

- ◈ லண்டனில் வாழும் கம்பெனியின் பங்குதாரர்களுக்கு லாபத்தில் வழங்கப்படும் பங்கு.
- ◈ இருப்புப்பாதைத் துறையில் முதலீடு செய்தவர்களுக்கு செலுத்த வேண்டிய வட்டி.
- ◈ பணி நிறைவு செய்த அதிகாரிகளுக்கும் தளபதிகளுக்கும் வழங்கப்படும் ஓய்வூதியம்.
- ◈ போர்களுக்காக இங்கிலாந்திடம் இருந்து பெற்ற கடனுக்கு செலுத்த வேண்டிய வட்டி.

## IV. விரிவான விடையளிக்கவும்.

**1. இந்திய நடுத்தர வர்க்கத்தில் மேற்கத்தியக் கல்வியின் தாக்கத்தையும் பின்னர், அது இந்தியச் சமூகத்தைச் சீர்திருத்தவும் மற்றும் மீட்டுருவாக்கம் செய்திட ஆற்றிய பங்கினை விவாதிக்கவும்.**

**இந்திய நடுத்தர வர்க்கத்தில் மேற்கத்தியக் கல்வியின் தாக்கம் :**

- ◈ நடுத்தர வர்க்கத்தினர் ஆங்கிலேயரின் நிர்வாகத்தின் கீழ் பணிபுரிய மறுத்தனர்.
- ◈ தங்களது விருப்பங்கள் நிறைவேற சுதந்திர இந்தியா வேண்டுமென உணர்ந்தனர்.
- ◈ ஏனைய மக்களிடையே நாட்டுப்பற்றை வளர்த்தெடுப்பதில் சிறப்பானப் பங்காற்றினர்.
- ◈ தேசிய அளவில் பல அமைப்புகளில் இணைந்து நாட்டு மக்களை ஒன்று திரட்டினர்.

**இந்தியச் சமூகத்தை சீர்திருத்தவும் மற்றும் மீட்டுருவாக்கம் செய்ததில் மேற்கத்தியக் கல்வியின் பங்கு :**

- ◈ பிரம்ம சமாஜம், அலிகார் இயக்கம் போன்ற சீர்திருத்த இயக்கங்கள் தோன்றின.
- ◈ ஆரிய சமாஜம், தியோபந்த் இயக்கம் போன்ற மீட்பு இயக்கங்கள் நிறுவப்பட்டன.
- ◈ சீர்திருத்தவாதிகளின் மீள்சிந்தனை விளைவாக இந்திய தேசிய உணர்வு உதயமானது.
- ◈ சதி வழக்கம், பெண்சிசுக் கொலை, குழந்தைத் திருமணம் ஆகியன ஒழிக்கப்பட்டது.
- ◈ விதவை மறுமணம், பெண்கல்வி, ஆகியவற்றில் அதிக அக்கறை செலுத்தப்பட்டது.

**2. பிரிட்டிஷ் இந்தியாவில் தேசிய உணர்வு தோன்ற காரணமான சமூகப் - பொருளாதாரக் காரணிகளை ஆய்க.**

**பிரிட்டிஷ் இந்தியாவில் தேசிய உணர்வு தோன்ற காரணமான சமூகப் - பொருளாதாரக் காரணிகள் :**

- ◈ இந்தியாவின் மரபு சார்ந்த நிலவுடைமை முறையை ஆங்கிலேயர்கள் சிதைத்தனர்.
- ◈ வறட்சி, பஞ்சம் ஏற்பட்ட காலங்களிலும் நிலவரியைப் பணமாகக் கணக்கிட்டனர்.
- ◈ புதிய நிலவருவாய் முறைகள் நிலங்கள விற்பனைப் பொருளாக மாற்றப்பட்டன.

KAVIN GUIDE 2020

- வேளாண்மை வணிக மயமாக மாறியதால் உணவு உற்பத்தி செய்வது குறைந்தது.
- சந்தைக்குத் தேவையானதை மட்டுமே உற்பத்தி செய்யுமாறு கட்டாயப்படுத்தினர்.
- நிலவரி / குத்தகை செலுத்தாமல் இருந்தால் நிலங்களைப் பறிமுதல் செய்தனர்.
- ஆங்கில அரசு கட்டுப்பாடுகளற்ற சுதந்திர வணிகக் கொள்கையைப் பின்பற்றியது.
- ஆங்கிலேயர்கள் பஞ்சங்களின் போதும் தலையிடாக் கொள்கையைப் பின்பற்றினர்.
- ஒப்பந்தக் கூலித் தொழிலாளர் முறையில் மக்கள் பல நாடுகளுக்கு குடிபெயர்ந்தனர்.
- இந்தியாவில் தொழில்கள் நீக்கம் செய்யப்பட்டதால் மக்கள் பலர் வேலை இழந்தனர்.

## 3. இந்தியாவில் தேசிய விழிப்புணர்வுக்கு பிரிட்டிஷாரின் அடக்குமுறை மற்றும் இனவெறிக் கொள்கைகள், எந்த அளவிற்குக் காரணமாக இருந்தன?

### பிரிட்டிஷாரின் அடக்குமுறை கொள்கைகள் :

- 1870 இந்திய தண்டனைச் சட்டம், பிரிவு '124 ஏ' அடக்குமுறை ஒழுங்காற்றுச் சட்டம்.
- 1878 இல் பத்திரிக்கைகளைத் தணிக்கைக்கு உட்படுத்திய பிராந்திய மொழிச் சட்டம்.
- இங்கிலாந்து பருத்தியிழை துணிகளின் மீதான சுங்கவரி பெருமளவு குறைக்கப்பட்டது.
- இந்தியாவின் பருத்தியிழை துணிகளின் மீதான உள்நாட்டுத் தீர்வை உயர்த்தப்பட்டது.
- ரிப்பன் பிரபு ஆட்சியில் கொண்டுவரப்பட்ட இல்பர்ட் மசோதாவில் திருத்தம் செய்தனர்.

### பிரிட்டிஷாரின் இனவெறிக் கொள்கைகள் :

- ஆங்கிலேயர் இனப்பாகுபாடு மற்றும் இந்திய எதிர்ப்புக் கொள்கையைப் பின்பற்றினர்.
- அரசின் உயர் பதவிகளில் இந்தியர்களை நியமனம் செய்யாமல் விலக்கி வைத்தனர்.
- குடிமைப் பணிக்கானத் தேர்வுகள் எழுத வயது வரம்பு 21 என நிர்ணயம் செய்யப்பட்டது.
- ICS தேர்வில் இந்தியர்களின் வெற்றியைத் தடுக்க வயது வரம்பை 19 என குறைத்தனர்.
- ICS தேர்வுகளை இங்கிலாந்திலும் இந்தியாவிலும் ஒரே நேரத்தில் நடத்த அரசு மறுத்தது.

## 4. இந்திய தேசியக் காங்கிரசின் நோக்கங்களையும் பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து விடுதலை பெறுவதற்கு ஆரம்ப கால தேசியவாதிகள் அளித்த பங்கினையும் விளக்குக.

### இந்திய தேசியக் காங்கிரசின் நோக்கங்கள் :

- இந்தியாவின் ஆட்சி அதிகாரத்தில் இந்தியப் பிரதிநிதிகள் இடம்பெற வேண்டும்.
- நிலவரியை குறைத்து ஜமீன்தார்களின் சுரண்டலிலிருந்து விவசாயிகள் பாதுகாத்தல்.
- சுதேசிப் பொருட்களுக்கு நன்மை பயக்கும் விதத்தில் இறக்குமதி வரியை உயர்த்துதல்.
- ICS தேர்வுகளில் வெற்றி பெறுவதன் மூலம் நிர்வாகப் பணிகளை இந்திய மயமாக்குதல்.
- ஆட்சி நிர்வாகத்தையும், நீதி நிர்வாகத்தையும் முற்றிலும் தனித்தனியாகப் பிரித்தல்.

KAVIN GUIDE 2020

**பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து விடுதலை பெறுவதற்கு ஆரம்ப கால தேசியவாதிகள் அளித்த பங்களிப்புகள் :**

- தாதாபாய் நௌரோஜி "செல்வச் சுரண்டல்" எனும் கோட்பாட்டை முன் வைத்தார்.
- திலகர் "சுயராஜ்யம் எனது பிறப்புரிமை அதை அடைந்தே தீருவேன்" என முழங்கினார்.
- சுரேந்திரநாத் பானர்ஜி பெங்காலி என்னும் பத்திரிகையின் ஆசிரியராகப் பணிபுரிந்தார்.
- திலகர் கேசரி, மராட்டா ஆகிய இரண்டு பத்திரிகைகளின் ஆசிரியராகத் திகழ்ந்தார்.
- நௌரோஜி இந்தியாவின் குரல், ரஸ்ட்கோப்தார் ஆகிய பத்திரிகைகளை நடத்தினார்.

## V. வரைபடம்.

**இந்திய தேசிய காங்கிரஸ் மாநாடுகள் நடைபெற்ற பின்வரும் இடங்களை இந்திய வரைபடத்தில் குறிக்கவும்.**

1. பம்பாய்
2. கல்கத்தா
3. சென்னை
4. அகமதாபாத்
5. லக்னோ
6. கான்பூர்
7. சூரத்
8. லாகூர்
9. பூனா
10. அலகாபாத்

KAVIN GUIDE 2020

# அலகு - 2 | தீவிர தேசியவாதத்தின் எழுச்சியும் சுதேசி இயக்கமும்

## I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

**1. சூரத்தில் நடைபெற இருந்த காங்கிரஸ் மாநாட்டிற்கு காங்கிரஸின் அடுத்த தலைவராக தேர்ந்தெடுக்கப்படுவதற்கு யாருடைய பெயர் தீவிர தேசியவாதிகளால் முன்மொழியப்பட்டது ?**

அ) அரவிந்த கோஷ் ஆ) தாதாபாய் நௌரோஜி

இ) ஃபெரோஸ் ஷா மேத்தா **ஈ) லாலா லஜபதி ராய்**

**2. பின்வரும் கூற்றுகளை காண்க.**

**(i) 1905 இல் மேற்கொள்ளப்பட்ட வங்கப் பிரிவினை ஆங்கிலேயரின் பிரித்தாளும் கொள்கைக்கு மிகச் சிறந்த உதாரணமாகும்.**

**(ii) 1905 இல் நடைபெற்ற கல்கத்தா மாநாட்டில் சுரேந்திரநாத் பானர்ஜி பிரிட்டிஷ் பொருட்களையும் நிறுவனங்களையும் புறக்கணிக்க அழைப்பு விடுத்தார்.**

**(iii) 1905 ஆகஸ்ட் 7 இல் நடைபெற்ற டவுன்ஹால் கூட்டத்தில் சுதேசி இயக்கம் குறித்த முறையான அறிவிப்பு வழங்கப்பட்டது.**

**மேற்கண்ட கூற்றுகளில் எது / எவை சரியானவை.**

அ) (i) மட்டும் ஆ) (i) மற்றும் (iii) மட்டும்

இ) (i) மற்றும் (ii) மட்டும் **ஈ) மேற்கண்ட அனைத்தும்**

**3. பின்வருவனவற்றைப் பொருத்தி சரியான விடையைத் தேர்க.**

**(அ)** இந்தியப் பத்திரிகைச் சட்டம், 1910 - **1.** சுய ஆட்சி

**(ஆ)** விடிவெள்ளிக் கழகம் - **2.** சார்ந்திருக்கும் நிலைக்கு எதிரான புரட்சி

**(இ)** சுயராஜ்யம் - **3.** தேசிய அளவிலான செயல்பாடுகளை நசுக்கியது

**(ஈ)** சுதேசி - **4.** கல்விக்கான தேசியக் கழகம்

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ) | 3 | 1 | 4 | 2 |
| ஆ) | 1 | 2 | 3 | 4 |
| **இ)** | **3** | **4** | **1** | **2** |
| ஈ) | 1 | 2 | 4 | 3 |

**4. பின்வருவனவற்றுள் எந்த ஒன்று சரியாகப் பொருந்தியுள்ளது?**

**அ) பங்கிம் சந்திர சாட்டர்ஜி - ஆனந்த மடம்**

ஆ) ஜி. சுப்ரமணியம் - விடிவெள்ளிக் கழகம்

இ) மிண்டோ பிரபு - பல்கலைக் கழகச் சட்டம், 1904

ஈ) தீவிர தேசியவாத மையம் - சென்னை

KAVIN GUIDE 2020

**5. கல்கத்தாவில் அனுசிலன் சமிதியை நிறுவியவர்.**

அ) புலின் பிஹாரி தாஸ் ஆ) ஹேமச்சந்திர கானுங்கோ

**இ) ஜதிந்தரநாத் பானர்ஜி மற்றும் பரிந்தர் குமார் கோஷ**

ஈ) குதிரம் போஷ் மற்றும் பிரஃபுல்லா சாக்கி

**6. பொருத்தமான விடையைக் கண்டறிக.**

**கூற்று : 1905 அக்டோபர் 16 துக்க நாளாக அனுசரிக்கப்பட்டது.**

**காரணம் : மேற்படி நாளில் வங்காளம் முறைப்படி இரண்டு மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டது.**

**அ) கூற்று மற்றும் காரணம் சரி, காரணம் கூற்றை விளக்குகிறது.**

ஆ) கூற்று மற்றும் காரணம் சரி, ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.

இ) கூற்று சரி; காரணம் தவறு.

ஈ) கூற்று தவறு; காரணம் சரி.

**7. பொருத்தமான விடையைக் கண்டறிக.**

**கூற்று : வ. உ. சிதம்பரம் சுதேசி கப்பல் நிறுவனத்தைத் தொடங்கினார்.**

**காரணம் : இந்தியக் கடற்கரைகளில் ஆங்கிலேயர்களின் முற்றுரிமையினை அவர் எதிர்த்தார்.**

**அ) கூற்று மற்றும் காரணம் சரி; காரணம் கூற்றை விளக்குகிறது.**

ஆ) கூற்று மற்றும் காரணம் சரி; ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.

இ) கூற்று சரி; காரணம் தவறு.

ஈ) கூற்று தவறு; காரணம் சரி.

**8. சுப்ரமணிய பாரதி குறித்த பின்வரும் எந்த கூற்று தவறானது ?**

அ) பாரதி சுதேசமித்திரன் இதழின் துணை ஆசிரியராக இருந்தார்.

ஆ) பாரதி திலகரின் Tenets of New Party என்ற நூலை தமிழில் மொழி பெயர்த்தார்.

**இ) பாரதியின் குருமணி (ஆசிரியர்) சுவாமி விவேகானந்தராவார்.**

ஈ) பாரதி பெண்களுக்கான "சக்ரவர்த்தினி" என்ற இதழின் ஆசிரியராக இருந்தார்.

## II. குறுகிய விடையளிக்கவும்.

**1. மிதவாதிகளின் "இறைஞ்சுதல் கொள்கை" என்றால் என்ன?**

**மிதவாதிகளின் இறைஞ்சுதல் கொள்கை :**

- மிதவாத தேசியவாதிகள் கடைபிடித்த கவனமான அணுகுமுறை.
- ஆங்கிலேயரிடம் மன்றாடுதல் மற்றும் மனுக்களைச் சமர்ப்பித்தல்.
- இக்கொள்கையை தீவிர தேசியவாதிகள் கடுமையாக விமர்சித்தனர்.

KAVIN GUIDE 2020

### 2. மகாதேவ் கோவிந்த் ரானடே சுதேசிக் கொள்கையினை எவ்வாறு விளக்குகிறார்?

**மகாதேவ் கோவிந்த் ரானடே விளக்கும் சுதேசிக் கொள்கை :**

- சுதேசி என்பதன் பொருள் "ஒருவரது சொந்த நாடு" என்பதாகும்.
- 1872 இல் பூனாவில் தொடர் சொற்பொழிவுகள் மூலம் பிரபலப்படுத்தினார்.
- ஒருவரது சொந்த நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களின் பயன்பாடு குறைவான மனநிறைவைக் கொடுத்த போதிலும் முன்னுரிமை வழங்கப்படல் வேண்டும் என்றார்.

### 3. பிரிட்டிஷ் இந்தியாவில் தீவிர தேசியவாதிகளின் மையமாக விளங்கிய தலைவர்களைக் கண்டறிக.

**பிரிட்டிஷ் இந்தியாவில் தீவிர தேசியவாதிகளின் மையமாக விளங்கிய தலைவர்கள் :**

- லாலா லஜபதி ராய்.
- பிபின் சந்திர பால்.
- பால கங்காதர திலகர்.

### 4. தீவிர தேசியவாதம் 1908 க்கு பின்னர் ஏன் குறைந்தது?

**தீவிர தேசியவாதம் 1908 க்கு பின்னர் குறைந்தது - காரணம் :**

- 1907 இல் நடைபெற்ற சூரத் மாநாட்டில் காங்கிரஸ் இரண்டாகப் பிரிந்தது.
- டிசம்பர், 1908 இல் மிண்டோ - மார்லி சீர்திருத்தங்கள் அறிவிக்கப்பட்டன.
- 1908 க்கு பிறகு ஆங்கிலேயர் பல அடக்குமுறை சட்டங்களை இயற்றினர்.

### 5. தேசிய இயக்கத்தை ஒடுக்க காலனிய அரசு மேற்கொண்ட அடக்குமுறைகள் யாவை?

**தேசிய இயக்கத்தை ஒடுக்க காலனிய அரசு மேற்கொண்ட அடக்குமுறைகள் :**

- 1904 - பல்கலைக் கழகச் சட்டம்
- 1907 - பொதுக் கூட்டங்கள் சட்டம்
- 1908 - செய்தித்தாள் சட்டம்
- 1908 - வெடி மருந்துச் சட்டம்
- 1908 - தூண்டுதல் குற்றச் சட்டம்
- 1910 - இந்திய பத்திரிகைச் சட்டம்

## III. சுருக்கமாக விடையளிக்கவும்.

### 1. காங்கிரஸ் இரண்டாகப் பிளவுபடக் காரணமான சூரத் மாநாட்டின் செயல்முறைகள் குறித்து எழுதுக.

**காங்கிரஸ் இரண்டாகப் பிளவுபடக் காரணமான சூரத் மாநாட்டின் செயல்முறைகள் :**

- காங்கிரசின் தலைவராக மிதவாதிகள் ராஷ்பிகாரி கோஷ் பெயரை முன்மொழிந்தனர்.
- அதற்கு எதிராக தீவிர தேசியவாதிகள் லாலா லஜபதி ராய் பெயரை முன்மொழிந்தனர்.
- இயக்கத்தில் பிளவு ஏற்படுவதைத் தவிர்க்க லாலா லஜபதி ராய் போட்டியிட மறுத்தார்.
- கல்கத்தா மாநாட்டுத் தீர்மானங்களை நீக்குமாறு மிதவாத தேசியவாதிகள் கோரினர்.

KAVIN GUIDE 2020

**2. சுதேசி இயக்கத்தின் போது அதிகரித்த தனிநபர் வன்முறைகளுக்கான காரணங்களை பற்றி எழுதுக.**

**சுதேசி இயக்கத்தின் போது அதிகரித்த தனிநபர் வன்முறைகளுக்கான காரணங்கள் :**

- ◈ அந்நிய அடக்குமுறை ஆட்சியின் கீழ் இளைஞர்கள் பொறுமை இழந்து காணப்பட்டனர்.
- ◈ இளைஞர்களுக்கு தலைமையேற்று போராட்டம் நடத்த தீவிர தேசியவாதிகள் தவறினர்.
- ◈ புரட்சிகர செயல்பாடே இந்திய வீரத்தை மீட்டெடுக்கும் குறியீட்டு முயற்சி என நம்பினர்.
- ◈ இளைஞர்கள் அரசியலற்ற ஆக்கசார் செயல்பாடுகளை ஓரளவே ஏற்றுக் கொண்டனர்.

**3. பெருவாரியான மக்களை ஒன்றுதிரட்ட சமிதிகளால் பயன்படுத்தப்பட்ட பணிகளின் சிறப்பம்சங்கள் யாவை?**

**பெருவாரியான மக்களை ஒன்றுதிரட்ட சமிதிகளால் பயன்படுத்தப்பட்ட பணிகளின் சிறப்பம்சங்கள் :**

- ◈ உறுப்பினர்களுக்கு உடற்பயிற்சி அளித்தல். அறநெறிகளைக் கற்றுத் தருதல்.
- ◈ பஞ்சங்கள் ஏற்படும் போதும் நோய்களின் தாக்கத்தின் போதும் சேவை புரிதல்.
- ◈ விழாக் காலங்களின் போது சுதேசி செய்திகளை மக்களிடம் பரப்புரை செய்தல்.
- ◈ உள்ளூர் அளவில் பள்ளிகளையும் நடுவர் நீதிமன்றங்களையும் உருவாக்குதல்.

**4. 1908 இல் நடைபெற்ற கோரல் நூற்பாலை வேலைநிறுத்தம் பற்றி நீவீர் அறிவது யாது?**

**1908 இல் நடைபெற்ற கோரல் நூற்பாலை வேலைநிறுத்தம் :**

- ◈ வ.உ.சி. மற்றும் சுப்பிரமணிய சிவா இருவரும் தொழிலாளர்களிடம் உரையாற்றினர்.
- ◈ அதில் தூண்டப்பட்ட தொழிலாளர்கள் மார்ச், 1908 இல் வேலைநிறுத்தம் செய்தனர்.
- ◈ அதை முறியடிக்க தூத்துக்குடி நகரினுள் கூட்டங்கள் நடத்த அரசு தடை விதித்தது.
- ◈ ஆலை முதலாளிகள் பேச்சுவார்த்தை நடத்தி கோரிக்கைகளை ஏற்க முன்வந்தனர்.

**5. அலிப்பூர் வெடிகுண்டு வழக்கின் முக்கியத்துவம் குறித்து எழுதுக.**

**அலிப்பூர் வெடிகுண்டு வழக்கின் முக்கியத்துவம் :**

- ◈ அரவிந்த கோஷ், அவரது சகோதரர், அவர்களுடன் மேலும் 35 பேர் கைதாயினர்.
- ◈ இந்த வழக்கில் புரட்சிகர தேசியவாதிகளின் சார்பாக சி.ஆர். தாஸ் வாதாடினார்.
- ◈ அரவிந்த கோஷ் மட்டும் விடுவிக்கப்பட்டார். மற்றவர்கள் நாடு கடத்தப்பட்டனர்.
- ◈ மக்களின் முன்னால் புரட்சிகர தேசியவாதிகளை கதாநாயகர்களாக சித்தரித்தது.

KAVIN GUIDE 2020

### 6. வ. உ. சிதம்பரத்தின் சுதேசி இயக்க முயற்சிகள் குறித்து எழுதுக.

**வ. உ. சிதம்பரத்தின் சுதேசி இயக்க முயற்சிகள் :**

- ஆங்கிலேயரின் கடற்பயண முற்றுரிமைக்கு எதிராக சுதேசி கப்பல் கம்பெனி நிறுவினார்.
- 1906 இல் வ.உ.சி. சுதேசி நீராவிக் கப்பல் கம்பெனியைப் ( SSNC ) பதிவு செய்தார்.
- வ.உ.சி. S.S. கலியா, S.S. லாவோ என்னும் இரண்டு நீராவிக் கப்பல்களை வாங்கினார்.
- 1907 இல் பிபின் சந்திர பால் விடுதலையானதை சுதேசி தினமாகக் கொண்டாடினார்.

### 7. கலெக்டர் ஆஷ் ஏன் வாஞ்சிநாதனால் கொல்லப்பட்டார்?

**கலெக்டர் ஆஷ், வாஞ்சிநாதனால் கொல்லப்படக் காரணம் :**

- தூத்துக்குடியில் சுதேசி முயற்சிகளை ஒடுக்க பல தலைவர்களை கைது செய்தனர்.
- திருநெல்வேலி நிகழ்வுக்குப் பழி வாங்குவதற்காக ஒரு சதித்திட்டம் தீட்டப்பட்டது.
- பாரதமாதா என்ற புரட்சிகரக் குழுவில் வாஞ்சிநாதன் ஒரு உறுப்பினராக இருந்தார்.
- ஐரோப்பிய அதிகாரிகளைக் கொல்வதன் மூலம் சுயராஜ்ஜியம் அடைய விரும்பினார்.

## IV. விரிவான விடையளிக்கவும்.

### 1. தமிழ்நாட்டில் சுதேசி இயக்கத்தின் செயல்பாடுகள் குறித்து எழுதுக.

**தமிழ்நாட்டில் சுதேசி இயக்கத்தின் செயல்பாடுகள் :**

**அ) வட்டார மொழி சொற்பொழிவுக் கலையின் வளர்ச்சி :**

- அரசுக்கு எதிரான கூட்டங்களில் வட்டார மொழியில் சொற்பொழிவு நிகழ்த்தப்பட்டது.
- 1907 இல் பிபின் சந்திர பால், சென்னையில் மெரினாக் கடற்கரையில் உரையாற்றினார்.
- மாணவர்கள் வந்தே மாதரம் என்ற முழக்கத்துடன் ஐரோப்பியர்களை வாழ்த்தினார்கள்.

**ஆ) வ.உ.சி. யும் சுதேசி நீராவிக் கப்பல் கம்பெனியும் :**

- ஆங்கிலேயரின் கடற்பயண முற்றுரிமைக்கு எதிராக சுதேசி கப்பல் கம்பெனி நிறுவினார்.
- 1906 இல் வ.உ.சி. சுதேசி நீராவிக் கப்பல் கம்பெனியைப் ( SSNC ) பதிவு செய்தார்.
- வ.உ.சி. S.S. கலியா, S.S. லாவோ என்னும் இரண்டு நீராவிக் கப்பல்களை வாங்கினார்.

**இ) கோரல் நூற்பாலை வேலைநிறுத்தம் :**

- வ.உ.சி. மற்றும் சுப்பிரமணிய சிவா இருவரும் தொழிலாளர்களிடம் உரையாற்றினர்.
- அதில் தூண்டப்பட்ட தொழிலாளர்கள் மார்ச், 1908 இல் வேலைநிறுத்தம் செய்தனர்.
- அதை முறியடிக்க தூத்துக்குடி நகரினுள் கூட்டங்கள் நடத்த அரசு தடை விதித்தது.

KAVIN GUIDE 2020

**ஈ) சுப்ரமணிய பாரதி - கவிஞர் மற்றும் தேசியவாதி :**

◈ பாரதி சுதேசமித்திரன் பத்திரிகையின் துணை ஆசிரியராகப் பணி அமர்த்தப்பட்டார்.

◈ திலகரின் Tenets of New party எனும் நூலை பாரதி தமிழில் மொழியாக்கம் செய்தார்.

◈ பாரதி ஆசிரியராக இருந்த இந்தியா வார இதழ் தீவிர தேசியவாதிகளின் குரலானது.

**உ) வ.உ.சி., சுப்ரமணிய சிவா - கைதும் சிறைவாசமும் :**

◈ 1907 இல் பிபின் சந்திர பால் விடுதலையானதை சுதேசி தினமாகக் கொண்டாடினர்.

◈ வ.உ.சி., சுப்ரமணிய சிவா, தேச துரோகக் குற்றத்திற்காகக் கைது செய்யப்பட்டனர்.

◈ சுப்ரமணிய சிவாவுக்கு 10 ஆண்டுகள் நாடு கடத்துதல் தண்டனை விதிக்கப்பட்டது.

◈ வ.உ.சி. க்கு ஆயுள் தண்டனை ( 20 ஆண்டுகள்) விதித்து சிறையில் அடைத்தனர்.

**ஊ) ஆஷ் படுகொலை :**

◈ திருநெல்வேலி நிகழ்வுக்குப் பழி வாங்குவதற்காக ஒரு சதித்திட்டம் தீட்டப்பட்டது.

◈ பாரதமாதா என்ற புரட்சிகரக் குழுவில் வாஞ்சிநாதன் ஒரு உறுப்பினராக இருந்தார்.

◈ திருநெல்வேலி மாவட்ட கலெக்டர் ஆஷ் துரையை வாஞ்சிநாதன் சுட்டுக் கொன்றார்.

## 2. இந்திய தேசிய இயக்கத்தில் வ. உ. சிதம்பரத்தின் பங்கினைப் பற்றி எழுதுக.

### இந்திய தேசிய இயக்கத்தில் வ. உ. சிதம்பரத்தின் பங்கு :

**1) வ.உ.சி. யும் சுதேசி நீராவிக் கப்பல் கம்பெனியும் :**

◈ ஆங்கிலேயரின் கடற்பயண முற்றுரிமைக்கு எதிராக சுதேசி கப்பல் கம்பெனி நிறுவினார்.

◈ 1906 இல் வ.உ.சி. சுதேசி நீராவிக் கப்பல் கம்பெனியைப் ( **SSNC** ) பதிவு செய்தார்.

◈ வ.உ.சி. **S.S.** கலியா, **S.S.** லாவோ என்னும் இரண்டு நீராவிக் கப்பல்களை வாங்கினார்.

◈ சூரத் மாநாட்டில் பங்கேற்றார். தூத்துக்குடி கடற்கரையில் தினமும் உரையாற்றினார்.

**2) கோரல் நூற்பாலை வேலைநிறுத்தம் :**

◈ 1908 இல் கோரல் மில் தொழிலாளர்கள் பிரச்சனை வ.உ.சி. இன் கவனத்தை ஈர்த்தது.

◈ வ.உ.சி. மற்றும் சுப்பிரமணிய சிவா இருவரும் தொழிலாளர்களிடம் உரையாற்றினர்.

◈ அதில் தூண்டப்பட்ட தொழிலாளர்கள் மார்ச், 1908 இல் வேலைநிறுத்தம் செய்தனர்.

◈ அதை முறியடிக்க தூத்துக்குடி நகரினுள் கூட்டங்கள் நடத்த அரசு தடை விதித்தது.

**3) வ.உ.சி., சுப்ரமணிய சிவா கைதும் சிறைவாசமும் :**

◈ 1907 இல் பிபின் சந்திர பால் விடுதலையானதை சுதேசி தினமாகக் கொண்டாடினர்.

◈ வ.உ.சி., சுப்ரமணிய சிவா, தேச துரோகக் குற்றத்திற்காகக் கைது செய்யப்பட்டனர்.

◈ வ.உ.சி. க்கு ஆயுள் தண்டனை ( 20 ஆண்டுகள்) விதித்து சிறையில் அடைத்தனர்.

◈ வ.உ.சி அரசை எதிர்த்துப் பேசியதற்கு மேலும் ஒரு ஆயுள் தண்டனை விதித்தனர்.

KAVIN GUIDE 2020

# அலகு - 3

# இந்திய விடுதலைப் போரில் முதல் உலகப் போரின் தாக்கம்

## I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

**1. தென்னிந்தியாவில் தன்னாட்சி இயக்கம் யாரால் துவக்கப்பட்டது ?**

அ) திலகர் **ஆ) அன்னிபெசண்ட்** இ) பி.பி. வாடியா ஈ) எச்.எஸ். ஆல்காட்

**2. பின்வருவனவற்றுள் அன்னிபெசண்ட் பற்றிய சரியான கூற்று எது ?**

1. கர்னல் எச்.எஸ். ஆல்காட்டிற்குப் பிறகு பிரம்மஞான சபையின் தலைவராக அன்னிபெசண்ட் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
2. 1914 இல் அவர் காமன்வீல் என்ற வாராந்திரியைத் தொடங்கினார்.
3. 1915 ஆம் ஆண்டு "How India Wrought for Freedom" என்ற தலைப்பிலான புத்தகத்தை பதிப்பித்தார்.

அ) 1 மற்றும் 2 ஆ) 2 மற்றும் 3 இ) 1 மற்றும் 3 **ஈ) 1, 2 மற்றும் 3**

**3. பொருத்தமான விடையைக் கண்டறிக.**

**கூற்று : ஜின்னாவை "இந்து - முஸ்லீம் ஒற்றுமையின் தூதர்" என்று சரோஜினி அம்மையார் அழைத்தார்.**

**காரணம் : லக்னோ ஒப்பந்தத்தின் தலைமைச் சிற்பி ஜின்னா ஆவார்.**

அ) கூற்று சரி; காரணம் கூற்றிற்கான விளக்கமல்ல.

**ஆ) கூற்று சரி; காரணம் கூற்றிற்கான விளக்கம்.**

இ) கூற்று தவறு; காரணம் சரி. ஈ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் தவறு.

**4. பனாரஸ் இந்து பல்கலைக் கழகம் யாரால் நிறுவப்பட்டது?**

அ) மகாத்மா காந்தி **ஆ) மதன்மோகன் மாளவியா** இ) திலகர் ஈ) பி.பி. வாடியா

**5. 1916 ஆம் ஆண்டு லக்னோ மாநாட்டின் முக்கியத்துவம்.**

அ) முஸ்லீம் லீக் எழுச்சி. ஆ) காங்கிரஸ் மற்றும் முஸ்லீம் லீக் தற்காலிக இணைப்பு.

**இ) முஸ்லீம் லீக்கின் தனித்தொகுதி கோரிக்கையை காங்கிரஸ் ஏற்றுக் கொண்டது.**

ஈ) காங்கிரஸ் மற்றும் முஸ்லீம் லீக்கின் கூட்டமர்வில் ஜின்னாவின் எதிர்மறை போக்கு.

**6. பின்வருவனவற்றை கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகள் உதவியுடன் பொருத்துக.**

| | | |
|---|---|---|
| **(அ)** கதார் கட்சி | - | **i.** 1916 |
| **(ஆ)** நியூ இந்தியா | - | **ii.** 1913 |
| **(இ)** தன்னாட்சி இயக்கம் | - | **iii.** 1909 |
| **(ஈ)** மின்டோ-மார்லி சீர்திருத்தம் | - | **iv.** 1915 |

**அ) ii, iv, i, iii** ஆ) iv, i, ii, iii இ) i, iv, iii, ii ஈ) ii, iii, iv, i

KAVIN GUIDE 2020

**7. "Indian Unrest" என்ற புத்தகத்தின் ஆசிரியர்.**

அ) லாலா லஜபதிராய் **ஆ) வேலண்டைன் சிரோல்**

இ) திலகர் ஈ) அன்னிபெசண்ட்

**8. கதார் கட்சி யாரால் நிறுவப்பட்டது ?**

அ) லாலா லஜபதிராய் ஆ) ஏ.சி. மஜும்தார்

**இ) லாலா ஹர்தயாள்** ஈ) சங்கர்லால் பாங்கர்

**9. அகில இந்திய தொழிற்சங்க காங்கிரஸின் முதல் தலைவர் யார் ?**

அ) பி.பி. வாடியா ஆ) ஜவஹர்லால் நேரு

**இ) லாலா லஜபதிராய்** ஈ) சி.ஆர். தாஸ்

## II. குறுகிய விடையளிக்கவும்.

**1. 1903 - 1914 ஆகிய கால கட்டங்களில் தேசிய இயக்கம் வளர்ந்து வருவதைக் கட்டுப்படுத்த ஆங்கில அரசு மேற்கொண்ட அடக்குமுறை நடவடிக்கைகள் என்ன?**

**1903 - 1914 இல் ஆங்கில அரசு மேற்கொண்ட அடக்குமுறை நடவடிக்கைகள் :**

- 1903 - கர்சன் பிரபு குற்ற உளவுத் துறையை (CID) உருவாக்கினார்.
- 1908 - பத்திரிக்கைகள் சட்டம், வெடிபொருட்கள் சட்டம்.
- 1910 - இந்திய பத்திரிக்கைகள் சட்டம்.
- 1911 - தேசதுரோக கூட்டங்கள் தடுப்புச் சட்டம்.
- 1914 - வெளிநாட்டினர் அவசரச் சட்டம்.

**2. கிலாஃபத் இயக்கம் துவங்குவதற்கான பின்னணி என்னவாக இருந்தது?**

**கிலாஃபத் இயக்கம் துவங்குவதற்கான பின்னணி :**

- துருக்கியை பலவீனப்படுத்த செவ்ரெஸ் ஒப்பந்தம் கையெழுத்தானது.
- சிரியாவும், லெபனானும் பிரான்ஸின் கட்டுப்பாட்டில் விடப்பட்டன.
- பாலஸ்தீனமும் ஜோர்டனும் பிரிட்டிஷார் கட்டுப்பாட்டில் விடப்பட்டன.
- கலீபாவின் ஆளுமையை முடிவுக்குக் கொண்டுவர முடிவு செய்தன.

**3. அன்னிபெசண்ட் அம்மையார் வெளியிட்ட புத்தகம் மற்றும் வாராந்திர பத்திரிக்கைகளின் பெயர்களைக் கூறுக.**

**அன்னிபெசண்ட் அம்மையார் வெளியிட்ட புத்தகம் மற்றும் வாராந்திர பத்திரிக்கைகள் :**

- வாராந்திரி - காமன் வீல் (1914).
- தினசரி - நியூ இந்தியா (1915).
- புத்தகம் - **"How India Wrought for Freedom"** (1915).

KAVIN GUIDE 2020

**4. 1915 ஆம் ஆண்டு இந்திய பாதுகாப்புக்கான சட்டம் பற்றி விவரிக்கவும்.**

**1915 ஆம் ஆண்டு இந்திய பாதுகாப்புக்கான சட்டம் :**

- முதல் உலகப்போரின் போது அவசர கிரிமினல் சட்டமாகக் கொண்டு வந்தனர்.
- தேசியவாத மற்றும் புரட்சிகர நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த இயற்றப்பட்டது.
- சந்தேகத்துக்கு இடமானவர்கள் மீது வழக்குத் தொடர இச்சட்டம் அனுமதித்தது.
- இச்சட்டம், இந்தியப் பாதுகாப்பு ஒழுங்குமுறைகள் சட்டம் என்று குறிப்பிடப்பட்டது.

## III. சுருக்கமாக விடையளிக்கவும்.

**1. தன்னாட்சி இயக்கத்தின் இரட்டைக் குறிக்கோள்களை பற்றி விவாதிக்கவும்.**

**தன்னாட்சி இயக்கத்தின் இரட்டைக் குறிக்கோள்கள் :**

- 1916 இல் இந்தியாவில் இரண்டு தன்னாட்சி இயக்கங்கள் ஆரம்பிக்கப்பட்டன.
- அவை இரண்டு நோக்கங்களைக் கொண்டதாக உருவாக்கப்பட்டு இருந்தன.
- பிரிட்டிஷ் ஆட்சியில் இந்தியாவில் தன்னாட்சியை ஏற்படுத்துவது.
- தாய்நாடு பற்றிய பெருமை உணர்வை இந்திய மக்களிடையே ஏற்படுத்துவது.

**2. இந்திய சுதந்திரப் போராட்டத்தின் ஒரு அத்தியாயமாக கதார் இயக்கம் கருதப்படுவது ஏன் ?**

**இந்திய சுதந்திரப் போராட்டத்தின் ஒரு அத்தியாயமாக கதார் இயக்கம் கருதப்படக் காரணங்கள் :**

- கோமகடமரு என்ற கப்பல் இந்தியக் குடியேறிகளுடன் கனடாவில் இருந்து திரும்பியது.
- கப்பல் இந்தியா திரும்பியவுடன் பிரிட்டிஷ் போலிசாருடன் மோதல் ஏற்பட்டது.
- கப்பலில் இருந்த பல பயணிகள் கொல்லப்பட்டனர் அல்லது கைது செய்யப்பட்டனர்.
- இந்த நிகழ்வு இந்திய தேசிய இயக்கத்திற்கு ஆழமான வடுவை ஏற்படுத்தியது.

**3. 1920 மார்ச்சில் நடைபெற்ற பாரிஸ் அமைதி மாநாட்டில் கிலாஃபத் இயக்கத்தின் சார்பாக முன் வைக்கப்பட்ட கோரிக்கைகள் என்ன ?**

**1920 மார்ச்சில் நடைபெற்ற பாரிஸ் அமைதி மாநாட்டில் கிலாஃபத் இயக்கத்தின் சார்பாக முன் வைக்கப்பட்ட கோரிக்கைகள் :**

- துருக்கியின் சுல்தான் கலீபாவாக இடையூறின்றித் தொடர வேண்டும்.
- இசுலாமியப் புனிதத் தலங்கள் சுல்தானின் கட்டுப்பாட்டில் ஒப்படைக்க வேண்டும்.
- சுல்தானிடம் போதுமானப் பகுதிகளை வழங்கி இசுலாமிய மதத்தைப் பாதுகாத்தல்.
- அராபியா, சிரியா, ஈராக், பாலஸ்தீனம் ஆகியன அவரது இறையாண்மையில் விடுதல்.

KAVIN GUIDE 2020

**4. சென்னை தொழிற்சங்கத்தின் தாக்கம் மற்றும் முக்கியத்துவம் என்ன ?**

**சென்னை தொழிற்சங்கத்தின் தாக்கம் மற்றும் முக்கியத்துவம் :**

- ◈ தொழிலாளர்கள் மோசமாக நடத்தப்படுவதை மதராஸ் தொழிற்சங்கம் எதிர்த்தது.
- ◈ மதராஸ் தொழிற்சங்கத்தின் தாக்கம் நாட்டின் இதர பகுதிகளுக்கும் பரவியது.
- ◈ இந்த காலகட்டத்தில் இந்தியாவில் பல தொழிற்சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டன.
- ◈ தொழிற்சங்கம் சார்ந்த கொள்கைகள் போராட்டத்துக்கு ஒரு ஆயுதமாக இருந்தன.

## IV. விரிவான விடையளிக்கவும்.

**1. லக்னோ ஒப்பந்தத்தின் முக்கிய அம்சங்களை முன்னிலைப்படுத்துக.**

**லக்னோ ஒப்பந்தத்தின் முக்கிய அம்சங்கள் :**

- ◈ நிர்வாகம் மற்றும் நிதி விஷயங்களில் மாகாணங்கள் சுதந்திரமாகச் செயல்பட வேண்டும்.
- ◈ மத்திய, மாகாண சட்ட மேலவையில் 4 / 5 உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.
- ◈ மத்திய, மாகாண சட்டப் பேரவையில் 4 / 5 உறுப்பினர்கள் தேர்தல் மூலம் தேர்ந்தெடுத்தல்.
- ◈ நிர்வாக சபையில் 1 / 2 உறுப்பினர்கள் தேர்ந்தெடுத்த இந்தியர்களாக இருக்க வேண்டும்.
- ◈ மாகாணத் தேர்தல்களில் முஸ்லிம்களுக்கு தனித் தொகுதிகள் வழங்க ஒப்புக் கொண்டது.
- ◈ இந்து மற்றும் சீக்கிய சிறுபான்மையினருக்கு சில இடங்கள் வழங்க ஒப்புக் கொண்டனர்.
- ◈ தங்கள் சபைகளின் தீர்மானங்கள்படி மத்திய, மாகாண அரசுகள் செயல்பட வேண்டும்.
- ◈ ஒரு தீர்மானம் ஓராண்டுக்குள் மீண்டும் நிறைவேற்றினால் அது செயல்பாட்டுக்கு வரும்.
- ◈ ஒத்துழையாமை இயக்கத்தின் போது இந்து - முஸ்லிம் ஒற்றுமைக்கு வழியமைத்தது.
- ◈ அரசு அலுவல்களுடன் தொடர்புடைய எவரும் சமநிலை பெற்றிருக்க வேண்டும்.

**2. திலகர் மற்றும் அன்னிபெசண்ட் அம்மையார் ஆகியோரின் கீழ் துவக்கப்பட்ட தன்னாட்சி இயக்கங்களின் செயல்பாடுகளை விளக்குக.**

**பாலகங்காதர திலகரின் தன்னாட்சி இயக்கம் :**

- ◈ 1916 ஏப்ரலில் பெல்காம் மாநாட்டில் திலகரின் தன்னாட்சி இயக்கம் நிறுவப்பட்டது.
- ◈ திலகரின் தன்னாட்சி இயக்கத்துக்கு மொத்தம் ஆறு கிளைகள் ஒதுக்கப்பட்டன.
- ◈ முக்கியக் கிளைகள் - மகாராஷ்டிரா மற்றும் கர்நாடகா, மத்திய மாகாணங்கள், பெரார்.
- ◈ தன்னாட்சி குறித்த கோரிக்கைகளை தமது உரைகள் மூலம் பிரபலப்படுத்தினார்.
- ◈ திலகரின் தன்னாட்சி இயக்கம் மகாராஷ்டிரா மற்றும் கர்நாடகாவில் பிரபலமடைந்தது.
- ◈ 1918 ஆம் ஆண்டு அதன் உறுப்பினர்களின் எண்ணிக்கை 32 ஆயிரமாக அதிகரித்தது.
- ◈ தன்னாட்சி கொள்கைகளை பரப்பியதற்காக 1916 இல் திலகர் கைது செய்யப்பட்டார்.

KAVIN GUIDE 2020

### அன்னி பெசண்ட் அம்மையாரின் சுயாட்சி இயக்கம் :

◈ 1916 செப்டம்பரில் அன்னிபெசண்ட் மதராஸில் தன்னாட்சி இயக்கத்தை தொடங்கினார்.
◈ தன்னாட்சி கருத்துக்களை பரப்புவதற்காக இந்தியா முழுவதும் தீவர பிரச்சாரம் செய்தார்.
◈ முக்கியக் கிளைகள் - கான்பூர், அலகாபாத், பனாரஸ், மதுரா, காலிகட், அகமதுநகர்.
◈ இந்தியாவின் விசுவாசத்திற்கு விலை இந்தியாவின் விடுதலை என்று அறிவித்தார்.
◈ தன்னாட்சி இயக்கம் பிரபலமடைந்ததால் மதராஸ் அரசு அதனை அடக்க நினைத்தது.
◈ 1917 ஜூன் மாதம் அன்னிபெசண்ட் அம்மையார் ஊட்டி சிறையில் அடைக்கப்பட்டார்.
◈ 1917 இல் இந்திய தேசிய காங்கிரசின் கல்கத்தா மாநாட்டிற்கு தலைவராக தேர்வானார்.

## 3. மலபார் மாப்பிள்ளை கிளர்ச்சியின் காரணங்கள் மற்றும் துயர விளைவுகளைப் பற்றி விவாதிக்கவும்.

### மலபார் மாப்பிள்ளை கிளர்ச்சியின் காரணங்கள் :

◈ மாப்பிள்ளை கிளர்ச்சி 1921 இல் ஒத்துழையாமை இயக்கத்தின் ஒரு பகுதியாக நடந்தது.
◈ கிலாபத் இயக்கத்தின் தொடர்ச்சியாக மலபார் முஸ்லிம்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டனர்.
◈ வெளிநாட்டைச் சேர்ந்த நிலப்பிரபுக்களுக்கு எதிரான கிளர்ச்சியாகத் தொடங்கியது.
◈ தங்கள் விவசாயத்தை அழித்த வெளிநாட்டினருக்கு எதிராக வன்முறையில் ஈடுபட்டனர்.
◈ பாதுகாப்புப் படையினர் மசூதியை உடைத்துச் சென்று மூன்று பேரைக் கைது செய்தனர்.

### மலபார் மாப்பிள்ளை கிளர்ச்சியின் துயர விளைவுகள் :

◈ மப்பிள்ளை கிளர்ச்சி இந்துக்களுக்கு எதிராக மாறி இந்துக்கள் பலர் கொல்லப்பட்டனர்.
◈ இந்துக்கள் கட்டாய மதமாற்றம் செய்யப்பட்டனர். பல கோயில்கள் இடிக்கப்பட்டன.
◈ ஒத்துழையாமை இயக்கம் பாதிப்படைந்தது. இந்து - முஸ்லிம் ஒற்றுமை சீர்குலைத்தது.
◈ 1922 ஜனவரியில் அரசு இராணுவத்தின் துணையோடு கிளர்ச்சியை முறியடித்தது.
◈ 97 பேரை கைது செய்தனர். அதில் 40 பேர் ரயில் பெட்டியில் மூச்சடைத்து இறந்தனர்.

KAVIN GUIDE 2020

# அலகு - 4

# காந்தியடிகள் தேசியத் தலைவராக உருவெடுத்து மக்களை ஒன்றிணைத்தல்

## I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

**1. காந்தியடிகளின் அரசியல் குரு யார் ?**

அ) திலகர் **ஆ) கோகலே** இ) W.C. பானர்ஜி ஈ) M.G. ரானடே

**2. தென்னாப்பிரிக்காவில் இருந்து திரும்பிய காந்தியடிகள் தனது வெற்றிகரமான முதலாவது சத்தியாகிரகப் போராட்டத்தைத் தொடங்கிய இடம்.**

அ) கேதா ஆ) தண்டி **இ) சம்பரான்** ஈ) பர்தோலி

**3. சைமன் கமிஷன் காங்கிரஸால் ஏன் புறக்கணிக்கப்பட்டது ?**

அ) சைமன் குழு அறிக்கையில் இந்தியாவிற்கு டொமினியன் அந்தஸ்து வழங்குவது குறித்த பரிந்துரை இல்லை.

ஆ) சிறுபான்மையினருக்கு பாதுகாப்பு அளிக்கவில்லை.

**இ) அக்குழுவில் இந்தியர்கள் இடம்பெறவில்லை.**

ஈ) அது முழுச் சுதந்திரத்திற்கான வாக்குறுதியைக் கொண்டிருக்கவில்லை.

**4. இந்தியாவின் மூவர்ணக் கொடி எப்போது ஏற்றப்பட்டது ?**

**அ) டிசம்பர் 31, 1929** ஆ) மார்ச் 12, 1930

இ) ஜனவரி 26, 1930 ஈ) ஜனவரி 26, 1931

**5. 1923 இல் மோதிலால் நேரு மற்றும் சி.ஆர். தாஸ் -ஆல் தோற்றுவிக்கப்பட்ட கட்சியின் பெயர் என்ன ?**

**அ) சுயராஜ்யக் கட்சி** ஆ) கதார் கட்சி

இ) சுதந்திரா கட்சி ஈ) கம்யூனிஸ்ட் கட்சி

**6. பின்வருவனவற்றைப் பொருத்தி சரியான விடையைத் தேர்வு செய்க.**

**(அ)** நாமசூத்ரா இயக்கம் - **1.** வடமேற்கு இந்தியா

**(ஆ)** ஆதிதர்ம இயக்கம் - **2.** தென்னிந்தியா

**(இ)** சத்யசோதக் இயக்கம் - **3.** கிழக்கிந்தியா

**(ஈ)** திராவிட இயக்கம் - **4.** மேற்கு இந்தியா

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| **அ)** | **3** | **1** | **4** | **2** |
| இ) | 1 | 2 | 3 | 4 |

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| ஆ) | 2 | 1 | 4 | 3 |
| ஈ) | 3 | 4 | 1 | 2 |

KAVIN GUIDE 2020

**7. ஒத்துழையாமை இயக்கத்தின் பல்வேறு நிலைகளை காலவரிசைப்படுத்துக.**

(1) அமிர்தசரஸ் நகரில் பிரிட்டிஷ் படையால் ஆயுதம் ஏந்தாத மக்கள் மீது கொடிய தாக்குதல் நடத்தப்பட்டது.

(2) நீதிமன்ற விசாரணை இன்றி எவரையும் சிறையில் அடைக்க ரௌலட் சட்டம் கொண்டு வரப்பட்டது.

(3) சௌரி சௌரா வன்முறைச் சம்பவம் காந்தியடிகள் ஒத்துழையாமை இயக்கத்தை விலக்கிக் கொள்ள வழிவகுத்தது.

(4) கல்கத்தாவில் நடைபெற்ற சிறப்புக் கூட்டத்தில் பிரிட்டிஷ் அரசாங்கத்துடன் ஒத்துழையாமை என்ற காந்தியடிகளின் முன்மொழிவை ஏற்றுக் கொண்டது.

**அ) 2, 1, 4, 3** ஆ) 1, 3, 2, 4 இ) 2, 4, 1, 3 ஈ) 3, 2, 4 ,1

**8. பின்வரும் எது ஒன்று சரியாகப் பொருந்தவில்லை ?**

**அ) பஞ்சாப் துணை ஆளுநர் - 1. ரெஜினால்டு டையர்**

ஆ) தலித் - பகுஜன் இயக்கம் - 2. டாக்டர். அம்பேத்கர்

இ) சுயமரியாதை இயக்கம் - 3. ஈ.வெ.ரா. பெரியார்

ஈ) சத்தியாகிரக சபை - 4. ரௌலட் சட்டம்

**9. பின்வரும் நிகழ்வுகளை சரியான காலவரிசைப்படி அமைத்து கொடுக்கப்பட்டுள்ள விடைகளிலிருந்து சரியானதைத் தேர்ந்தெடுக்கவும்.**

(i) கேதா சத்தியாகிரகம் (ii) சம்பரான் இயக்கம்

(iii) பிராமணரல்லாதோர் இயக்கம் (iv) வேதாரண்யம் உப்புச் சத்யாகிரகம்

அ) ii, iii, i, iv **ஆ) iii, ii, i, iv** இ) ii, i, iv, iii ஈ) ii, i, iii, iv

**10. பின்வருவனவற்றுள் எது / எவை சரியானவை அல்ல.**

(i) காந்தியடிகள் அகமதாபாத்தில் சபர்மதி ஆசிரமத்தை நிறுவினார்.

(ii) வல்லபாய் படேல் ஒரு வழக்கறிஞர்.

(iii) சைமன் குழுவினை முஸ்லீம் லீக் வரவேற்றது.

(iv) இரண்டாவது வட்டமேஜை மாநாட்டில் காந்தியடிகள் கலந்து கொண்டார்.

அ) i ஆ) i மற்றும் iv இ) ii மற்றும் iii **ஈ) iii மட்டும்**

**11. ஒத்துழையாமை இயக்கம் உள்ளடக்கியவை.**

(அ) பள்ளி மற்றும் கல்லூரிகளை புறக்கணித்தல்.

(ஆ) அரசு வழங்கிய பட்டங்களை திருப்பியளித்தல்.

(இ) உண்ணாவிரதங்கள் கடைப்பிடிப்பதை எதிர்த்தல்.

(ஈ) அரசுக்கு எதிரான சதி வேலைகளில் ஈடுபடுதல்.

**அ) அ மற்றும் ஆ** ஆ) ஆ மற்றும் இ இ) அ மற்றும் ஈ ஈ) இ மற்றும் ஈ

KAVIN GUIDE 2020

**12. பொருத்தமான விடையைக் கண்டறிக.**

**கூற்று : பி. ஆர். அம்பேத்கர் மஹத் சத்யாகிரகத்தைத் தொடங்கினார்.**

**காரணம் : அவர் இந்துக்கள் மற்றும் முஸ்லீம்களை ஒருங்கிணைக்க முயன்றார்.**

அ) கூற்று சரி, காரணம் கூற்றை விளக்குகிறது.

ஆ) கூற்று சரி, காரணம் கூற்றை விளக்கவில்லை.

**இ) கூற்று சரி, காரணம் தவறு.** ஈ) கூற்று தவறு, காரணம் சரி.

**13. பொருத்தமான விடையைக் கண்டறிக.**

**கூற்று : 1919 இல் இந்தியக் கவுன்சில் சட்டம் மற்றும் ரௌலட் சட்டம் நிறைவேற்றப்பட்டது.**

**காரணம் : இது மிதவாத தேசியவாதிகளை அரவணைத்து தீவிர தேசியவாதிகளை தனிமைப்படுத்தும் பிரிட்டிஷாரின் கொள்கையின் ஒரு பகுதியாகும்.**

**அ) கூற்று மற்றும் காரணம் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.**

ஆ) கூற்று மற்றும் காரணம் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.

இ) கூற்று சரி, காரணம் தவறு. ஈ) கூற்று தவறு, காரணம் சரி.

**14. கீழே குறிப்பிட்டுள்ள தலைவர்களில் சுயராஜ்ய கட்சியுடன் தொடர்பில்லாத தலைவர்.**

**அ) இராஜாஜி** ஆ) சித்தரஞ்சன் தாஸ் இ) மோதிலால் நேரு ஈ) சத்யமூர்த்தி

**15. காந்தியடிகளின் தண்டி யாத்திரை பயணம் சென்றடைந்த ஆண்டு.**

**அ) ஏப்ரல் 6, 1930** ஆ) மார்ச் 6, 1930 இ) ஏப்ரல் 4, 1939 ஈ) மார்ச்4, 1930

## II. குறுகிய விடையளிக்கவும்.

**1. இந்தியா வந்த வேல்ஸ் இளவரசர் எவ்வாறு வரவேற்கப்பட்டார் ?**

**இந்தியா வந்த வேல்ஸ் இளவரசர் வரவேற்கப்பட்ட விதம் :**

- 1921 - வேல்ஸ் இளவரசர் மேற்கொண்ட பயணம் பல நகரங்களில் புறக்கணித்தனர்.
- நாடு முழுவதும் தொழிலாளர்களும் விவசாயிகளும் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர்.
- வேல்ஸ் இளவரசரின் வருகையால் ஒத்துழையாமை இயக்கம் மேலும் வலுவடைந்தது.

**2. காந்தியடிகளின் சம்பரான் சத்யாகிரகத்தின் போது உடன் சென்ற உள்ளூர் தலைவர்கள் யாவர் ?**

**காந்தியடிகளின் சம்பரான் சத்யாகிரகத்தின் போது உடன் சென்ற உள்ளூர் தலைவர்கள் :**

- ராஜேந்திர பிரசாத்
- மஜாருல் ஹக்
- ஆச்சார்ய கிருபிளானி
- மஹாதேவ தேசாய்

KAVIN GUIDE 2020

### 3. இந்தியப் பணியாளர் சங்கம் ஏன் தோற்றுவிக்கப்பட்டது?

**இந்தியப் பணியாளர் சங்கம் தோற்றுவிக்கப்படக் காரணம் :**

- இந்தியர்களுக்கு நலப்பணிகளில் பயிற்சி வழங்குவதற்காக 1905 இல் நிறுவப்பட்டது.
- பின்தங்கிய, ஊரக மற்றும் பழங்குடியின மக்களின் மேம்பாட்டுக்காக செயலாற்றுதல்.
- நிவாரணப் பணி, கல்வியறிவூட்டல் மற்றும் இதர சமூகக் கடமைகளில் பங்கெடுத்தல்.

### 4. பகிஷ்கிரித் ஹிதகர்னி சபா குறித்து எழுதுக?

**பகிஷ்கிரித் ஹிதகர்னி சபா :**

- அம்பேத்கர் - பஹிஷ்கிரித் ஹிடாகரினி சபை என்ற அமைப்பை நிறுவினார்.
- தனித்து விடப்பட்டவர்களின் நலனுக்கான அமைப்பு என்று அழைக்கப்பட்டது.
- தீண்டத்தகாதவர்கள் மீது விதிக்கப்பட்ட இடர்பாடுகளைக் களைய பாடுபட்டது.
- தனது கருத்துக்களை எழுத மூக் நாயக் என்ற பத்திரிக்கையை தொடங்கினார்.

### 5. தேசியவாதிகளால் ரௌலட் சட்டம் ஏன் எதிர்க்கப்பட்டது?

**தேசியவாதிகளால் ரௌலட் சட்டம் எதிர்க்கப்படக் காரணம் :**

- காலனிய ஆதிக்க அரசு இயற்றிய அடக்குமுறை சட்டங்களில் இதுவும் ஒன்றாகும்.
- எந்தவித நீதிமன்ற விசாரணையுமின்றி எவரையும் சிறையில் அடைக்கலாம் என்றது.
- 1919 இல் மத்திய சட்டப் பேரவை உறுப்பினர்களின் எதிர்ப்பை மீறி நிறைவேற்றியது.
- காந்தியடிகள் நிறுவிய சத்தியாகிரக சபை, இச்சட்டத்தை மீறுவதென உறுதி ஏற்றது.

### 6. பி.ஆர். அம்பேத்கரால் வழிநடத்தப்பட்ட மஹத் சத்தியாகிரகம் பற்றி அறிவது என்ன?

**பி.ஆர். அம்பேத்கரால் வழிநடத்தப்பட்ட மஹத் சத்தியாகிரகம் :**

- ஊருணிகள் மற்றும் கிணறுகளில் கடைபிடித்த தீண்டாமை கொடுமைகளை எதிர்த்தார்.
- அடிப்படை உரிமைகளை மீட்டுத்தர மஹத் சத்தியாகிரகம் அமைப்பைத் தொடங்கினார்.
- தீண்டாமை கொடுமையால் பாதிக்கப்பட்ட மக்களின் நலனுக்காக அயராது பாடுபட்டார்.

### 7. காந்தி - இர்வின் ஒப்பந்தத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டது எது?

**காந்தி - இர்வின் ஒப்பந்தத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டவை :**

- காந்தி விடுதலையான பிறகு சத்யாகிரகப் பிரச்சாரத்தைக் கைவிட உறுதி ஏற்றார்.
- சிறையில் அடைக்கப்பட்ட இந்தியர்களை விடுதலை செய்ய இர்வின் சம்மதித்தார்.
- 1931 காந்தி - இர்வின் ஒப்பந்தம் சட்டமறுப்பு இயக்கத்தின் முடிவைக் குறிக்கிறது.

KAVIN GUIDE 2020

## III. சுருக்கமாக விடையளிக்கவும்.

### 1. ஜாலியன் வாலாபாக் படுகொலை குறித்து குறிப்பு எழுதுக.

**ஜாலியன் வாலாபாக் படுகொலை :**

- 1919 ஏப்ரல் 13 இல், மிகக் கொடுமையான அரசியல் குற்றங்கள் இழைக்கப்பட்டன.
- ஜாலியன் வாலாபாக் பகுதியில் 2000 பேருக்கும் அதிகமான மக்கள் குழுமியிருந்தனர்.
- மக்களை குறிவைத்து குண்டுகள் தீரும் வரை சுடுமாறு ஜெனரல் டையர் உத்தரவிட்டார்.
- 379 பேர் இறந்ததாக அரசு கூறியது. ஆனால் 1000 க்கும் மேற்பட்டோர் இறந்திருக்கலாம்.

### 2. மாகாணங்களில் இரட்டையாட்சி முறை பற்றி எழுதுக.

**மாகாணங்களில் இரட்டையாட்சி முறை :**

- 1919 இந்திய கவுன்சில் சட்டம் மாகாணங்களில் இரட்டையாட்சி கொண்டு வந்தது.
- மாகாண அரசுகளுக்கு நிர்வாகத்தில் அதிக அளவுப் பொறுப்புகள் வழங்கப்பட்டது.
- சட்டம் ஒழுங்கு, நிதி போன்ற முக்கிய துறைகள் ஆங்கிலேயருக்கு ஒதுக்கப்பட்டது.
- சுகாதாரம், கல்வி, உள்ளாட்சி போன்ற துறைகள் இந்தியர்களுக்கு மாற்றப்பட்டது.

### 3. பூனா ஒப்பந்தத்தின் முக்கியத்துவம் யாது?

**பூனா ஒப்பந்தத்தின் முக்கியத்துவம் :**

- பூனா ஒப்பந்தம் அம்பேத்கர் மற்றும் காந்தியடிகள் இடையே ஏற்பட்ட ஒப்பந்தம் ஆகும்.
- ஒடுக்கப்பட்ட மக்களின் தனித் தொகுதிகள் ஒதுக்கீடு பற்றி உத்தரவாதம் அளித்தது.
- இடஒதுக்கீடு தொகுதிகள் என்ற சட்ட அம்சம் அரசியல் சாசனத்தில் சேர்க்கப்பட்டன.
- சுதந்திர இந்தியாவின் அரசியல் சாசனத்திலும் இடஒதுக்கீடு தொகுதிகள் இடம்பெற்றன.

### 4. பிராமணரல்லாத இயக்க தலைவர்கள் காலனி அரசாங்கத்தை கையாள்வதில் தொடக்க கால தேசியவாதிகள் கடைப்பிடித்த அதே யுக்தியினை கையாண்டனர் - விவரி.

**பிராமணரல்லாத இயக்க தலைவர்கள் காலனி அரசாங்கத்தை கையாள்வதில் தொடக்க கால தேசியவாதிகள் கடைப்பிடித்த அதே யுக்தியினை கையாண்டனர் :**

- காலனிய அரசு மற்றும் கிறிஸ்துவர்கள் தொடங்கிய கல்வி நிலையங்களை ஆதரித்தது.
- மக்கள்தொகை கணக்கெடுப்பு அறிக்கையின்படி தங்களுக்கு முன்னுரிமை கோரியது.
- புதிய சாதி அமைப்புக்களைத் தொடங்கி தங்கள் சமூகத்தின் வளர்ச்சிக்கு உழைத்தது.
- ஆங்கிலேயர்களிடம் மானியம் பெற்று கல்வி மற்றும் வேலைவாய்ப்பு பெற உதவி புரிந்தது.

KAVIN GUIDE 2020

## 5. மாற்றத்தை விரும்புபவர்கள், மாற்றத்தை விரும்பாதவர்கள் - வேறுபடுத்துக.

### மாற்றத்தை விரும்புபவர்கள் :

- ◈ மாற்றம் வேண்டுவோர் - மோதிலால் நேரு, சி.ஆர். தாஸ், சத்தியமூர்த்தி.
- ◈ தீவிர அரசியலில் ஈடுபடவும், சட்டப் பேரவைகளை முடக்கவும் விரும்பினர்.
- ◈ சுயராஜ்யா கட்சியை தொடங்கி தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றனர்.

### மாற்றத்தை விரும்பாதவர்கள் :

- ◈ மாற்றம் விரும்பாதோர் - இராஜாஜி, வல்லபாய் பட்டேல், இராஜேந்திர பிரசாத்.
- ◈ தேர்தல் அரசியல் தேசியவாதிகளின் கவனத்தைத் திசை திருப்பும் என்றனர்.
- ◈ நூல் நூற்பது, தீண்டாமை ஒழிப்பு போன்ற காந்தியப் பணிகளை செய்தனர்.

## 6. பிரதம அமைச்சர் ராம்சே மக்டோனால்டின் வகுப்புவாத அறிக்கையைப் பற்றி எழுதுக.

### பிரதம அமைச்சர் ராம்சே மக்டோனால்டின் வகுப்புவாத அறிக்கை :

- ◈ 1932 ஆகஸ்டில் ராம்சே மக்டோனால்டின் வகுப்புவாத அறிக்கை வெளியிடப்பட்டது.
- ◈ காந்தியடிகள் - அம்பேத்கர் இடையே தனித்தொகுதிகள் குறித்து விவாதம் நடந்தது.
- ◈ பிரிட்டிஷ் பிரதமர் தலையிட்டு முடிவெடுக்க வேண்டும் என்ற கருத்தை ஏற்கவில்லை.
- ◈ இடஒதுக்கீட்டுடன் கூடிய தனித் தொகுதிகளை பிரிட்டிஷ் அரசு ஏற்றுக் கொண்டது.

## 7. மூன்று வட்டமேசை மாநாடுகளின் முடிவின் தோல்விக்கு பிறகு ஏன் காங்கிரஸ் தடை செய்யப்பட்டது?

### மூன்று வட்டமேசை மாநாடுகளின் முடிவின் தோல்விக்கு பிறகு காங்கிரஸ் தடை செய்யப்படக் காரணம் :

- ◈ 1932 இல் சட்டமறுப்பு இயக்கத்தை மீண்டும் கையில் எடுக்க காங்கிரஸ் தீர்மானித்தது.
- ◈ விவசாயிகளும் தொழிலாளர்களும் மற்றும் இடதுசாரிகளும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.
- ◈ ஜவஹர்லால் நேரு, காந்தியடிகள் உட்பட சுமார் ஒரு லட்சம் பேர் கைது செய்யப்பட்டனர்.
- ◈ தேசியவாத பிரசுரங்கள் சட்டத்துக்கு எதிரானது என்று அறிவித்து பறிமுதல் செய்தனர்.

KAVIN GUIDE 2020

## IV. விரிவான விடையளிக்கவும்.

### 1. ஒத்துழையாமை இயக்கத்தை நடைமுறைப்படுத்தும் சூழலையும் அதன் விளைவுகளையும் விவரி.

**ஒத்துழையாமை இயக்கத்தை நடைமுறைப்படுத்தும் சூழல் :**

- கிலாபத் மாநாட்டில், 1920 இல் ஒத்துழையாமை இயக்கத்தை தொடங்க முடிவு செய்தார்.
- கல்வி நிறுவனங்கள், நீதிமன்றங்கள் புறக்கணிப்பு திட்டம் அலகாபாத்தில் முடிவானது.
- அரசுடன் ஒத்துழையாமைக் கடைபிடிப்பதென கல்கத்தாவில் தீர்மானம் இயற்றப்பட்டது.
- அந்நியப் பொருட்களை புறக்கணித்தல், அரசு பட்டங்களை திரும்பித் தருதல் சேர்த்தனர்.
- வரிக்கொடா இயக்கமும், சட்டமறுப்பு இயக்கமும் இதனுடன் இணைக்க முடிவு செய்தனர்.

**ஒத்துழையாமை இயக்கத்தின் விளைவுகள் :**

- உள்ளூர் மக்களால் பல பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் வித்யா பீடங்கள் நிறுவப்பட்டன.
- வழக்கறிஞர்கள், பள்ளி - கல்லூரி மாணவர்கள் அரசு நிறுவனங்களை புறக்கணித்தனர்.
- 1921 இல் வேல்ஸ் இளவரசரின் இந்தியப் பயணம் மக்களால் புறக்கணிக்கப்பட்டது.
- நாடு முழுவதும் விவசாயிகளும் தொழிலாளர்களும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.
- 1922 இல் செளரி செளரா வன்முறைச் சம்பவம் நடைபெற்றதால் பலர் கைதாயினர்.

### 2. ஒத்துழையாமை இயக்கத்தில் இருந்து சட்டமறுப்பு இயக்கம் எவ்வழிகளில் மாறுபட்டு இருந்தது?

**ஒத்துழையாமை இயக்கம் :**

- 1920 இல் காங்கிரஸ் மற்றும் கிலாபத் இயக்கத்தின் ஆதரவோடு தொடங்கப்பட்டது.
- இந்துக்கள் - முஸ்லிம்கள் இடையிலான ஒற்றுமை உணர்வை மேலும் வலுப்படுத்தியது.
- அரசு கல்வி நிறுவனங்கள் மற்றும் நீதிமன்றங்களை நாடு முழுவதும் புறக்கணித்தனர்.
- அந்நியப் பொருட்களை புறக்கணித்தனர். அரசு பட்டங்களைத் திரும்ப ஒப்படைத்தனர்.
- வரிக்கொடா இயக்கமும், சட்டமறுப்பு இயக்கமும் இதனுடன் இணைக்க முடிவு செய்தனர்.
- 1922 இல் செளரி செளரா சம்பவத்துக்கு பின் ஒத்துழையாமை இயக்கம் முடிவுக்கு வந்தது.

**சட்டமறுப்பு இயக்கம் :**

- 1930 இல் சட்டமறுப்பு இயக்கத்தை காந்தியடிகள் முறைப்படித் தொடங்கி வைத்தார்.
- சட்டங்களை மீறுவதும், அரசுக்கு வரிகள் செலுத்தாமல் புறக்கணிப்பதும் நடைபெற்றன.
- அனைத்து பிரிவு மக்களும் பயன்படுத்தும் உப்பு மீதான வாரியை நீக்குமாறு கோரினார்.
- 1930 இல் காந்தியடிகள் தண்டி யாத்திரை மேற்கொண்டு சட்டத்தை மீறி உப்பு எடுத்தார்.
- ஒரு கைபிடி உப்பை அள்ளி உப்புக்கு வரி விதிக்கும் சட்டத்தை தவிடுபொடி ஆக்கினார்.
- அரசின் வன்முறை தாக்குதல்களால் 1934 இல் சட்டமறுப்பு இயக்கம் முடிவுக்கு வந்தது.

KAVIN GUIDE 2020

**3. இந்திய விடுதலைப் போரில் மகாத்மா காந்தியடிகளின் பங்கினை மதிப்பிடுக.**

**இந்திய விடுதலைப் போரில் மகாத்மா காந்தியடிகளின் பங்கு :**

- 1919 இல் ரௌலட் சட்டத்துக்கு எதிராக வேலை நிறுத்தம் நடத்த அழைப்பு விடுத்தார்.
- 1919 இல் கிலாபத் இயக்கத்தை ஆதரித்ததோடு அதன் மாநாடுகளிலும் பங்கேற்றார்.
- 1919 இல் ஜாலிநன் வாலா பாக் படுகொலையை காந்தியடிகள் கடுமையாக சாடினார்.
- 1920 இல் ஒத்துழையாமை இயக்கத்தை இந்து - முஸ்லிம் ஆதரவோடு தொடங்கினார்.
- பிரிட்டிஷ் அரசாங்கம் வழங்கிய பட்டங்களையும் விருதுகளையும் திரும்ப ஒப்படைத்தார்.
- 1922 இல் சௌரி சௌரா சம்பவத்தால் ஒத்துழையாமை இயக்கத்தை திரும்பப் பெற்றார்.
- 1930 இல் சட்டங்களை மீறுவதன் மூலம் சட்டமறுப்பு இயக்கத்தை தொடங்கி வைத்தார்.
- 1930 இல் 375 கி.மீ. தூரம் தண்டி யாத்திரை சென்றார். சட்டத்தை மீறி உப்பு எடுத்தார்.
- 1931 இல் காந்தி - இர்வின் ஒப்பந்தம்படி இந்தியர்களை சிறையில் இருந்து விடுவித்தார்.
- 1931 இல் லண்டனில் 2-வது வட்டமேசை மாநாட்டில் காங்கிரஸ் சார்பாக பங்கேற்றார்.
- வகுப்புவாரி தொகுதி ஒதுக்கீடுகளை எதிர்த்து சாகும்வரை உண்ணாவிரதம் இருந்தார்.
- 1932 இல் பூனா ஒப்பந்தம் அம்பேத்கர் - காந்தியடிகள் இடையே கையெழுத்தானது.

**4. டாக்டர். அம்பேத்காரின் கல்விப்பணி குறித்து, குறிப்பாக ஒடுக்கப்பட்ட மக்களின் சமூக நீதிக்காக அவரின் செயலூக்கத்தை முதன்மைப்படுத்தி விளக்குக.**

**டாக்டர். அம்பேத்காரின் கல்விப்பணியும் ஒடுக்கப்பட்ட மக்களின் சமூக நீதிக்காக அவரின் செயலூக்கமும் :**

- கல்வி மூலமே ஒடுக்கப்பட்ட வகுப்பினர் சமூக அந்தஸ்த்தை அடைய முடியும் என்றார்.
- சமத்துவம் மற்றும் சமூக நீதியை நிலைநாட்டுவதற்கு கல்வி அவசியம் என கருதினார்.
- ஒடுக்கப்பட்ட வகுப்பினருக்கு கல்வி அளிக்க வேண்டுமென கடுமையாக போராடினார்.
- சாதி மற்றும் பாலின வேறுபாடின்றி சமமான கல்வி வாய்ப்புகள் உருவாக்கிட கோரினார்.
- தீண்டாமையை ஒழிக்க அனைத்து சாதியினரும் ஒரே வகுப்பறை அமரவேண்டும் என்றார்.
- ஒடுக்கப்பட்ட வகுப்பினர் உயர்கல்வி பயில கல்வி உதவித்தொகை வழங்கக் கோரினார்.
- சுதந்திரம், சமத்துவம், சகிப்புத் தன்மை ஆகியவற்றை கற்பிக்க வேண்டுமென கூறினார்.
- ஒடுக்கப்பட்ட வகுப்பினருக்கென தனியாக கல்விக் கூடங்கள் தொடங்க ஊக்குவித்தார்.
- சமூக நீதியை பாதுகாக்க கல்வி, வேலைவாய்ப்புகளில் இடஒதுக்கீடு அமல்படுத்தினார்.
- இலவசக் கல்வி, கல்வி உதவித்தொகை, இலவச தங்கும் விடுதிகள் வழங்க பாடுபட்டார்.

KAVIN GUIDE 2020

# அலகு - 5 ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போராட்டங்களில் புரட்சிகர தேசியவாதத்தின் காலம்

## I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

1. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி எந்த ஆண்டு தொடங்கப்பட்டது?

அ) 1920 **ஆ) 1925** இ) 1930 ஈ) 1935

2. கல்பனா தத் எதனுடன் தொடர்புடையவர்?

அ) ஹிந்துஸ்தான் சோசலிஸ்ட் ரிபப்ளிகன் அசோசியேஷன்

ஆ) வங்காள சபை

**இ) இந்திய குடியரசு இராணுவம்**

ஈ) இவற்றில் எதுவுமில்லை

3. பின்வருவனவற்றைப் பொருத்துக.

| | | |
|---|---|---|
| (அ) | கான்பூர் சதி வழக்கு | - 1. அடிப்படை உரிமைகள் |
| (ஆ) | மீரட் சதி வழக்கு | - 2. சூரியா சென் |
| (இ) | சிட்டகாங் ஆயுதக்கிடங்கு கொள்ளை | - 3. 1929 |
| (ஈ) | இந்திய தேசிய காங்கிரசின் கராச்சி மாநாடு | - 4. 1924 |

அ) 1, 2, 3, 4 ஆ) 2, 3, 4, 1 இ) 3, 4, 1, 2 **ஈ) 4, 3, 2, 1**

4. கீழ்க்காண்பவரில் 64 நாட்கள் உண்ணாவிரதத்திற்கு பிறகு சிறையில் உயிரிழந்தவர்.

அ) புலின் தாஸ் ஆ) சச்சின் சன்யால்

**இ) ஜதீந்திரநாத் தாஸ்** ஈ) பிரித்தி வதேதார்

5. பின்வரும் கூற்றுகளில் பொருளாதாரப் பெரும் மந்தம் குறித்துச் சரியானவை.

(i) இது வட அமெரிக்காவில் ஏற்பட்டது.

(ii) வால் தெருவில் ஏற்பட்ட வீழ்ச்சியானது பெரும் மந்தத்தை விரைவுபடுத்தியது.

(iii) பெரும் மந்தம் வசதி படைத்தவர்களை மட்டுமே பாதித்தது.

(iv) விலை வீழ்ச்சி அடைந்ததால் பெரும் மந்தத்தின் போது சிறப்பான வாழ்க்கை முறையை தொழிலாளர்கள்அனுபவித்தனர்.

**அ) i மற்றும் ii** ஆ) i, ii மற்றும் iii இ) i மற்றும் iv ஈ) i, iii மற்றும் iv

6. முதலாவது பருத்தித் தொழிற்சாலை பம்பாயில் தொடங்கப்பட்ட ஆண்டு.

அ) 1852 **ஆ) 1854** இ) 1861 ஈ) 1865

KAVIN GUIDE 2020

**7. கொடுக்கப்பட்ட குறிப்புகளை கொண்டு சரியான கூற்றைத் தேர்ந்தெடுக்கவும்.**

(i) "*Chittagong Armoury Raiders Reminiscences*" எனும் நூல் கல்பனா தத் என்பவரால் எழுதப்பட்டது.

(ii) கல்பனா தத் தாய்நாட்டின் விடுதலைக்காக ஆயுதம் தாங்கி போராடினார்.

(iii) கல்பனா தத் பேரரசருக்கு எதிராகப் போர் தொடுத்தார் எனக் குற்றம் சாட்டப்பட்டார்.

அ) i மட்டும் ஆ) i மற்றும் ii இ) ii மற்றும் iii **ஈ) அனைத்தும்**

**8. முதலாவது பயணிகள் இரயில் 1853 இல் எந்த இடங்களுக்கு இடையே ஓடியது?**

அ) மதராஸ் - அரக்கோணம் ஆ) பம்பாய் - பூனா

**இ) பம்பாய் - தானே** ஈ) கொல்கத்தா - ஹூக்ளி

**9. கல்கத்தாவில் முதலாவது சணல் ஆலை தொடங்கப்பட்ட ஆண்டு ....................**

**அ) 1855** ஆ) 1866 இ) 1877 ஈ) 1888

**10. பின்வருவோரில் கான்பூர் சதி வழக்கில் கைது செய்யப்பட்டவர் யார்?**

அ) எம்.என். ராய் ஆ) பகத் சிங்

**இ) எஸ்.ஏ. டாங்கே** ஈ) ராம் பிரசாத் பிஸ்மில்

**11. கான்பூர் சதி வழக்குக் குறித்த பின்வரும் எந்த கூற்றுகள் சரியானவை?**

(i) சணல் மற்றும் பருத்தி தொழிற்சாலைகளில் தொழிற்சங்கங்கள் தோன்றின.

(ii) இவ்வழக்கில் கம்யூனிஸ்ட்களும் தொழிற்சங்கவாதிகளும் குற்றம் சாட்டப்பட்டனர்.

(iii) இவ்வழக்கு நீதிபதி H.E. ஹோம்ஸ் என்பவரின் முன்பாக விசாரணைக்கு வந்தது.

(iv) விசாரணை மற்றும் சிறைத் தண்டனையானது இந்தியாவில் காங்கிரஸ் நடவடிக்கைகளில் விழிப்புணர்வை ஏற்படுத்தியது.

**அ) i, ii மற்றும் iii** ஆ) i, iii மற்றும் iv இ) ii, iii மற்றும் iv ஈ) i, ii மற்றும் iv

## II. குறுகிய விடையளிக்கவும்.

**1. இந்தியாவில் கம்யூனிஸ்ட் கட்சியை உருவாக்க கிரேட் பிரிட்டனால் அனுப்பப்பட்ட மூன்று ஆங்கில கம்யூனிசவாதிகளின் பெயர்களைக் குறிப்பிடுக.**

**இந்தியாவில் கம்யூனிஸ்ட் கட்சியை உருவாக்க கிரேட் பிரிட்டனால் அனுப்பப்பட்ட மூன்று ஆங்கில கம்யூனிசவாதிகளின் பெயர்கள் :**

- பிலிப் ஸ்ப்ராட், பான் ப்ராட்லி, லெஸ்டர் ஹட்சின்சன் ஆகியோர். ✓
- பிரிட்டானிய கம்யூனிஸ்ட் கட்சியால் அனுப்பி வைக்கப்பட்டனர்.
- இந்தியாவில் கம்யூனிஸ்ட் கட்சியை உருவாக்க அனுப்பி வைத்தனர்.

KAVIN GUIDE 2020

**2. மீரட் சதி வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட குற்றவாளிகளுக்கு ஆதரவாக வாதாடிய வழக்கறிஞரை அடையாளப்படுத்துக.**

**மீரட் சதி வழக்கில் குற்றவாளிகளுக்கு ஆதரவாக வாதாடிய வழக்கறிஞர்கள் :**

- புகழ் பெற்ற வழக்கறிஞர்களான கே.எஃப். நாரிமன் மற்றும் எம்.சி. சக்லா. ✓
- இருவரும் மீரட் சதி வழக்கில் குற்றவாளிகளுக்கு ஆதரவாக வாதாடினர்.

**3. புகழ்பெற்ற கோரக்பூர் நீதிபதியான H.E. ஹோம்ஸ் பற்றி நீவிர் அறிவது யாது?**

**புகழ்பெற்ற கோரக்பூர் நீதிபதியான H.E. ஹோம்ஸ் பற்றி அறிவன :**

- H.E. ஹோம்ஸ் கோரக்பூர் அமர்வு நீதிபதியாக பணியாற்றி பிரசித்தி பெற்றவர்.
- சௌரி சௌரா வழக்கில் 172 விவசாயிகளுக்கு மரண தண்டனை விதித்தார்.
- கான்பூர் சதி வழக்கு இவரது முன்னிலையில் நீதி விசாரணைக்கு வந்தது.

**4. இரண்டாவது லாகூர் சதி என்றறியப்படும் நிகழ்வு யாது?**

**இரண்டாவது லாகூர் சதி என்றறியப்படும் நிகழ்வு :**

- பிரிட்டிஷ் காவல்துறை அதிகாரி சாண்டர்ஸ் கொலை வழக்கே இரண்டாவது லாகூர் சதி வழக்கு எனப்படுகிறது.
- இந்த வழக்கில் ராஜகுரு, சுகதேவ், ஜதீந்திரநாத் தாஸ், பகத்சிங் உட்பட மேலும் 21 பேர் கைது செய்யப்பட்டனர்.

**5. இந்தியாவின் நவீன தொழிற்சாலையின் தந்தை என ஜே.என். டாடா அழைக்கப்படக் காரணம் என்ன?**

**இந்தியாவின் நவீன தொழிற்சாலையின் தந்தை என ஜே.என். டாடா அழைக்கப்படக் காரணம் :**

- ஜே.என். டாடா இந்தியாவின் முதல் வெற்றிகரமான தொழிலதிபர்.
- 1868 இல் நிறுவிய வர்த்தக நிறுவனம் டாடா குழுமமாக வளர்ச்சி பெற்றது.
- பம்பாயில் "சுதேசி" என்ற பெயரில் ஒரு நிறுவனத்தை உருவாக்கினார்.

## III. சுருக்கமாக விடையளிக்கவும்.

**1. சிட்டகாங் ஆயுதப் படைத் தாக்குதலை நடத்த சூரியா சென் எவ்வாறு திட்டமிட்டார்?**

**சிட்டகாங் ஆயுதப் படைத் தாக்குதலை நடத்த சூரியா சென் திட்டமிட்ட வழிமுறைகள் :**

- சூரியா சென் சிட்டகாங்கைக் கைப்பற்ற கொரில்லா தாக்குதல் நடத்த திட்டமிட்டார்.
- கொரில்லா தாக்குதல் என்பது மறைந்திருந்து தாக்குதல் நடத்தும் போர் முறையாகும்.
- 1930 - ஏப்ரல் 18 இரவில் சிட்டகாங் படைத்தளம் மீது தாக்குதல் நடத்தி தகர்த்தனர்.
- சிட்டகாங்கை தனிமைப்படுத்த ரயில்வே, தகவல்தொடர்பு ஆகியவற்றை துண்டித்தார்.

KAVIN GUIDE 2020

**2. டாடா இரும்பு மற்றும் எஃகு நிறுவனம் (TISCO) பற்றி குறிப்பு எழுதுக.**

**டாடா இரும்பு மற்றும் எஃகு நிறுவனம் (TISCO) :**

- தோரப்ஜி டாடா அமெரிக்கா சென்று இரண்டு ஆண்டுகள் பயிற்சியில் ஈடுபட்டார்.
- அமெரிக்கன் இரும்பு தொழிலகங்களில் பல நுணுக்கங்களைக் கற்றுத் தேர்ந்தார்.
- தோரப்ஜி டாடா 1907 இல் டாடா இரும்பு மற்றும் எஃகு நிறுவனத்தை நிறுவினார்.
- அவர் தனது தந்தை ஜே.என். டாடாவின் நீண்ட கால கனவை நனவாக்கினார்.

**3. தென்னிந்தியாவில் தொழிற்சங்கங்களின் வளர்ச்சிக்காகச் சிங்காரவேலர் ஆற்றிய பங்களிப்புக் குறித்து எழுதுக.**

**தென்னிந்தியாவில் தொழிற்சங்கங்களின் வளர்ச்சிக்காகச் சிங்காரவேலர் ஆற்றிய பங்களிப்புகள் :**

- திரு.வி.க. வுடன் இணைந்து தென்னிந்தியாவில் பல தொழிற்சங்கங்களை நிறுவினார்.
- 1923 இல் நாட்டில் முதன்முறையாக மே முதல் நாளை மே தினமாக கொண்டாடினார்.
- 1928 இல் திருச்சியில் தென்னிந்திய ரயில்வே வேலைநிறுத்தத்தை ஏற்பாடு செய்தார்.
- திருச்சி பொன்மலையில் ரயில்வே வேலைநிறுத்தம் நடத்தியதற்கு தண்டனை பெற்றார்.

## IV. விரிவான விடையளிக்கவும்.

**1. பகத் சிங்கின் புரட்சிகர தேசியவாதம் மற்றும் புரட்சிகர நடவடிக்கைகள் எவ்வாறு அவரை தூக்கு மேடைக்கு இட்டுச் சென்றது?**

**பகத் சிங்கின் புரட்சிகர தேசியவாதம் மற்றும் புரட்சிகர நடவடிக்கைகள் அவரை தூக்கு மேடைக்கு இட்டுச் சென்றது :**

- பகத் சிங் இளமைக் காலம் முதலே இந்திய சுதந்திரப் போராட்டத்தில் பங்கேற்றார்.
- ஆரம்பத்தில் நவ்ஜவான் பாரத் சபா அமைப்பில் தன்னை இணைத்துக் கொண்டார்.
- பின்னர் ஹிந்துஸ்தான் ரிபப்ளிகன் அசோசியேஷன் என்ற அமைப்பில் இணைந்தார்.
- ஹிந்துஸ்தான் சோசலிஸ்ட் ரிபப்ளிகன் அசோசியேஷன் என்று பெயரை மாற்றினார்.
- ரஷ்யப் புரட்சி மற்றும் சோஷலிச சித்தாந்தங்களால் பகத் சிங் பெரிதும் கவரப்பட்டார்.
- புரட்சி என்பது மனித குலத்தின் பிரிக்க முடியாத உரிமை என்று பகத் சிங் கருதினார்.
- 1929 ஏப்ரல் 8 இல் மத்திய சட்டமன்றத்திற்குள் குண்டு வீசித் தாக்குதல் நடத்தினார்.
- பிரிட்டிஷ் காவல்துறை அதிகாரி சாண்டர்ஸ் கொலை வழக்கில் கைது செய்யப்பட்டார்.
- 1930 அக்டோபர் 7 அன்று பகத் சிங்கிற்கு மரண தண்டனை தீர்ப்பு வழங்கப்பட்டது.
- லாகூர் சிறைச்சாலையில் 1931 மார்ச் 23 அன்று அதிகாலையில் தூக்கிலிடப்பட்டார்.

KAVIN GUIDE 2020

**2. 1919 - 1939 ஆம் ஆண்டுகளுக்கு இடையில் காலனி ஆதிக்க இந்தியாவில் ஏற்பட்ட தொழில் வளர்ச்சியினைப் பற்றி எழுதுக.**

**1919 - 1939 ஆம் ஆண்டுகளுக்கு இடையில் காலனி ஆதிக்க இந்தியாவில் ஏற்பட்ட தொழில் வளர்ச்சி :**

- இந்தியத் தொழில்களின் வளர்ச்சி உலக சராசரியை விடவும் சிறப்பாக இருந்தது.
- 1923 - 24 க்குப் பின் நெசவுத் தொழில் மிகவும் சிறப்பாக செயல்பட ஆரம்பித்தது.
- தறிகள் மற்றும் சுழல் அச்சுக்களின் எண்ணிக்கை கணிசமான அளவு உயர்ந்தன.
- 1929 - 30 களில் வெளியில் இருந்து பருத்தி பொருட்களின் நுகர்வு 44 % ஆகும்.
- 1933 - 34 களில் பருத்திப் பொருட்களின் இறக்குமதி 20.5 சதவீதமாக குறைந்தது.
- சர்க்கரை உற்பத்தி, சிமெண்ட் உற்பத்தி ஆகிய இரண்டும் நன்கு வளர்ச்சி பெற்றன.
- போர்களுக்கு இடைப்பட்ட ஆண்டுகளில் கப்பல் தொழிலும் வளர்ச்சியைக் கண்டது.
- 1919 ஆம் ஆண்டு சிந்தியா நீராவிக் கப்பல் கம்பெனி லிமிடெட் நிறுவப்பட்டது.
- 1939 இல் அது பிரிட்டிஷாரின் பம்பாய் நீராவிக் கப்பல் நிறுவனத்தை வாங்கியது.
- இயந்திர உற்பத்தி, விமானம், ரயில் பெட்டி, ரயில் எஞ்சின் உற்பத்தி விரிவடைந்தது.

**3. பொருளாதாரப் பெரும் மந்தம் ஏற்பட்டபோது சமூக, பொருளாதார மற்றும் அரசியல் லட்சியங்கள் வெளிப்படுத்துவதில் இந்திய தேசிய காங்கிரசின் கராச்சி மாநாட்டின் முக்கியத்துவத்தை ஆய்வு செய்க.**

**பொருளாதாரப் பெரும் மந்தம் ஏற்பட்டபோது சமூக, பொருளாதார மற்றும் அரசியல் லட்சியங்கள் வெளிப்படுத்துவதில் இந்திய தேசிய காங்கிரசின் கராச்சி மாநாட்டின் முக்கியத்துவம் :**

- மார்ச் 1931 இல் காங்கிரசின் கராச்சி அமர்வு வல்லபாய் படேல் தலைமையில் நடந்தது.
- அடிப்படை உரிமைகள் மற்றும் கடமைகள் குறித்து ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
- சுதந்திர இந்தியாவின் பொருளாதார கொள்கை பற்றி தெளிவான பார்வையை தந்தது.
- அதுவே சுதந்திர இந்தியாவிற்கான காங்கிரசின் கொள்கை அறிவிப்பு விளக்கமானது.
- அரசியல் சுதந்திரம், பொருளாதாரச் சுதந்திரம் இரண்டையும் பிரிக்க முடியாது என்றது.
- கொடூர சட்டங்கள், அடக்குமுறைகள் கையாண்டு மக்களின் சுதந்திரத்தை நசுக்கியது.
- உரிமைகள் பட்டியலில் காந்திய கொள்கைகள், நேருவின் சோசலிச பார்வை இருந்தன.
- சாதி ஒழிப்பு, தீண்டாமை ஒழிப்பு, சமூக சமத்துவம் ஆகியவற்றை உருவாக்க முயன்றது.
- அடிப்படை உரிமைகள் - இந்திய அரசமைப்பின் பகுதி III இல் இடம்பெற்று உள்ளன.
- அவற்றில் சில பகுதி IV இல் அரசு வழிகாட்டு நெறிமுறைகளில் இடம்பெற்று உள்ளன.

KAVIN GUIDE 2020

# அலகு - 6 தேசிய அரசியலில் வகுப்புவாதம்

## I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

**1. முகலாயர் காலத்தில் அலுவலக மற்றும் நீதிமன்ற மொழியாக விளங்கியது எது?**

அ) உருது ஆ) இந்தி இ) மராத்தி **ஈ) பாரசீகம்**

**2. லண்டன் பிரிவிக் கவுன்சிலில் இடம்பெற்ற முதல் இந்தியர் ........................**

அ) ரஹமத்துல்லா சயானி ஆ) சர் சையது அகமது கான்

**இ) சையது அமீர் அலி** ஈ) பஃருதீன் தியாப்ஜி

**3. பொருத்தமான விடையைக் கண்டறிக.**

**கூற்று :** 1870 இல் வங்காள அரசாங்க ஆணை இஸ்லாமிய தொழில் வல்லுநர் குழுக்கள் இடையே ஐயங்களை ஏற்படுத்தியது.

**காரணம் :** அவ்வாணை உருது மொழி பாரசீக - அரபி எழுத்து முறைக்குப் பதிலாக இந்தியைக் கொண்டு வந்தது.

அ) கூற்று சரி; ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.

**ஆ) கூற்று சரி; காரணம் கூற்றை விளக்குகிறது.**

இ) கூற்று தவறு; காரணம் சரி. ஈ) கூற்று, காரணம் இரண்டும் தவறு.

**4. இரு நாடு கொள்கையை முதன்முதலில் கொண்டு வந்தவர் ...........................**

அ) இராஜாஜி ஆ) ராம்சே மெக்டொனால்டு

இ) முகமது இக்பால் **ஈ) சர் வாசிர் ஹசன்**

**5. 1937 இல் நடைபெற்ற தேர்தலில் காங்கிரஸ் வெற்றி பெற்றது.**

அ) 12 மாகாணங்கள் **ஆ) 7 மாகாணங்கள்**

இ) 5 மாகாணங்கள் ஈ) 8 மாகாணங்கள்

**6. காங்கிரஸ் ஆட்சி முடிவுக்கு வந்த நாளினை முஸ்லிம் லீக் மீட்பு நாளாக கொண்டாடியது.**

அ) 22 டிசம்பர், 1940 ஆ) 5 பிப்ரவரி, 1939

இ) 23 மார்ச், 1937 **ஈ) 22 டிசம்பர், 1939**

**7. பின்வருவனவற்றைப் பொருத்தி சரியான விடையைத் தேர்வு செய்க.**

| பட்டியல் I | பட்டியல் II |
|---|---|
| (அ) அன்னிபெசண்ட் | - 1. அலிகார் இயக்கம் |
| (ஆ) சையது அகமது கான் | - 2. தயானந்த சரஸ்வதி |
| (இ) கிலாபத் இயக்கம் | - 3. பிரம்மஞான சபை |
| (ஈ) சுத்தி இயக்கம் | - 4. அலி சகோதரர்கள் |

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| **அ)** | **3** | **1** | **4** | **2** |
| ஆ) | 1 | 2 | 3 | 4 |
| இ) | 4 | 3 | 2 | 1 |
| ஈ) | 2 | 3 | 4 | 1 |

KAVIN GUIDE 2020

**8. பின்வரும் கூற்றுகளில் இருந்து சரியானவற்றைத் தேர்வு செய்க.**

**(i) அலிகார் இயக்கத்தைத் தோற்றுவித்த சர் சையது அகமது கான் தொடக்கத்தில் காங்கிரசை ஆதரித்தார்.**

**(ii) 1909 இல் தோற்றுவிக்கப்பட்ட பஞ்சாப் இந்து சபையானது இந்துமத வகுப்புவாத அரசியலுக்கு அடித்தளமிட்டது.**

அ) கூற்று (i) மற்றும் (ii) சரி    ஆ) கூற்று (i) சரி (ii) தவறு

**இ) கூற்று (i) தவறு (ii) சரி**    ஈ) கூற்று (i) மற்றும் (ii) தவறு

**9. எப்போது முஸ்லிம் லீக் நேரடி நடவடிக்கை நாளை அனுசரித்தது?**

அ) 25 டிசம்பர், 1942    **ஆ) 16 ஆகஸ்ட், 1946**

இ) 21 மார்ச், 1937    ஈ) 22 டிசம்பர், 1939

**10. வேவல் பிரபுவிற்குப் பின்னர் பதவியேற்றவர்.**

அ) லின்லித்கோ    ஆ) பெதிக் லாரன்ஸ்

**இ) மௌண்ட்பேட்டன**    ஈ) செம்ஸ்ஃபோர்டு

**11. பொருத்தமான விடையைக் கண்டறிக.**

**கூற்று : பிரிட்டிஷ் அரசாங்கம் வகுப்புவாதத்தை வளர்க்கவும் பரப்பவும் பின்பற்றியது தனித்தொகுதிக் கொள்கையாகும்**

**காரணம் : மக்கள் இரண்டு தனித்தொகுதிகளாக பிரிக்கப்பட்டதால் வகுப்புவாத அடிப்படையிலேயே வாக்களித்தனர்.**

அ) கூற்று சரி; ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.

ஆ) கூற்று சரி; காரணம் தவறு.

இ) கூற்று மற்றும் காரணம் தவறு.

**ஈ) கூற்று சரி, காரணம் கூற்றை விளக்குகிறது.**

**12. பின்வருவனவற்றைப் பொருத்தி சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.**

| | | |
|---|---|---|
| **(அ)** இந்துமத மறுமலர்ச்சி | - | **1. M.S.** கோல்வாக்கர் |
| **(ஆ)** கலீஃபா பதவி ஒழிப்பு | - | **2.** ஆரிய சமாஜம் |
| **(இ)** லாலா லஜபதி ராய் | - | **3.** 1924 |
| **(ஈ)** ராஷ்டிரிய சுயசேவா சங்கம் | - | **4.** இந்து - முஸ்லிம் மாகாணங்களாக பஞ்சாப் பிரித்தல் |

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ) | 2 | 4 | 3 | 1 |
| ஆ) | 3 | 4 | 1 | 2 |
| இ) | 1 | 3 | 2 | 4 |
| **ஈ)** | **2** | **3** | **4** | **1** |

KAVIN GUIDE 2020

## II. குறுகிய விடையளிக்கவும்.

**1. சர் சையது அகமது கான் பிரிட்டிஷ் அரசினை ஏன் ஆதரித்தார்?**

**சர் சையது அகமது கான் பிரிட்டிஷ் அரசினை ஆதரிக்கக் காரணம் :**

- இந்துக்கள் ஆளும் நாட்டில், முஸ்லிம்களுக்கு உதவிகள் கிடைக்காது என நினைத்தார்.
- பிரதிநிதித்துவ அமைப்புகள் மற்றும் அரசுப் பணிக்கான போட்டித் தேர்வுகள் அறிமுகம்.
- அரசுடன் இணக்கமாக இருந்து முஸ்லிம்களுக்கு பெரும்பங்கு பெற்றுத்தா முயன்றார்.

**2. தனித் தொகுதி முறையினை பற்றி எழுதுக.**

**தனித் தொகுதி முறை :**

- தனித் தொகுதி அல்லது வகுப்புவாரித் தொகுதி என்று அழைக்கப்பட்டது.
- முஸ்லிம் வேட்பாளருக்கு முஸ்லிம்கள் மட்டுமே வாக்களிக்க முடியும்.
- 1909 மிண்டோ-மார்லி சட்டம், முஸ்லிம்களுக்கு தனித் தொகுதி வழங்கியது.

**3. ஆகாகான் தலைமையிலான முஸ்லிம் லீக் முன்வைத்த கோரிக்கைகள் என்ன?**

**ஆகாகான் தலைமையிலான முஸ்லிம் லீக் முன்வைத்த கோரிக்கைகள் :**

- அரசுப் பணிகளில் முஸ்லிம்களின் சதவீதத்தை உயர்த்துதல்.
- உயர் நீதிமன்றங்களில் முஸ்லிம் நீதிபதிகளை நியமித்தல்.
- அரச பிரதிநிதியின் ஆலோசனைக் குழுவில் உறுப்பினராதல்.

**4. 1923 இல் வாரணாசியில் நடைபெற்ற ஆறாவது இந்து மகாசபை மாநாட்டைப் பற்றி குறிப்பு எழுதுக.**

**1923 இல் வாரணாசியில் நடைபெற்ற ஆறாவது இந்து மகாசபை மாநாடு :**

- ஆறாவது இந்து மகாசபை மாநாட்டில் 968 பேர் கலந்து கொண்டனர்.
- 56.7 சதவீதம் பேர் ஐக்கிய மாகாணத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தனர்.
- சென்னை, பம்பாய், வங்காளம் ஆகியன 6.6 சதவீதம் பேரை அனுப்பியது.

## III. சுருக்கமாக விடையளிக்கவும்.

**1. 1921 இல் நடைபெற்ற மலபார் கலகத்தைப் பற்றிய காந்தியடிகளின் கருத்து என்ன?**

**1921 இல் நடைபெற்ற மலபார் கலகத்தைப் பற்றிய காந்தியடிகளின் கருத்து :**

- 1921 இல் மலபார் பகுதியில் முஸ்லிம் விவசாயிகள் கலகத்தில் ஈடுபட்டனர்.
- ஆங்கிலேயர்கள் மற்றும் இந்து நிலப்பிரபுக்களுக்கு எதிராக களம் இறங்கியது.
- காந்தியடிகள் மலபார் கலகத்தை இந்து - முஸ்லிம் மோதலாகவே மதிப்பிட்டார்.
- மலபார் கலகத்துக்கு முஸ்லிம்கள் பொது மன்னிப்பு கேட்க வேண்டும் என்றார்.

KAVIN GUIDE 2020

**2. இஸ்லாமியர்களுக்காக மத்தியில் முதலில் அமைக்கப்பட்ட அரசியல் கட்சியின் நோக்கங்களை பற்றி எழுதுக.**

**இஸ்லாமியர்களுக்காக மத்தியில் முதலில் அமைக்கப்பட்ட அரசியல் கட்சியின் நோக்கங்கள் :**

- இந்திய முஸ்லிம்கள் பிரிட்டிஷ் அரசிடம் உண்மையுடனும், நன்றியுடனும் இருத்தல்.
- முஸ்லிம் லீக் அமைப்பின் மீது அரசுக்கு எழும் தவறான கருத்துக்களை நீக்குதல்.
- இந்திய முஸ்லிம்களின் விருப்பங்கள் மற்றும் அரசியல் உரிமைகளை பாதுகாத்தல்.
- இந்திய முஸ்லிம்கள் மற்ற இனத்தவரிடம் பகைமை பாராட்டுவதைத் தடுத்தல்.

**3. 1909 ஆம் ஆண்டின் மின்டோ-மார்லி சீர்த்திருத்தங்களின் முக்கியத்துவத்தை கூறுக.**

**1909 ஆம் ஆண்டின் மின்டோ-மார்லி சீர்த்திருத்தங்களின் முக்கியத்துவம் :**

- முஸ்லிம்களுக்கு தனித் தொகுதி அல்லது வகுப்புவாரித் தொகுதி ஒதுக்கியது.
- அதன்படி முஸ்லிம்கள் மட்டுமே முஸ்லிம் வேட்பாளருக்கு வாக்களிக்க முடியும்.
- மத்திய சட்டமன்றத்தில் இருந்த 27 இடங்களில் 8 முஸ்லிம்களுக்கு வழங்கியது.
- மாகாணங்களில் மதராஸ் - 4, பம்பாய் - 4, வங்காளம் - 5 இடங்களை ஒதுக்கியது.

**5. 1927 ஆம் ஆண்டு டெல்லியில் நடைபெற்ற முஸ்லிம் லீக் மாநாட்டின் முன்மொழிவுகள் யாவை?**

**1927 ஆம் ஆண்டு டெல்லியில் நடைபெற்ற முஸ்லிம் லீக் மாநாட்டின் முன்மொழிவுகள் :**

- பம்பாயில் இருந்து சிந்து பகுதியைத் தனியாகப் பிரித்தெடுப்பது.
- பலுச்சிஸ்தானையும் அதன் எல்லைகளையும் சீர்திருத்துவது.
- மத்திய சட்டமன்றத்தில் முஸ்லிம்களுக்கு 33 விழுக்காடுகள் இடஒதுக்கீடு.
- பஞ்சாபிலும் வங்காளத்திலும் மக்கள்தொகை அடிப்படையில் பிரதிநிதித்துவம்.

## IV. விரிவான விடையளிக்கவும்.

**1. பிரிட்டிஷ் இந்தியாவில் வகுப்புவாதத்தின் தோற்றம் மற்றும் வளர்ச்சி குறித்து ஆய்வு செய்க.**

**பிரிட்டிஷ் இந்தியாவில் வகுப்புவாதத்தின் தோற்றம் மற்றும் வளர்ச்சி :**

**1. இந்துமத மறுமலர்ச்சி :**

- தேசியவாதத்தை இந்துமத அடித்தளத்தில் மட்டுமே உருவாக்க முடியும் என நம்பினர்.
- ஆரிய சமாஜத்தின் மூலம் அரசியலில் இந்துமத மறுமலர்ச்சிக்கான குரல் ஒலித்தது.

**2. முஸ்லிம் உணர்வின் எழுச்சி :**

- இஸ்லாம் அலிகார் இயக்கத்தின் வழியாகத் தன்னை வெளிப்படுத்திக் கொண்டது.
- வாஹாபி இயக்கமானது இந்து - முஸ்லிம் உறவில் மேலும் விரிசலை ஏற்படுத்தியது.

KAVIN GUIDE 2020

**3. பிரிட்டிஷாரின் பிரித்தாளும் கொள்கை :**

◈ கூட்டு இந்திய அடையாளம் உருவாவதைத் தடுப்பதே பிரிட்டிஷாரின் நோக்கம் ஆகும்.

◈ பிரிட்டிஷ் அரசு வகுப்புவாத அரசியலுக்கு சட்டபூர்வ அங்கீகாரத்தையும் வழங்கியது.

**4. காங்கிரஸ் நடவடிக்கைகள் :**

◈ ஆரிய சமாஜம் போன்ற இந்து அமைப்புகளில் நிறைய காங்கிரஸ்காரர்கள் பங்கேற்றனர்.

◈ காங்கிரஸ் தனது மூன்றாவது கூட்டத்தில் பசுவதை குற்றம் என தீர்மானம் இறற்றியது.

**5. சர் சையது அகமது கானின் பங்கு :**

◈ இந்துக்கள் ஆளும் நாட்டில், முஸ்லிம்களுக்கு உதவிகள் கிடைக்காது என நினைத்தார்.

◈ காங்கிரஸ் இந்துக்களை மட்டுமே பிரதிநிதித்துவப்படுத்தும் அமைப்பு என வாதிட்டார்.

**6. சர் சையது அகமது கானின் பங்கு :**

◈ 1880 க்கு பிறகு உள்ளாட்சி அமைப்புகள் வகுப்புவாத அரசியல் வளர வழிவகுத்தன.

◈ நகராட்சி சபையில் இந்து - முஸ்லிம் உறுப்பினர்கள் தனித்தனி வரிசையில் அமர்ந்தனர்.

**7. காங்கிரசின் பலவீனக் கொள்கை :**

◈ சுதேசி இயக்கத்தை ஆதரித்த முஸ்லிம்கள் காங்கிரஸின் தரகர்கள் என கண்டித்தனர்.

◈ இத்தகைய வாதங்களை மறுத்து எதிர்வினை ஆற்றாமல் காங்கிரஸ் மௌனம் காத்தது.

**8. காங்கிரசில் இந்துமத ஆதிக்கம் :**

◈ சமய அடையாளங்கள், திருவிழாக்கள் மூலம் காலனித்துவ எதிர்ப்பு உணர்வை ஊட்டினர்.

◈ கணபதி விழா மூலம் இந்துக்களை திரட்ட திலகர் பல முயற்சிகளை மேற்கொண்டார்.

**2. ஆங்கிலேயர்களின் பிரித்தாளும் கொள்கை இந்திய தேசியத்தில் ஏற்படுத்திய தாக்கம் என்ன?**

**ஆங்கிலேயர்களின் பிரித்தாளும் கொள்கை இந்திய தேசியத்தில் ஏற்படுத்திய தாக்கம் :**

◈ கூட்டு இந்திய அடையாளம் உருவாவதைத் தடுப்பதே பிரிட்டிஷாரின் நோக்கமாகும்.

◈ இந்தியர்களின் ஒருங்கிணைப்பு முயற்சிகளை பிரிட்டிஷார் முறியடிக்கத் தொடங்கினர்.

◈ பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் இந்தியாவில் பிரித்தாளும் கொள்கையைக் கையாண்டது.

◈ "பிரித்தாளுதல் என்பது நமதாக வேண்டும்" என்று எல்பின்ஸ்டோன் எழுதி உள்ளார்.

◈ பிரிட்டிஷ் அரசு வகுப்புவாத அரசியலுக்கு சட்டபூர்வமான அங்கீகாரத்தை அளித்தது.

◈ அனைத்து கட்சிகளும் குறுகிய வகுப்புவாத அரசியல் அணுகுமுறையைப் பின்பற்றின.

◈ வடஇந்தியாவில் இந்துக்கள் மற்றும் முஸ்லிம்கள் இடையேயான பகைமை வளர்ந்தது.

◈ 19 ஆம் நூற்றாண்டின் இறுதியில் பல்வேறு இந்து - முஸ்லிம் கலவரங்கள் வெடித்தன.

◈ 1882 ஜூலையில் தென்னிந்தியாவின் சேலத்தில் ஒரு பெருங்கலகம் நடைபெற்றது.

◈ இந்து தேசியம், இஸ்லாம் தேசியம் என்ற கருத்து பிரிவினைக்கு இட்டுச் சென்றது.

◈ இந்து - முஸ்லிம் ஒற்றுமை சீர்குலைந்ததால் காங்கிரஸ் தனது வலிமையை இழந்தது.

KAVIN GUIDE 2020

**3. இந்து தேசியம், இஸ்லாமிய தேசியம் மற்றும் இந்திய தேசியம் ஆகியவை இந்தியப் பிரிவினைக்கு சமபங்காற்றியது எவ்வாறு?**

**இந்து தேசியம், இஸ்லாமிய தேசியம் மற்றும் இந்திய தேசியம் ஆகியவை இந்தியப் பிரிவினைக்கு சமபங்காற்றியது :**

**இந்து தேசியம் :**

- இந்து ராஷ்டிரா எனும் கோட்பாட்டை மேலும் விரிவாக்கம் செய்ய முயற்சி செய்தனர்.
- இந்துஸ்தானில் உள்ள மக்கள் இந்து பண்பாடு, மொழியை ஏற்றுக் கொள்ள கூறியது.
- இந்துக்கள் அல்லாதவர்கள் அந்நியர்களாக இருப்பதை நிறுத்திக் கொள்ள கூறியது.
- இந்து தேசத்திற்குக் கீழ்ப்படிவதோடு உரிமை கோராதவர்களாக இருக்கக் கூறியது.

**இஸ்லாம் தேசியம் :**

- சுதேசி இயக்கத்தை ஆதரித்த முஸ்லிம்கள் காங்கிரஸின் தரகர்கள் என கண்டித்தது.
- காங்கிரஸ் பதவி விலகியதை, 1939 டிசம்பர் 22 இல் மீட்பு நாளாகக் கொண்டாடியது.
- 1940 லாகூரில் முஸ்லிம் லீக் தனிநாடு கோரிக்கைத் தீர்மானத்தை நிறைவேற்றியது.
- 1946 ஆகஸ்ட் 16 அன்று நேரடி நடவடிக்கை நாளில் ஈடுபடவும் அழைப்பு விடுத்தது.

**இந்திய தேசியம் :**

- இந்து - முஸ்லிம் வகுப்புவாத கலவரங்களை காங்கிரஸ் இயக்கம் கண்டிக்கத் தவறியது.
- ஆரிய சமாஜம் போன்ற இந்து அமைப்புகளில் நிறைய காங்கிரஸ்காரர்கள் பங்கேற்றனர்.
- இந்துமத வகுப்புவாத அரசியல் சக்திகளை எதிர்க்காமல் காங்கிரஸ் மௌனம் காத்தது.
- அமைச்சரவைத் தூதுக் குழுவின் பிரிவினைத் திட்டத்தை காங்கிரஸ் எதிர்க்கவில்லை.

KAVIN GUIDE 2020

# அலகு - 7 இந்திய தேசிய இயக்கத்தின் இறுதிக் கட்டம்

## I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

**1. தனிநபர் சத்தியாகிரகம் எப்போது தொடங்கியது?**

அ) மார்ச 23, 1940 ஆ) ஆகஸ்ட் 8, 1940

**இ) அக்டோபர் 17, 1940** ஈ) ஆகஸ்ட் 9, 1942

**2. பின்வருவனவற்றைப் பொருத்தி சரியான விடையைத் தேர்வு செய்க.**

(அ) இந்து - முஸ்லீம் கலவரம் - 1. மோகன் சிங்

(ஆ) ஆகஸ்ட் கொடை - 2. கோவிந்த் பல்லப் பந்த்

(இ) பிரிவினைத் தீர்மானத்தை முன்மொழிந்தவர் - 3. லின்லித்கோ பிரபு

(ஈ) இந்திய தேசிய இராணுவம் - 4. நவகாளி

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ) | 3 | 4 | 2 | 1 |
| ஆ) | 4 | 2 | 1 | 3 |
| **இ)** | **4** | **3** | **2** | **1** |
| ஈ) | 3 | 2 | 4 | 1 |

**3. கிரிப்ஸ் தூதுக்குழு யாருடைய ஆட்சியின் போது இந்தியாவிற்கு வருகை தந்தது?**

அ) வேவல் பிரபு **ஆ) லின்லித்கோ பிரபு**

இ) மௌண்ட்பேட்டன் பிரபு ஈ) இவர்களில் யாருமில்லை

**4. பின்வருவனவற்றைப் பொருத்தி சரியான விடையைத் தேர்வு செய்க.**

(அ) அமெரிக்கக் குடியரசுத் தலைவர் - 1. டோஜா

(ஆ) சீனக் குடியரசுத் தலைவர் - 2. வின்ஸ்டன் சர்ச்சில்

(இ) பிரிட்டிஷ் பிரதமர் - 3. ஷியாங்கே ஷேக்

(ஈ) ஜப்பான் பிரதமர் - 4. எஃப்.டி. ரூஸ்வெல்ட்

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ) | 1 | 4 | 3 | 2 |
| ஆ) | 1 | 3 | 2 | 4 |
| **இ)** | **4** | **3** | **2** | **1** |
| ஈ) | 4 | 2 | 3 | 1 |

**5. சுபாஷ் சந்திர போஸ் எந்த ஆண்டு காங்கிரஸில் இருந்து நீக்கப்பட்டார்?**

அ) 1938 **ஆ) 1939** இ) 1940 ஈ) 1942

**6. மகாத்மா காந்தியடிகளின் "செய் அல்லது செத்துமடி" என எந்த நிகழ்வின் போது அழைப்பு விடுத்தார்?**

அ) சட்டமறுப்பு இயக்கம் ஆ) ஒத்துழையாமை இயக்கம்

**இ) வெள்ளையனே வெளியேறு இயக்கம்** ஈ) இவை அனைத்தும்

KAVIN GUIDE 2020

7. வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் போது பம்பாயில் இரகசியமாக வானொலி நிலையத்தை நடத்தியவர் யார்?

**அ) உஷா மேத்தா** ஆ) பிரீத்தி வதேதார் இ) ஆசப் அலி ஈ) கேப்டன் லட்சுமி

8. இந்திய தேசிய இராணுவப்படை வீரர்கள் சார்பாக நீதிமன்றத்தில் வாதாடியவர் யார்?

**அ) ஜவஹர்லால் நேரு** ஆ) மோதிலால் நேரு

இ) இராஜாஜி ஈ) சுபாஷ் சந்திர போஸ்

9. 1942 இல் வெள்ளையனே வெளியேறு இயக்கம் தொடங்கப்பட்ட போது இந்தியாவின் அரசபிரதிநிதி யார்?

அ) வேவல் பிரபு **ஆ) லின்லித்கோ பிரபு**

இ) மௌண்ட்பேட்டன் பிரபு ஈ) வின்ஸ்டன் சர்ச்சில்

10. பொருத்தமான விடையைக் கண்டறிக.

**கூற்று :** வெள்ளையனே வெளியேறு இயக்கம் அதன் குறிக்கோளை அடையவில்லை.

**காரணம் :** அப்போதைய பிரிட்டிஷ் அரசு கடுமையான அடக்கு முறையைப் பின்பற்றியது.

**அ) கூற்று மற்றும் காரணம் சரி; காரணம் கூற்றை விளக்குகிறது.**

ஆ) கூற்று மற்றும் காரணம் சரி; காரணம் கூற்றை விளக்கவில்லை.

இ) கூற்று சரி; ஆனால் காரணம் தவறு ஈ) கூற்று தவறு; ஆனால் காரணம் சரி.

11. இந்திய தேசிய இராணுவம் எந்த நாட்டு உதவியுடன் நிறுவப்பட்டது?

அ) ஜெர்மனி **ஆ) ஜப்பான்** இ) பிரான்ஸ் ஈ) அமெரிக்க ஐக்கிய நாடுகள்

12. இந்திய தேசிய இராணுவத்தின் பெண்கள் படைப்பிரிவின் பெயர் ................ ஆகும்.

அ) சுபாஷ் படைப்பிரிவு ஆ) கஸ்தூர்பா படைப்பிரிவு

இ) கேப்டன் லட்சுமி படைப்பிரிவு **ஈ) ஜான்ஸி ராணி படைப்பிரிவு**

13. சுதந்திர இந்தியாவின் தற்காலிக அரசாங்கத்தை சுபாஷ் சந்திர போஸ் எங்கு ஏற்படுத்தினார்?

அ) இரங்கூன் ஆ) மலேயா இ) இம்பால் **ஈ) சிங்கப்பூர்**

14. இந்திய தேசிய இராணுவப் படை மீதான விசாரணை எங்கு நடைபெற்றது?

**அ) செங்கோட்டை, புதுடெல்லி** ஆ) பினாங்

இ) வைஸ்ரீகல் லாட்ஜ், சிம்லா ஈ) சிங்கப்பூர்

15. 1945 இல் சிம்லா மாநாட்டைக் கூட்டிய அரச பிரதிநிதி.

**அ) வேவல் பிரபு** ஆ) லின்லித்கோ பிரபு

இ) மௌண்ட்பேட்டன் பிரபு ஈ) கிளமண்ட் அட்லி

KAVIN GUIDE 2020

**16. 1946 இல் இடைக்கால அரசாங்கம் யாருடைய தலைமையில் அமைக்கப்பட்டது?**

**அ) ஜவஹர்லால் நேரு** ஆ) மௌலானா அபுல் கலாம் ஆசாத்

இ) ராஜேந்திர பிரசாத் ஈ) வல்லபாய் படேல்

**17. சரியான வரிசையில் அமைத்து விடையைத் தேர்வு செய்க.**

**(i) இந்திய தேசிய இராணுவம் தோற்றுவிக்கப்படுதல்**

**(ii) இராயல் இந்திய கடற்படைக் கலகம்**

**(iii) இந்திய தேசிய இராணுவம் மீதான விசாரணை**

**(iv) இராஜாஜி திட்டம்**

அ) ii, i, iii, iv **ஆ) i, iv, iii, ii** இ) iii, iv, i, ii ஈ) iii, iv, ii, i

**18. பின்வரும் நிகழ்வுகளின் சரியான வரிசையைத் தேர்வு செய்க.**

**(i) இந்திய தேசிய இராணுவம் மீதான விசாரணை** **(ii) நேரடி நடவடிக்கை நாள்**

**(iii) ஆகஸ்ட் கொடை** **(iv) தனிநபர் சத்தியாகிரகம்**

அ) i, ii, iii, iv ஆ) iii, i, ii, iv **இ) iii, iv, i, ii** ஈ) i, iii, iv, ii

**19. இந்தியர் கைகளுக்கு அதிகாரம் மாற்றப்படும் என அறிவித்த பிரிட்டிஷ் பிரதமர் யார்?**

அ) வின்ஸ்டன் சர்ச்சில் ஆ) மௌண்ட்பேட்டன் பிரபு

**இ) கிளமண்ட் அட்லி** ஈ) F.D. ரூஸ்வெல்ட்

**20. பிரிட்டிஷார் எந்த காலத்திற்குள் இந்தியாவை விட்டு வெளியேற முடிவு செய்தனர்?**

அ) ஆகஸ்ட் 15, 1947 ஆ) ஜனவரி 26, 1950

**இ) ஜூன், 1948** ஈ) டிசம்பர், 1949

## II. குறுகிய விடையளிக்கவும்.

**1. லாகூர் தீர்மானத்தின் முக்கியத்துவம் என்ன?**

**லாகூர் தீர்மானத்தின் முக்கியத்துவம் :**

- 1940 மார்ச் 23 இல் லாகூர் தீர்மானத்தை முஸ்லிம் லீக் கொண்டு வந்தது.
- முஸ்லிம்களுக்கு தனிநாடு கோரிக்கையே தீர்மானமாக நிறைவேற்றியது.
- இந்தியா - பாகிஸ்தான் பிரிவினை வேண்டுமென்று வலியுறுத்தியது.

**2. ஆகஸ்ட் கொடையின் சிறப்பைக் கூறுக.**

**ஆகஸ்ட் கொடையின் சிறப்பு :**

- வரையறுக்கப்படாத ஒரு தேதியில் டொமினியன் அந்தஸ்து வழங்குதல்.
- அரசபிரதிநிதி குழுவில் இந்தியர்களின் எண்ணிக்கையை அதிகரித்தல்.
- தங்களுக்கென அரசியல் சாசனத்தை இயற்ற இந்தியர்களுக்கு வாய்ப்பளித்தல்.

KAVIN GUIDE 2020

**3. கிரிப்ஸ் முன்மொழிவைக் காங்கிரஸ் ஏன் நிராகரித்தது?**

**கிரிப்ஸ் முன்மொழிவைக் காங்கிரஸ் நிராகரிக்கக் காரணம் :**

- ◈ டொமினியன் அந்தஸ்து வழங்குதல் என்பது ஏமாற்றம் அளிப்பதாகக் கருதினர்.
- ◈ அரசியல் சாசன வரைவுக் குழுவில் நியமன உறுப்பினர்களை அனுமதித்தது.
- ◈ இந்தியப் பிரிவினை பற்றிய குழப்பம் மேலோங்கி இருந்தது.

**4. சிம்லா மாநாட்டின் பேச்சு வார்த்தைகள் ஏன் முறிந்தன?**

**சிம்லா மாநாட்டின் பேச்சு வார்த்தைகள் முறிந்திடக் காரணம் :**

- ◈ அரசபிரதிநிதியின் குழுவிற்கு உறுப்பினர்களை அனுப்புவதில் காங்கிரஸ் - முஸ்லிம் லீக் இடையே உரிமைப் பிரச்சனை தோன்றியது.
- ◈ காங்கிரஸ் ஒரு முஸ்லிமையோ அல்லது ஒடுக்கப்பட்ட சமூகத்தவரையோ உறுப்பினராக அனுப்புவதை முஸ்லிம் லீக் எதிர்த்தது.

**5. கேப்டன் மோகன் சிங் எவ்வாறு இந்திய தேசிய இராணுவத்தை ஏற்படுத்தினார்?**

**கேப்டன் மோகன் சிங் இந்திய தேசிய இராணுவத்தை ஏற்படுத்திய விதம் :**

- ◈ கேப்டன் மோகன் சிங் கைவிடப்பட்ட பிரிட்டிஷ் இந்திய இராணுவத்தின் அதிகாரி.
- ◈ ஜப்பானிடம் பிடிபட்ட போர்க் கைதிகள் மோகன் சிங் தலைமையின் கீழ் வந்தனர்.
- ◈ 1942 இல் 40,000 பேர் கொண்ட இந்திய தேசிய இராணுவத்தை உருவாக்கினார்.

## III. சுருக்கமாக விடையளிக்கவும்.

**1. வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் பங்கேற்காத அமைப்புகளின் பெயரை எழுதுக.**

**வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் பங்கேற்காத அமைப்புகளின் பெயர்கள் :**

- ◈ அனைத்து இந்திய முஸ்லிம் லீக்.
- ◈ ராஷ்டிரிய சுயசேவா சங்கம்.
- ◈ இந்து மகாசபை.
- ◈ சிரோமணி அகாலி தளம்.

**2. சர் ஸ்டாஃபோர்டு கிரிப்ஸ் அவர்களின் முன்மொழிவுகளை விவாதிக்கவும்.**

**சர் ஸ்டாஃபோர்டு கிரிப்ஸ் அவர்களின் முன்மொழிவுகள் :**

- ◈ டொமினியன் அந்தஸ்து வழங்குதல், அரசியல் சாசன வரைவுக்குழு உருவாக்குதல்.
- ◈ வரைவுக்குழுவில் மாகாண சபைகளின் தேர்ந்தெடுத்த உறுப்பினர்கள் இருப்பர்.
- ◈ சுதேச அரசுகளின் சார்பில் நியமனம் செய்யப்பட்ட உறுப்பினர்கள் இருப்பர்.
- ◈ புதிய அரசியல் சாசனத்தை ஏற்காத மாகாணம் பிரிட்டிஷ் அரசுடன் புதிய ஒப்பந்தம்.

KAVIN GUIDE 2020

**3. இந்திய தேசிய காங்கிரசில் இருந்து சுபாஷ் சந்திர போஸ் நீக்கப்பட்டதற்கானக் காரணங்களை விளக்குக.**

**இந்திய தேசிய காங்கிரசில் இருந்து சுபாஷ் சந்திர போஸ் நீக்கப்பட்டதற்கானக் காரணங்கள் :**

- போஸ் காங்கிரசின் அடுத்த தலைவரானதால் காந்தியடிகள் அதிர்ச்சி அடைந்தார்.
- காங்கிரசின் முக்கிய மேல்மட்டத் தலைவர்கள் அவரோடு ஒத்துழைக்க மறுத்தனர்.
- சுபாஷ் சந்திர போஸ் புதிதாக ஃபார்வர்டு பிளாக் கட்சி ஒன்றை தொடங்கினார்.
- அவர் இரண்டாம் உலகப் போரில் அச்சு நாடுகளுக்கு ஆதரவாகச் செயல்பட்டார்.

**4. 1946 இல் ஏற்படுத்தப்பட்ட இடைக்கால அரசாங்கத்தில் இடம்பெற்ற முஸ்லீம் லீக் பிரதிநிதிகள் யாவர்?**

**1946 இல் ஏற்படுத்தப்பட்ட இடைக்கால அரசாங்கத்தில் இடம்பெற்ற முஸ்லீம் லீக் பிரதிநிதிகள் :**

- முகம்மது அலி ஜின்னா.
- லியாகத் அலி கான்.
- முகமது இஸ்மாயில் கான்.
- குவாஜா சர் நிஜாமுதீன்.
- அப்துல் ரப் நிஷ்தர்.

**5. எத்தகைய சூழ்நிலையில் காந்தியடிகள் வெள்ளையனே வெளியேறு இயக்கம் பற்றி சிந்தித்தார்?**

**காந்தியடிகள் வெள்ளையனே வெளியேறு இயக்கம் பற்றி சிந்தித்த சூழ்நிலை :**

- விடுதலைக்கான எந்த உறுதியும் கொடுக்காமல் காலனிய அரசு இழுத்தடித்தது.
- இரண்டாம் உலகப் போரில் சுபாஷ் சந்திர போஸ் அச்சு நாடுகளை ஆதரித்தார்.
- 1942 இல் போஸ் ஜெர்மனியில் இருந்து ஆசாத் ஹிந்து ரேடியோ மூலம் பேசினார்.
- இந்திய தேசிய இயக்கத்தையும் காந்தியையும் சர்ச்சில் வெறுப்புடன் பார்த்தார்.

## IV. விரிவான விடையளிக்கவும்.

**1. வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் போக்கினை விவாதிக்கவும்.**

**வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் போக்கு :**

- 1942 இல் வெள்ளையனே வெளியேறு இயக்கத்தை காந்தியடிகள் தொடங்கினார்.
- காந்தியடிகள் மக்களை நோக்கி "செய் அல்லது செத்துமடி" என அழைப்பு விடுத்தார்.
- 1942 ஆகஸ்ட் 9 அன்று அதிகாலை காந்தியடிகள் உட்பட பலரை கைது செய்தனர்.
- கடையடைப்புகள், மறியல்கள், வேலை நிறுத்தங்கள், வன்முறை மோதல்கள் நடந்தன.

KAVIN GUIDE 2020

- ஆரம்பத்தில் நகரங்களிலும் இரண்டாம் நிலையில் கிராமங்களிலும் இயக்கம் பரவியது.
- காவல் நிலைகள், இரயில் நிலையங்கள், அஞ்சல் அலுவலகங்கள் சேதப்படுத்தப்பட்டன.
- காந்தியடிகள் 1943 பிப்ரவரி 10 இல் சிறையில் 21 நாட்கள் உண்ணாவிரதம் இருந்தார்.
- 1943 ஆம் ஆண்டின் முடிவில் 91,836 பேரை கைது செய்தனர். 1060 பேர் பலியாகினர்.
- புரட்சியாளர்கள் பம்பாயில் இரகசியமாக வானொலி ஒலிபரப்பு முறைமையை நிறுவினர்.
- காந்தியடிகள் உடல்நலம் சார்ந்த காரணங்களுக்காக 1944 மே 6 இல் விடுதலையானார்.

## 2. சுதந்திரப் போராட்டத்தை இந்திய தேசிய இராணுவ விசாரணை எவ்வாறு தீவிரப்படுத்தியது?

### சுதந்திரப் போராட்டத்தை இந்திய தேசிய இராணுவ விசாரணை தீவிரப்படுத்தியது :

- டெல்லி செங்கோட்டையில் இந்திய தேசிய இராணுவ விசாரணை நடத்தப்பட்டது.
- ஜவஹர்லால் நேரு இந்திய தேசிய இராணுவ வீரர்களின் சார்பாக வாதாடினார்.
- இந்த வழக்கு விசாரணை பொது மக்களிடம் ஒருவித தாக்கத்தை ஏற்படுத்தியது.
- காங்கிரஸ் நாடு முழுவதும் பொதுக் கூட்டங்களை நடத்தி மக்களைத் திரட்டியது.
- இந்திய அரசியல் சட்டம் 1935 இன் படி விரைவில் தேர்தல் வருவதாக இருந்தது.
- ஓட்டுக் கேட்பதைவிட இந்திய தேசிய இராணுவ விசாரணை பற்றியே பேசப்பட்டது.
- ஷா நவாஸ் கான், P.K. ஷெகல் மற்றும் G.S. தில்லான் மீது தனி விசாரணை நடந்தது.
- இந்திய பத்திரிகைகள் யாவும் இவ்விசாரணையை உணர்ச்சிகரமாகப் பிரசுரித்தன.
- கடையடைப்புகள், ஊர்வலங்கள் மற்றும் பொது வேலைநிறுத்தங்கள் நடத்தப்பட்டன.
- இந்திய தேசிய இராணுவ வாரம் கடைபிடித்தனர். வழக்கு செலவிற்கு நிதி திரட்டினர்.

## 3. இராஜாஜி திட்டம் பற்றி ஒரு பத்தி எழுதுக.

### இராஜாஜி திட்டம் :

- இராஜாஜி திட்டம் என்பது 1944 இல் இராஜாஜி வழங்கிய முன்மொழிவுத் தீர்மானமே.
- போருக்குப் பின்பு பிரிவினைப் பணிகளை மேற்கொள்ள ஒரு ஆணையம் அமைத்தல்.
- இஸ்லாமியர்கள் பெரும்பான்மையாக வாழும் தொடர் மாவட்டங்களைப் பிரித்தெடுத்தல்.
- வயதுதகுதி வைத்து வாக்கெடுப்பு நடத்தி பாகிஸ்தான் உருவாக்கம் பற்றி முடிவெடுத்தல்.
- ஒருவேளை ஓட்டெடுப்பின் முடிவில் பிரிவினை உறுதியானால் ஒப்பந்தம் ஏற்படுத்துதல்.
- பாதுகாப்பு, தொலைத்தொடர்பு போன்ற முக்கியமானதை பொதுவில் செயல்படுத்துதல்.
- பெரும்பான்மையினர் வாழும் இரு இறையாண்மை கொண்ட நாடுகளை உருவாக்குதல்.
- எல்லையில் அமைந்த மாவட்டங்கள் ஏதோ ஒன்றில் சேர்ந்து கொள்ள வாய்ப்பளித்தல்.
- இவை யாவும் முழுமையான அதிகார மாற்றம் ஏற்பட்ட பிறகு செயல்படுத்த வேண்டும்.
- ராஜாஜி திட்டம் குறித்த காந்தி - ஜின்னா பேச்சுவார்த்தை தோல்வியில் முடிவடைந்தது.

KAVIN GUIDE 2020

**4. இந்திய விடுதலை இயக்க வரலாற்றில் கப்பற்படை கலகம் ஒரு சிறப்பான அத்தியாயம் என ஏன் கருதப்படுகிறது?**

**இந்திய விடுதலை இயக்க வரலாற்றில் கப்பற்படை கலகம் ஒரு சிறப்பான அத்தியாயம் :**

- **B.C.** தத் என்பவர் **HMIS** தல்வார் என்ற போர்கப்பலில் மாலுமியாகப் பணியாற்றினார்.
- **B.C.** தத் அக்கப்பலின் பக்கவாட்டில் "வெள்ளையனே வெளியேறு" என்று எழுதினார்.
- அக்கப்பலில் பணியாற்றிய 1,100 மாலுமிகள் உடனடியாக போராட்டத்தில் இறங்கினர்.
- ஆங்கிலேய அதிகாரிகளின் நிறவெறியையும் அடக்கு முறைகளையும் கண்டித்தனர்.
- **B.C.** தத்தைக் கைது செய்ததால் 1946 பிப்ரவரி 18 இல் கலகம் வெடிக்க ஆரம்பித்தது.
- மறுநாள் கோட்டைக் கொத்தளத்தில் இருந்த மாலுமிகளும் கலகத்தில் இணைந்தனர்.
- **HMIS** ஹிந்துஸ்தான் கப்பலின் மாலுமிகள் கராச்சியில் போராட்டத்தைத் துவக்கினர்.
- 78 கப்பல்களிலும் 20 கரைசார்ந்த பணியிடங்களிலும் 20,000 மாலுமிகள் போராடினர்.
- கப்பலில் காங்கிரஸ், கம்யூனிஸ்ட், முஸ்லிம் லீக் கொடிகளை ஒருங்கே கட்டினார்கள்.
- ஒரு நீண்ட விடுதலைப் போராட்டத்தின் கடைசி அத்தியாயமாக இக்கலகம் உள்ளது.

KAVIN GUIDE 2020

# அலகு - 8 காலனியத்துக்குப் பிந்தைய இந்தியாவின் மறுகட்டமைப்பு

## I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

**1. பின்வருவனவற்றைப் பொருத்தி சரியான விடையைத் தேர்வு செய்க.**

| | | |
|---|---|---|
| **(அ)** ஜேவிபி குழு | - | **1.** 1928 |
| **(ஆ)** சர் சிரில் ராட்கிளிஃப் | - | **2.** மாநில மறுசீரமைப்பு ஆணையம் |
| **(இ)** பசல் அலி | - | **3.** 1948 |
| **(ஈ)** நேரு குழு அறிக்கை | - | **4.** எல்லை வரையறை ஆணையம் |

| | அ | ஆ | இ | ஈ | | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| அ) | 1 | 2 | 3 | 4 | **ஆ)** | **3** | **4** | **2** | **1** |
| இ) | 4 | 3 | 2 | 1 | ஈ) | 4 | 2 | 3 | 1 |

**2. பின்வருவனவற்றைக் காலவரிசைப்படி அமைக்கவும்.**

**(i)** இந்திய சுதந்திரம் குறித்த அட்லியின் அறிவிப்பு.

**(ii)** நேருவின் தலைமையிலான இடைக்கால அரசாங்கம்.

**(iii)** மௌண்ட்பேட்டன் திட்டம்.

**கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளில் இருந்து விடையினை தேர்ந்தெடுக்கவும்.**

**அ) ii, i, iii** ஆ) i, ii, iii இ) iii, ii, i ஈ) ii, iii, i

**3. பின்வருவனவற்றைப் பொருத்திச் சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.**

| | | |
|---|---|---|
| **(அ)** சீனமக்கள் குடியரசு | - | **1.** பெல்கிரேடு |
| **(ஆ)** பாண்டுங் மாநாடு | - | **2.** மார்ச் 1947 |
| **(இ)** ஆசிய உறவுகள் மாநாடு | - | **3.** ஏப்ரல் 1955 |
| **(ஈ)** அணிசேரா இயக்கத்தின் தோற்றம் | - | **4.** ஜனவரி 1, 1950 |

| | அ | ஆ | இ | ஈ | | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| அ) | 3 | 4 | 2 | 1 | ஆ) | 4 | 2 | 3 | 1 |
| **இ)** | **4** | **3** | **2** | **1** | ஈ) | 3 | 2 | 4 | 1 |

**4. பின்வரும் நிகழ்வுகளின் சரியான வரிசையைத் தேர்க.**

**(i)** சீனமக்கள் குடியரசு

**(ii)** சீனாவுடனான இந்தியப் போர்

**(iii)** அரசமைப்பு நிர்ணயச் சபையின் கூட்டம்

**(iv)** பஞ்சசீலக் கொள்கை

**(v)** நேரு - லியாகத் அலி கான் ஒப்பந்தம்

**கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளில் இருந்து விடையினை தேர்ந்தெடுக்கவும்.**

அ) i, ii, iii, iv, v **ஆ) iii, i, v, iv, ii** இ) iii, iv, i, v, ii ஈ) i, iii, iv, v, ii

KAVIN GUIDE 2020

5. **மகாத்மா காந்தியடிகள் படுகொலை செய்யப்பட்ட நாள் ........................**

**அ) ஜனவரி 30, 1948** ஆ) ஆகஸ்ட் 15, 1947

இ) ஜனவரி 30, 1949 ஈ) அக்டோபர் 2, 1948

6. **ஆந்திர மாநில கோரிக்கையினை முதன்முதலில் எழுப்பியவர் ........................**

அ) பொட்டி ஸ்ரீராமுலு **ஆ) பட்டாபி சீத்தாராமையா**

இ) கே.எம். பணிக்கர் ஈ) டி. பிரகாசம்

7. **அரசமைப்பு நிர்ணயச் சபையில் குறிக்கோள் தீர்மானங்களைக் கொண்டு வந்தவர்.**

அ) இராஜேந்திர பிரசாத் **ஆ) ஜவஹர்லால் நேரு**

இ) வல்லபாய் படேல் ஈ) மௌலானா அபுல்கலாம் ஆசாத்

8. **பி.ஆர். அம்பேத்காரை எந்த தொகுதியில் இருந்து தேர்ந்தெடுப்பதைக் காங்கிரஸ் உறுதி செய்தது?**

அ) அமேதி **ஆ) பம்பாய்** இ) நாக்பூர் ஈ) மகவ்

9. **கூற்று : ராட்கிளிஃபின் எல்லைவரையறை அனைத்து வகையான முரண்பாடுகளையும் கொண்டிருந்தது.**

**காரணம் : முரண்பாடுகள் இருப்பினும் அது அனைவராலும் ஒருமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.**

அ) கூற்று மற்றும் காரணம் சரி; காரணம் கூற்றை விளக்குகிறது

**ஆ) கூற்று மற்றும் காரணம் சரி; காரணம் கூற்றை விளக்கவில்லை**

இ) கூற்று சரி; காரணம் தவறு ஈ) கூற்று தவறு; காரணம் சரி

10. **அரசமைப்பு நிர்ணய சபையின் முதல்கூட்டம் எப்போது நடைபெற்றது?**

அ) மார்ச் 22, 1949 ஆ) ஜனவரி 26, 1946

**இ) டிசம்பர் 9, 1946** ஈ) டிசம்பர் 13, 1946

11. **அரசமைப்பு எப்பொழுது ஏற்றுக்கொள்ளப்பட்டது?**

அ) ஜனவரி 30, 1949 ஆ) ஆகஸ்ட் 15, 1947

இ) ஜனவரி 30, 1949 **ஈ) நவம்பர் 26, 1949**

12. **மொழிவாரி அடிப்படையில் அமைக்கப்பட்ட முதல் மாநிலம் ..............................**

அ) காஷ்மீர் ஆ) அஸ்ஸாம் **இ) ஆந்திரா** ஈ) ஒரிஸா

## II. குறுகிய விடையளிக்கவும்.

1. **இணைப்புறுதி ஆவணம் பற்றி நீவிர் அறிவது யாது?**

**இணைப்புறுதி ஆவணம் :**

- இந்திய அரசுச் சட்டம் 1935 கீழ் உருவாக்கப்பட்ட ஒரு சட்டப்பூர்வ ஆவணம்.
- இந்தியா - பாகிஸ்தான் பிரிவினையின் போது பயன்படுத்தப்பட்ட ஒப்பந்தமாகும்.
- இந்திய சுதேச அரசர்களை தான் விரும்பும் நாட்டுடன் இணைய அனுமதித்தது.

KAVIN GUIDE 2020

**2. அரசமைப்பு நிர்ணய சபையின் அமைப்பினை விளக்குக.**

**அரசமைப்பு நிர்ணய சபையின் அமைப்பு :**

- இந்திய அரசமைப்பு நிர்ணய சபை 1946 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது.
- அரசமைப்பு நிர்ணய சபையின் தலைவராக இராஜேந்திர பிரசாத் தேர்வானார்.
- அரசமைப்பு வரைவுக் குழுவின் தலைவராக அம்பேத்கர் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

**3. அரசமைப்பின் ஷரத்து 370 இன் முக்கியத்துவம் என்ன?**

**அரசமைப்பின் ஷரத்து 370 இன் முக்கியத்துவம் :**

- அரசமைப்பின் ஷரத்து 370 - ஜம்மு காஷ்மீருக்கு தனி அந்தஸ்து வழங்கியுள்ளது.
- ஜம்மு காஷ்மீர் மாநிலத்திற்கென மத்திய அரசு சுயமாக சட்டம் இயற்ற முடியாது.
- இந்திய அரசமைப்பின் ஷரத்து 238 ஜம்மு காஷ்மீர் மாநிலத்துக்கு பொருந்தாது.

**4. ஹைதராபாத் சமஸ்தானத்தை இந்திய யூனியனுடன் சேர்க்க எடுக்கப்பட்ட காவல்துறை நடவடிக்கையினை எது நியாயப்படுத்தியது?**

**ஹைதராபாத் சமஸ்தானத்தை இந்திய யூனியனுடன் சேர்க்க எடுக்கப்பட்ட காவல்துறை நடவடிக்கையினை நியாயப்படுத்தியவை :**

- ஹைதராபாத் நிஜாம் இந்தியாவுடன் இணைய மறுத்து விடுதலைப் பிரகடனம் செய்தார்.
- நிஜாமுக்கு எதிராக தெலுங்கானா மக்கள் இயக்கத்தை கம்யூனிஸ்டுகள் வழிநடத்தினர்.
- நிஜாமின் இராணுவமான இரசாக்கர்கள் மீது தங்கள் கோபத்தை வெளிப்படுத்தினர்.

**5. ஜேவிபி குழு பரிந்துரைகளின் முக்கியத்துவம் என்ன?**

**ஜேவிபி குழு பரிந்துரைகளின் முக்கியத்துவம் :**

- மொழிவாரி மாகாணங்கள் "குறுகிய பிராந்தியவாதத்தை" வலியுறுத்துகின்றன.
- மொழிவாரி மாகாணங்கள் நாட்டின் மேம்பாட்டிற்கு அச்சுறுத்தலாக உருவாகும்.
- மொழியானது பிணைக்கும் ஆற்றலை மட்டுமல்ல பிரிக்கும் ஆற்றலும் உடையது.

## III. சுருக்கமாக விடையளிக்கவும்.

**1. காஷ்மீர் அரசர் எவ்வாறு இணைப்புறுதி ஆவணத்தில் கையெழுத்திட்டார்?**

**காஷ்மீர் அரசர் இணைப்புறுதி ஆவணத்தில் கையெழுத்திட்ட நடைமுறைகள்:**

- 1947 அக்டோபரில் பாகிஸ்தானியர்கள் சிலர் காஷ்மீரைச் சூறையாடினார்கள்.
- பாகிஸ்தானியர்களை விரட்ட காஷ்மீர் அரசர் இந்தியாவின் உதவியை நாடினார்.
- இணைப்புறுதி ஆவணத்தில் கையெழுத்திட்டால் உதவுவதாக படேல் கூறினார்.
- காஷ்மீர் மகாராஜா ஹரிசிங் இணைப்புறுதி ஆவணத்தில் கையெழுத்திட்டார்.

KAVIN GUIDE 2020

**2. இந்திய அரசமைப்பின் தனித்தன்மைகள் யாவை?**

**இந்திய அரசமைப்பின் தனித்தன்மைகள் :**

◈ குடிமக்களுக்கு அடிப்படை உரிமைகளை உறுதி செய்யும் ஓர் ஆவணமாக உள்ளது.

◈ சுதந்திரமான தேர்தல் ஆணையம், வயதுவந்தோர்க்கு வாக்குரிமை உறுதி செய்தது.

◈ மக்கள் பிரதிநிதிகளுக்குச் சட்டம் இயற்றுவதில் இறையாண்மையை உறுதி செய்தது.

◈ இந்திய அரசமைப்பு நீதித்துறையின் சுதந்திரத் தன்மையையும் உறுதி செய்தது.

**3. பிரிவினையால் ஏற்பட்ட கடுமையான விளைவுகளைச் சுட்டிக் காட்டுக.**

**பிரிவினையால் ஏற்பட்ட கடுமையான விளைவுகள் :**

◈ நாடு முழுவதும் இந்து - முஸ்லிம் இடையே வகுப்புவாத கலவரங்கள் வெடித்தன.

◈ வன்முறையில் சுமார் 2 இலட்சம் முதல் 5 இலட்சம் பேர் வரை உயிரிழந்தனர்.

◈ பஞ்சாப் வங்காளம் வழியாக சுமார் 15 மில்லியன் மக்கள் இடம் பெயர்ந்தனர்.

◈ இடம் பெயர்ந்தவர் விட்டுச் சென்ற சொத்துகளை உள்ளூர் மக்கள் அபகரித்தனர்.

**4. பஞ்சசீலக் கொள்கையின் ஐந்து கோட்பாடுகளை விளக்குக.**

**பஞ்சசீலக் கொள்கையின் ஐந்து கோட்பாடுகள் :**

(i) ஒரு நாடு மற்றொரு நாட்டின் நிலஎல்லை மற்றும் இறையாண்மையை மதித்து நடத்தல்.

(ii) இரு நாடுகளும் ஒன்றையொன்று ஆக்கிரமிக்காமல் இருத்தல்.

(iii) ஒரு நாடு மற்றொரு நாட்டின் உள்விவகாரங்களில் தலையிடாமல் இருத்தல்.

(iv) இரு நாடுகளுக்கு இடையே சமத்துவம், ஒன்றுக்கொன்று பயனடைய கூட்டுறவு.

(v) சமாதான சகவாழ்வு.

KAVIN GUIDE 2020

## IV. விரிவான விடையளிக்கவும்.

**1. சுதேச அரசுகளை இந்திய ஒன்றியத்துடன் இணைப்பது தொடர்பாக ஏற்பட்ட பிரச்சினைகள் என்ன? அவற்றை எவ்வாறு திறமையாக படேல் மற்றும் நேரு கையாண்டனர் என்பதையும் விளக்குக.**

**சுதேச அரசுகளை இந்திய ஒன்றியத்துடன் இணைப்பது தொடர்பாக ஏற்பட்ட பிரச்சினைகள் :**

◈ ஹைதராபாத் நிஜாம் தனது ஹைதராபாத் அரசை சுதந்திர அரசாக அறிவித்தார்.

◈ ஜுனாகத் அரசர் மக்கள் விருப்பத்திற்கு எதிராக பாகிஸ்தானுடன் சேர விரும்பினார்.

◈ காஷ்மீரின் இந்து அரசர் மகாராஜா ஹரிசிங் காஷ்மீரை சுதந்திர அரசாக அறிவித்தார்.

◈ 500 க்கும் அதிகமாக இருந்த சுதேச அரசுகளை இந்தியாவோடு ஒருங்கிணைத்தல்.

**சுதேச அரசுகளை இந்திய ஒன்றியத்துடன் இணைப்பதை படேல் மற்றும் நேரு திறமையாக கையாண்டனர் :**

- ஹைதராபாத் நிஜாமின் இராணுவம் இரசாக்கர்கள் மீது மக்கள் தாக்குதல் நடத்தினர்.
- ஹைதராபாத் மீது காவல்துறை நடவடிக்கை எடுத்தபின் இந்தியாவுடன் இணைத்தார்.
- ஜூனாகத் அரசருக்கு எதிராக மக்கள் போராட்டம் மற்றும் கலவரத்தில் ஈடுபட்டனர்.
- இந்திய அரசு ஜூனாகத் மக்களிடம் வாக்கெடுப்பு நடத்தி இந்தியாவுடன் இணைத்தார்.
- காஷ்மீர் ராஜா ஹரிசிங்கால் பாகிஸ்தானியர்கள் சூறையாடலை தடுக்க முடியவில்லை.
- காஷ்மீர் இந்தியாவோடு இணைந்தால் உதவுவதாக கூறி இந்தியாவுடன் இணைத்தார்.
- இந்தியாவோடு இணையும் சுதேச அரசுகளுக்கு மன்னர் மானியங்களை வழங்கினார்.

**2. 1920 முதல் 1956 வரை இந்திய மாநிலங்கள் மறுசீரமைக்கப்பட்டதின் பல்வேறு நிலைகளைக் கண்டறிக.**

**1920 முதல் 1956 வரை இந்திய மாநிலங்கள் மறுசீரமைக்கப்பட்டதின் பல்வேறு நிலைகள் :**

- 1920 நாக்பூர் காங்கிரஸ் கூட்டத்தில் மொழிவாரி மாகாண கோரிக்கை எழுந்தது.
- 1928 நேரு அறிக்கையில் மாநிலங்களை மொழிவாரி மறுசீரமைக்கக் கோரியது.
- 1945 இல் காங்கிரஸ் தேர்தல் அறிக்கையில் மொழிவாரி மாகாண கருத்து இருந்தது.
- 1948 இல் இராஜேந்திர பிரசாத் மொழிவாரி மாகாணங்கள் ஆணையத்தை அமைத்தார்.
- 1948 இல் ஆணையத்தின் அறிக்கை மொழிவாரி மாகாண மறுசீரமைப்பை எதிர்த்தது.
- மொழிவாரி மாகாணக் கோரிக்கையை ஆராய்வதற்கு ஜே.வி.பி. குழு அமைக்கப்பட்டது.
- 1949 இல் ஜே.வி.பி. குழு மொழிவாரி மாகாணங்கள் மறுசீரமைப்பை தள்ளிப்போட்டது.
- 1952 இல் பொட்டி ஸ்ரீராமுலு தனி ஆந்திரா கேட்டு உண்ணாவிரதம் இருந்து இறந்தார்.
- 1955 இல் பசல் அலி தலைவராக மாநில மறுசீரமைப்பு ஆணையம் அறிக்கை அளித்தது.
- 1956 இல் மாநில மறுசீரமைப்புச் சட்டம் இயற்றப்பட்டு பல மாநிலங்கள் உதயமாயின.

**3. இந்திய வெளியுறவுக் கொள்கையின் அடிப்படைக் கோட்பாடுகள் யாவை? அணிசேரா இயக்கத்தில் ஆப்பிரிக்க ஆசிய நாடுகளை இணைத்ததில் பிரதமர் நேரு அவர்களின் பங்கினை விளக்குக.**

**இந்திய வெளியுறவுக் கொள்கையின் அடிப்படைக் கோட்பாடுகள் :**

- ஏகாதிபத்தியம், காலனி ஆதிக்கம், இன ஒதுக்கல், இனவெறி ஆகியவற்றை எதிர்த்தல்.
- வல்லரசு நாடுகளுடன் அணி சேராமை, ஆப்பிரிக்க - ஆசிய நாடுகளுடன் ஒற்றுமை.
- பிறநாடுகளின் உள்நாட்டு நிகழ்வுகளில் தலையிடாமை, ஆக்கிரமிப்பு செய்யாமை.
- ஒரு நாடு மற்றொரு நாட்டின் இறையாண்மை மற்றும் நில எல்லையை மதித்தல்.
- உலக அமைதியை பாதுகாத்தல் மற்றும் நாடுகளின் பாதுகாப்பை மேம்படுத்துதல்.

KAVIN GUIDE 2020

**அணிசேரா இயக்கத்தில் ஆப்பிரிக்க ஆசிய நாடுகளை இணைத்ததில் பிரதமர் நேரு அவர்களின் பங்கு :**

- ஜவஹர்லால் நேரு சுதந்திர இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையின் சிற்பியாவார்.
- 1955 இல் நடைபெற்ற பாண்டுங் மாநாட்டில் ஆப்பிரிக்க, ஆசிய நாடுகள் பங்கேற்றன.
- பெல்கிரேட் நகரில் இந்த நாடுகள் கூடி அணிசேரா இயக்கத்தைத் தோற்றுவித்தன.
- 1961 இல் அணுசக்தி ஆயுதக்குறைப்பு மற்றும் சமாதானத்திற்கு அழைப்பு விடுத்தார்.
- அணிசேராமையின் முக்கியத்துவம் மற்றும் அதன் தேவை பற்றி நேரு விளக்கினார்.

KAVIN GUIDE 2020

# அலகு - 9 ஓர் புதிய சமூக - பொருளாதார ஒழுங்கமைவை எதிர்நோக்குதல்

## I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

**1. பின்வருவனவற்றை காலவரிசைப்படுத்துக .**

(i) ஜமீன்தாரி முறை ஒழிப்புச்சட்டங்கள்.

(ii) அதிக விளைச்சலைத் தரும் வீரிய ரக விதைகளின் பயன்பாடு.

(iii) தமிழ்நாட்டின் முதல் நில உச்சவரம்புச் சட்டம்.

கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளிலிருந்து விடையினைத் தேர்வு செய்க.

அ) ii, i, iii   **ஆ) i, iii, ii**   இ) iii, ii, i   ஈ) ii, iii, i

**2. இந்திய அரசாங்கம் _________ வகையான மேம்பாட்டிற்காக உறுதி பூண்டுள்ளது.**

அ) முதலாளித்துவ   **ஆ) சமதர்ம**   இ) தெய்வீக   ஈ) தொழிற்சாலை

**3. இந்திய அரசியலமைப்பில் முதலாவது திருத்தம் எப்போது மேற்கொள்ளப்பட்டது?**

**அ) 1951**   ஆ) 1952   இ) 1976   ஈ) 1978

**4. கொடுக்கப்பட்டுள்ள விடைக் குறிப்புகளைக் கொண்டு பின்வருவனவற்றைப் பொருத்தி சரியான விடையைத் தேர்வு செய்க.**

(அ) தொழில் மேம்பாடு கொள்கைத் தீர்மானம் - 1. 1951-56

(ஆ) இந்திய அறிவியல் நிறுவனம் - 2. இரண்டாவது ஐந்தாண்டு திட்டம்

(இ) மகலனோபிஸ் - 3. 1909

(ஈ) முதலாவது ஐந்தாண்டு திட்டம் - 4. 1956

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ) | 1 | 2 | 3 | 4 |
| ஆ) | 3 | 1 | 4 | 2 |
| **இ)** | **4** | **3** | **2** | **1** |
| ஈ) | 4 | 2 | 3 | 1 |

**5. நிலச் சீர்திருத்தச் சட்டம் தமிழ்நாட்டில் இரண்டாவது முறையாக எப்போது நடைமுறைப் படுத்தப்பட்டது?**

அ) 1961   **ஆ) 1972**   இ) 1976   ஈ) 1978

**6. பூமிதான இயக்கத்தைத் தொடங்கியவர்.**

அ) ராம் மனோகர் லோகியா   ஆ) ஜெயப்பிரகாஷ் நாராயணன்

**இ) வினோபா பாவே**   ஈ) சுந்தர் லால் பகுகுணா

**7. சரியான விடையைத் தேர்வு செய்க.**

**கூற்று :** ஜமீன்தாரி முறை ஒழிப்பு அதன் முக்கிய நோக்கத்தில் ஒரு பகுதியையே எட்டியது.

**காரணம் :** பல நிலச் சுவான்தாரர்கள் குத்தகைதாரர்களை வெளியேற்றி நிலம் அவர்களது சுய கட்டுப்பாட்டின் கீழ் வேளாண்மையில் உள்ளதாக உரிமை கோரினர்.

KAVIN GUIDE 2020

**அ) கூற்று மற்றும் காரணம் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.**

ஆ) கூற்று மற்றும் காரணம் சரி. காரணம் கூற்றை விளக்கவில்லை.

இ) கூற்று சரி. காரணம் தவறு. ஈ) கூற்று தவறு. காரணம் சரி.

8. தொழில் வளர்ச்சி மற்றும் ஒழுங்குமுறைச் சட்டம் எந்த ஆண்டு நிறைவேற்றப்பட்டது?

**அ) 1951** ஆ) 1961 இ) 1971 ஈ) 1972

9. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்புச் சட்டம் எந்த ஆண்டு நிறைவேற்றப்பட்டது?

**அ) 2005** ஆ) 2006 இ) 2007 ஈ) 2008

10. எந்த ஆண்டு இந்திய பொதுத்துறை நிறுவனங்கள் கடும் நெருக்கடியைச் சந்தித்தன?

அ) 1961 **ஆ) 1991** இ) 2008 ஈ) 2005

11. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்புச் சட்டம் (MGNREGA) எத்தனை நாட்கள் வேலைவாய்ப்பை ஒரு தனிநபருக்கு வழங்குகிறது?

அ) 200 ஆ) 150 **இ) 100** ஈ) 75

12. டாட்டா அடிப்படை ஆராய்ச்சி நிறுவனம் எப்போது அமைக்கப்பட்டது?

அ) 1905 ஆ) 1921 **இ) 1945** ஈ) 1957

13. 1951 ஆம் ஆண்டில் இந்தியாவில் எத்தனை பொதுத்துறை நிறுவனங்கள் செயல்பட்டன?

**அ) 5** ஆ) 7 இ) 6 ஈ) 225

## II. குறுகிய விடையளிக்கவும்.

1. நாடு விடுதலை அடைந்த போது இந்திய பொருளாதாரத்தின் நிலைகள் குறித்து ஒரு குறிப்பு வரைக.

**நாடு விடுதலை அடைந்த போது இந்திய பொருளாதாரத்தின் நிலைகள் :**

- பொருளாதாரம் வலுவற்றதாக இருந்தது.
- வறுமையின் அளவு அதிகமாக இருந்தது.
- தலா வருமானம் மிகவும் குறைவாக இருந்தது.
- 80% மக்கள் வேளாண்மையை சார்ந்து இருந்தனர்.

2. ஜவஹர்லால் நேரு தலைமையிலான புதிய அரசாங்கத்தின் முன்னிருந்த முக்கிய கடமைகள் யாவை?

**நேரு தலைமையிலான புதிய அரசாங்கத்தின் முன்னிருந்த முக்கிய கடமைகள் :**

- பொருளாதாரத்தை வளர்த்தல்.
- வேளாண்துறை நிலைமைகளை மேம்படுத்தல்.
- வேலைவாய்ப்புகளை பெருக்குதல்.
- உற்பத்தித் துறையை விரிவாக்கம் செய்தல்.
- வறுமையைக் குறைத்தல்.

KAVIN GUIDE 2020

**3. சதர்ம சமூக அமைப்பு என்பதைப் பற்றி நீ அறிந்ததென்ன?**

**சதர்ம சமூக அமைப்பு :**

- ஏற்றத் தாழ்வுகளை குறைப்பது, சுரண்டலை ஒழிப்பது.
- செல்வம் ஓரிடத்தில் குவிக்கப்படுவதைத் தடுப்பது.
- கல்வி, வேலை வாய்ப்பில் சமவாய்ப்பைப் பெறுவது.

**4. இந்தியா விடுதலை அடைந்ததைத் தொடர்ந்து பொதுத்துறை நிறுவனங்களை அமைப்பது தொடர்பாக வைக்கப்பட்ட இரண்டு முக்கிய கருத்துக்களை சுட்டிக் காட்டுக.**

**பொதுத்துறை நிறுவனங்களை அமைப்பது தொடர்பாக வைக்கப்பட்ட இரண்டு முக்கிய கருத்துக்கள் :**

- **கருத்தியல் சார்ந்தது** - அரசாங்கம் ஒரு சமதர்ம வளர்ச்சிக்கு உறுதி அளித்தது.
- **நடைமுறை சார்ந்தது** - கனரகத் தொழில்களை உருவாக்கும் பொறுப்பை ஏற்றது.

**5. பூமிதான இயக்கம் பற்றி எழுதுக.**

**பூமிதான இயக்கம் :**

- பூமிதான இயக்கத்தை வினோபா பாவே தொடங்கினார்.
- பெரும் நிலவுடைமையாளர்களிடம் உபரியாக உள்ள நிலங்களைத் தாமாகவே முன்வந்து வழங்க இணங்க வைத்தது.

## III. சுருக்கமான விடையளிக்கவும்.

**1. குத்தகை சீர்திருத்தங்களின் நோக்கங்கள் யாவை?**

**குத்தகை சீர்திருத்தங்களின் நோக்கங்கள் :**

- குத்தகையை முறைப்படுத்துவது.
- குத்தகைதாரர்களின் உரிமைகளை பாதுகாப்பது.
- நிலங்களைப் பறிமுதல் செய்து அதன் உரிமையை குத்தகைதாரர்களுக்கு தருவது.

**2. இந்தியாவில் பசுமைப் புரட்சியின் விளைவுகள் யாவை?**

**இந்தியாவில் பசுமைப் புரட்சியின் விளைவுகள் :**

**நேர்மறை விளைவுகள் :**

- இந்தியா உணவு தானிய உற்பத்தியில் தன்னிறைவு பெற்றது.
- பால் மற்றும் முட்டை உற்பத்தியானது தொடர்ந்து அதிகரித்தது.

**எதிர்மறை விளைவுகள் :**

- வசதி வாய்ப்புள்ள - வசதி வாய்ப்பில்லா பகுதிகள் இடையே ஏற்ற தாழ்வு அதிகரித்தது.
- ரசாயன உரங்கள், பூச்சிக் கொல்லி மருந்துகள் சூழலியல் பிரச்சனைகளை ஏற்படுத்தின.

KAVIN GUIDE 2020

**3. மத்திய அரசு 1980 களில் கொண்டு வந்த ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தை விளக்குக.**

**மத்திய அரசு 1980 களில் கொண்டுவந்த ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் :**

- 1980 இல் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டது.
- நோக்கம் - கிராமப்புற குடும்பங்களின் பொருளாதார நிலையை உயர்த்துவது.
- அவர்களுக்கு சில சொத்துக்களை வழங்கிட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது.
- இதன் மூலம் கிராமப்புற குடும்பங்கள் வறுமையில் இருந்து வெளியேவர இயலும்.

**4. இந்திய வேளாண்மையின் பின்தங்கிய நிலைக்கான காரணங்கள் யாவை?**

**இந்திய வேளாண்மையின் பின்தங்கிய நிலைக்கான காரணங்கள் :**

**நிறுவனம் சார்ந்த காரணிகள் :**

- நிலவுடைமை வர்க்கத்தை சேர்ந்தோருக்கும் விவசாயத் தொழிலாளர் வர்க்கத்தைச் சேர்ந்தோருக்கும் இடையே நிலவிய சமூக - பொருளாதார உறவுகளைக் குறிப்பது.

**தொழில்நுட்பம் சார்ந்த காரணிகள் :**

- சிறந்த விதைகள், மேம்படுத்தப்பட்ட வேளாண் முறைகள், ரசாயன உரங்கள், டிராக்டர் மற்றும் அறுவடை இயந்திரம் உள்ளிட்ட நீர்ப்பாசன வசதிகளைக் குறிப்பது.

**5. பொதுத்துறை நிறுவனங்களின் குறைந்த செயல்பாட்டிற்கான காரணிகள் யாவை?**

**பொதுத்துறை நிறுவனங்களின் குறைந்த செயல்பாட்டிற்கான காரணிகள் :**

- கட்டுமான பணிகளை முடிப்பதில் ஏற்பட்ட தாமதத்தால் செலவுகள் அதிகரித்தது.
- நிர்வாகச் செலவுகள் அனைத்து நேரங்களிலும் கட்டுக்கடங்கி இருப்பது இல்லை.
- இதன் உற்பத்தி பொருட்களை தனியார் துறை உள்ளீடுகளாகப் பயன்படுத்துவது.
- பொதுத்துறை நிறுவனங்களில் தேவைக்கு அதிகமானோர் பணியமர்த்தப்பட்டனர்.

## IV. விரிவான விடையளிக்கவும்.

**1. ஊரக மறுசீரமைப்பு தொடர்பாக இந்திய அரசு பின்பற்றிய நடவடிக்கைகளை முன்னிலைப்படுத்துக.**

**ஊரக மறுசீரமைப்பு தொடர்பாக இந்திய அரசு பின்பற்றிய நடவடிக்கைகள் :**

**ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் (IRDP) - 1980 :**

- நோக்கம் - கிராமப்புற குடும்பங்களின் பொருளாதார நிலையை உயர்த்துவது.
- அவர்களுக்கு சில சொத்துக்களை வழங்கிட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது.
- இதன் மூலம் கிராமப்புற குடும்பங்கள் வறுமையில் இருந்து வெளியேவர இயலும்.
- தேர்ந்தெடுக்கப்பட்ட விவசாய குடும்பங்களுக்கு வங்கிக் கடன் வழங்கப்பட்டது.
- நிலத்தை மேம்படுத்திட உதவுதல், பசுக்கள் அல்லது ஆடுகளை வழங்குதல்.

KAVIN GUIDE 2020

**மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதிச் சட்டம் - 2005 :**

- நோக்கம் - கிராமப்புற ஏழைக் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை பாதுகாப்பது.
- ஆண்டுக்கு 100 நாட்களுக்கு ஊதியத்துடன் கூடிய வேலையை அளிக்கிறது.
- உடல் உழைப்பு வேலை செய்ய விரும்புபவர்களுக்கு ஒரு வாய்ப்பாக உள்ளது.
- பணிகள் - கிராமப்புற சாலைகள், கால்வாய்கள், நீர்நிலைகளை மீட்டெடுத்தல்.
- வேளாண் பணிகள் இல்லாத காலங்களில் வேலை வாய்ப்பு அளிக்கிறது.

## 2. சுதந்திர இந்தியாவில் ஏற்பட்ட கல்வி முன்னேற்றம் குறித்து மதிப்பிடுக.

### சுதந்திர இந்தியாவில் ஏற்பட்ட கல்வி முன்னேற்றம் :

- கல்வி ஒரு நாட்டின் சமூக வளர்ச்சியை மதிப்பிடுவதற்கான அளவுகோலாகும்.
- இந்தியாவில் ஆண்களில் 82% பெண்களில் 65% எழுத்தறிவு பெற்றுள்ளனர்.
- 1951 இல் 18.3% இருந்த எழுத்தறிவு நிலை 2011 இல் 74% ஆக உயர்ந்துள்ளது.
- தொடக்க மற்றும் உயர்நிலைப் பள்ளிகள், மேற்படிப்பு மையங்கள் அதிகரித்தது.
- 2014-15 இல் 12.72 லட்சம் தொடக்க மற்றும் உயர்தொடக்கப் பள்ளிகள் செயல்பட்டன.
- 2.45 லட்சம் இடைநிலை மற்றும் மேல்நிலை பள்ளிகள், 38,498 கல்லூரிகள் செயல்பட்டன.
- 43 - மத்தியப் பல்கலைக்கழகங்கள், 316 - மாநிலப் பல்கலைக்கழகங்கள் செயல்பட்டன.
- 22 - நிகர்நிலை பல்கலைக்கழகங்கள், 181 - தனியார் பல்கலைக்கழகங்கள் செயல்பட்டன.
- சேர்க்கை விகிதம் மற்றும் இடைநிற்றல் விகிதத்தில் பிராந்திய வேறுபாடுகள் நிலவின.
- இடைநிற்றல் பிரச்சனையை தீர்க்க அரசாங்கம் பல திட்டங்களை கொண்டு வந்தது.
  - அனைவருக்கும் கல்வித் திட்டம் (SSA)
  - அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டம் (RMSA)
  - ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி திட்டம் (சமக்ர சிக்ஷா அபியான்)

KAVIN GUIDE 2020

## 3. முதல் இரண்டு ஐந்தாண்டு திட்டங்களின் சாதனைகளை மதிப்பிடுக.

### முதல் இரண்டு ஐந்தாண்டு திட்டங்களின் சாதனைகள் :

**முதலாவது ஐந்தாண்டு திட்டம் (1951-56) :**

- வேளாண்மைத் துறைக்கு அதிக முக்கியத்துவம் வழங்கியது.
- வேளாண்மையின் வளர்ச்சிக்காக வேளாண் உற்பத்தியில் கவனம் செலுத்தியது.
- மொத்த முதலீட்டில் 31% வேளாண்மைக்கும் நீர்பாசனத்திற்கும் ஒதுக்கப்பட்டது.
- மொத்த முதலீட்டில் வேளாண்மைக்கான பங்கு 20% - 24% இடையே இருந்தது.
- 11 வது ஐந்தாண்டு திட்டத்தில் 20 விழுக்காட்டிற்கும் குறைவாக இருந்தது.

**இரண்டாவது ஐந்தாண்டு திட்டம் (1956-61) :**

- ◈ இத்திட்டம் பொதுவாக மகலனோபிஸ் திட்டம் என அறியப்பட்டது.
- ◈ கனரகத் தொழிற்சாலைகளுக்கு அதிக முக்கியத்துவம் வழங்கியது.
- ◈ 6% மாக இருந்த தொழில் துறையின் பங்கு 24% மாக உயர்ந்தது.
- ◈ பொதுத்துறையில் செய்யப்பட வேண்டிய முக்கிய முதலீடுகள் நிறைவு பெற்றன.
- ◈ எரிபொருள் மின்சக்திக்கான முதலீட்டு ஒதுக்கீடு மிகக்குறைவாக இருந்தது.

## 4. இந்திய விடுதலைக்குப் பின் ஏற்பட்ட அறிவியல் ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்கள் வளர்ச்சி குறித்து ஆய்க.

### அறிவியல் ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்கள் வளர்ச்சி :

**அறிவியல் ஆராயச்சி நிறுவனங்கள் :**

- ◈ 1909 இல் பெங்களூருவில் இந்திய அறிவியல் நிறுவனம் அமைக்கப்பட்டது.
- ◈ 1945 இல் டாட்டா அடிப்படை ஆராய்ச்சி நிறுவனம் நிறுவப்பட்டது.
- ◈ தேசிய வேதியியல் ஆய்வகம் - புனே, தேசிய இயற்பியல் ஆய்வகம் - புதுதில்லி.

**அறிவியல் மற்றும் தொழிலக ஆய்வு மன்றம் (CSIR) :**

- ◈ CSIR எனும் குடையின் கீழ் பல ஆய்வு நிறுவனங்கள் இயங்கி வருகின்றன.
- ◈ பயன்பாட்டு அறிவியல், மருந்துகள், விமானங்கள் குறித்து ஆய்வு செய்கிறது.

**அணுசக்தி ஆணையம் :**

- ◈ அணு அறிவியலின் வளர்ச்சிக்கு மைய முகமையாகத் திகழ்கிறது.
- ◈ அணுசக்தி மற்றும் அணு ஆயுத உற்பத்தி மீது கவனம் செலுத்தியது.
- ◈ அறிவியல் ஆய்வுகளுக்காக பல நிறுவனங்களுக்கு நிதியளிக்கிறது.

**வேளாண் ஆய்வுக் கழகம் :**

- ◈ வேளாண்மை துறையில் நடைபெறும் ஆய்வுகளை ஒருங்கிணைக்கிறது.
- ◈ வேளாண்மை, மீன்வளர்ப்பு, வனங்கள், பால்வளம் ஆகியன மேற்கொள்கிறது.
- ◈ இந்தியாவில் மொத்தம் 67 வேளாண்மைப் பல்கலைக்கழகங்கள் உள்ளன.

**இந்தியத் தொழில்நுட்ப நிறுவனங்கள் :**

- ◈ பொறியியலின் பல்வேறு பிரிவுகளுக்காக நிறுவப்பட்ட சிறப்பு நிறுவனங்களாகும்.
- ◈ IIT நிறுவப்பட்டுள்ள இடங்கள் - கரக்பூர், டெல்லி, பம்பாய், கான்பூர், சென்னை.
- ◈ இந்தியாவில் 23 - IIT, 31 - NIT, 23 - IIIT நிறுவனங்கள் செயல்படுகின்றது.

KAVIN GUIDE 2020

# அலகு - 11 புரட்சிகளின் காலம்

## I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

**1. வடஅமெரிக்காவில் முதன் முதலில் குடியேறிய ஐரோப்பியர்கள் ........................**

அ) போர்த்துகீசியர் ஆ) ஸ்பானியர் இ) டேனியர் **ஈ) ஆங்கிலேயர்**

**2. நியூ ஆம்ஸ்டர்டாமிற்கு ......................... என மறுபெயர் சூட்டப்பட்டது.**

அ) வாஷிங்டன் **ஆ) நியூயார்க்** இ) சிக்காகோ ஈ) ஆம்ஸ்டர்டாம்

**3. சரியான விடையைத் தேர்வு செய்க.**

**கூற்று :** ஆங்கிலேயர் நாவாய்ச் சட்டங்களை இயற்றினர்.

**காரணம் :** காலனி நாடுகளின் உற்பத்திப் பொருட்கள் ஆங்கிலேயக் கப்பல்களின் மூலமாக மட்டுமே ஏற்றுமதி செய்யப்பட வேண்டும் என்பதை இச்சட்டம் கட்டாயப்படுத்தியது.

**அ) கூற்று, காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.**

ஆ) கூற்று, காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.

இ) கூற்று சரி. காரணம் தவறு.

ஈ) கூற்று தவறு. காரணம் சரி.

**4. சரியான விடையைத் தேர்வு செய்க.**

**கூற்று :** 1770 இல் இங்கிலாந்து தேயிலையைத் தவிர ஏனைய பொருட்களின் மீதான வரிகளை ரத்து செய்தது.

**காரணம் :** காலனி நாடுகளின் மீது நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ வரிவிதிக்கும் உரிமை ஆங்கிலேய பாராளுமன்றத்திற்கு உண்டு என்பதை உறுதிப்படுத்தவே தேயிலையின் மீதான வரி தக்க வைத்துக் கொள்ளப்பட்டது.

**அ) கூற்று, காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.**

ஆ) கூற்று, காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.

இ) கூற்று சரி. காரணம் தவறு.

ஈ) கூற்று தவறு. காரணம் சரி.

**5. பாஸ்டன் தேநீர் விருந்து நிகழ்வு ........................ இல் நடைபெற்றது.**

அ) 1775 **ஆ) 1773** இ) 1784 ஈ) 1799

**6. சரியான விடையைத் தேர்வு செய்க.**

**கூற்று :** ஜார்ஜியா தவிர ஏனைய காலனிகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் பொறுத்துக் கொள்ள முடியாதச் சட்டங்கள் நீக்கப்பட வேண்டும் எனக் கோரினர்.

**காரணம் :** அதுவரையிலும் ஆங்கிலப் பொருட்களைப் புறக்கணிப்பது என காங்கிரஸ் முடிவு செய்தது.

KAVIN GUIDE 2020

**அ) கூற்று, காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.**

ஆ) கூற்று, காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.

இ) கூற்று சரி. காரணம் தவறு. ஈ) கூற்று தவறு. காரணம் சரி.

**7. கீழ்க்காணும் கூற்றுகளில் எது / எவைசரியானது / சரியானவை.**

**கூற்று I :** 1776 ஜூலை 4 இல் பதின்மூன்று காலனிகளும் இங்கிலாந்திடம் இருந்து விடுதலை பெற்றதாக அறிவித்தன.

**கூற்று II :** சுதந்திரப் பிரகடனத்தைத் தயாரித்ததில் தாமஸ் ஜெபர்சன் மிக முக்கியப் பங்கினை வகித்தார்.

அ) I ஆ) II இ) இரண்டும் தவறு **ஈ) இரண்டும் சரி**

**8. அமெரிக்க சுதந்திரப் போரில் ஆங்கிலப் படைகளுக்குத் தலைமை தாங்கியவர்.**

அ) ரிச்சட்டு லீ ஆ) ஜார்ஜ் வாஷிங்டன்

**இ) வில்லியம் ஹோவே** ஈ) ராக்கிங்காம்

**9. கீழ்க்காணும் கூற்றுகளில் எது / எவைசரியானது / சரியானவை?**

**கூற்று I :** பிரெஞ்சு சமூகத்தின் பெரும்பகுதி விவசாயிகளால் ஆனது.

**கூற்று II :** பிரெஞ்சு விவசாயிகள் பண்ணை அடிமைகளாய் இருந்தனர்.

**கூற்று III :** வாரத்தில் சில நாட்களில் விவசாயிகள் தங்கள் பிரபுக்களுக்காகச் சம்பளம் பெற்றுக் கொண்டு வேலை செய்தாக வேண்டும்.

**அ) I மற்றும் II** ஆ) II மற்றும் III இ) I மற்றும் III ஈ) அனைத்தும் சரி

**10. டென்னிஸ் மைதான உறுதிமொழிக்கு இட்டுச் சென்ற எதிப்புக்குத் தலைமையேற்ற பிரபு.**

அ) மாரட் ஆ) டாண்டன் இ) லஃபாயட் **ஈ) மிராபு**

**11. சரியான விடையைத் தேர்வு செய்க.**

**கூற்று :** வளர்ந்து கொண்டிருந்த பூர்ஷ்வாக்கள் தங்கள் சமூகத் தகுதிக்கு நிகரான அரசியல் அதிகாரம் வேண்டினர்.

**காரணம் :** அரசாங்கத்தில் செல்வாக்குப் பெற வேண்டும் என அவர்கள் விரும்பினர்.

**அ) கூற்று, காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.**

ஆ) கூற்று, காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.

இ) கூற்று சரி. காரணம் தவறு. ஈ) கூற்று தவறு. காரணம் சரி.

**12. கீழே கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைப் பொருத்தி சரியான விடையைத் தேர்ந்தெடுக்க.**

| | | |
|---|---|---|
| (அ) | மாண்டெஸ்கியூ | - 1. ஜேகோபியர்கள் |
| (ஆ) | வால்டர் | - 2. ஆங்கிலேய நாட்டுத் தத்துவவாதி |
| (இ) | பயங்கர ஆட்சி | - 3. பதினான்காம் லூயியின் காலம் |
| (ஈ) | ஜான் லாக் | - 4. சட்டங்களின் சாரம் |

அ) 1 3 4 2 **ஆ) 4 3 1 2** இ) 4 1 2 3 ஈ) 1 4 3 2

KAVIN GUIDE 2020

**13. பாஸ்டில் சிறை தகர்ப்பு ................................ இல் நடந்தது.**

அ) 1789, ஜூன் 5 **ஆ) 1789, ஜூலை 14** இ) 1789, நவம்பர் 11 ஈ) 1789, மே 1

**14. பிரெஞ்சுப் புரட்சியின் போது அறிவிக்கப்பட்ட மனிதன் மற்றும் குடிமக்கள் உரிமைகள் பிரகடனம் பெண்களைத் தவிர்த்துவிட்டதால் அதன் மேல் ........................ அதிருப்தி கொண்டிருந்தார்.**

**அ) ஒலிம்பே டி கோஜெஸ்** ஆ) மேரி அன்டாய்னெட்

இ) ரோஜெட் டி லிஸ்லி ஈ) ரோபஸ்பியர்

**15. பதினாறாம் லூயியின் அதிகாரபூர்வமான வசிப்பிடமாக இருந்தது.**

அ) வெர்செய்ல்ஸ் ஆ) தௌலன் இ) மார்செய்ல்ஸ் **ஈ) டியூலெர்ஸ்**

**16. ...................... நகரம் "காட்டன்பொலிஸ்" எனும் புனைப் பெயரைப் பெற்றது.**

**அ) மான்செஸ்டர்** ஆ) லங்காசயர் இ) லிவர்பூல் ஈ) கிளாஸ்கோ

**17. கீழே கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைப் பொருத்தி சரியான விடையைத் தேர்ந்தெடுக்க.**

| | | | |
|---|---|---|---|
| (அ) | மைக்கேல் பாரடே | - | ஆர்க்ரைட் |
| (ஆ) | எலியாஸ் ஹோவே | - | ராபர்ட் புல்டன் |
| (இ) | நீர்ச் சட்டகம் | - | மின்சாரம் |
| (ஈ) | நீராவிப் படகு | - | தையல் இயந்திரம் |

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ) | 1 | 3 | 4 | 2 |
| **இ)** | **3** | **4** | **1** | **2** |

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| ஆ) | 1 | 4 | 2 | 3 |
| ஈ) | 3 | 4 | 1 | 2 |

## II. குறுகிய விடையளிக்கவும்.

**1. வடஅமெரிக்காவின் ஐரோப்பியக் காலனிகள் பூர்வகுடி மக்கள் மீது எத்தகைய தாக்கத்தினை ஏற்படுத்தின?**

**வடஅமெரிக்காவின் ஐரோப்பியக் காலனிகள் பூர்வகுடி மக்கள் மீது ஏற்படுத்திய தாக்கம் :**

- ◈ பூர்வகுடிகள் நிலங்களை இழந்தோர்களாக ஆக்கப்பட்டனர்.
- ◈ பூர்வகுடிகளை அழித்தொழிக்க நோய்களை பரப்பச் செய்தனர்.
- ◈ தங்கம் தேடும் முயற்சியில் கிராமங்களில் பதுங்கி இருந்து கொடூரமாகத் தாக்கினர்.

**2. பாஸ்டன் தேநீர் விருந்து குறித்து நீங்கள் அறிந்தது என்ன?**

**பாஸ்டன் தேநீர் விருந்து குறித்து அறிவன :**

- ◈ 100 கிளர்ச்சியாளர்கள் அமெரிக்க பூர்வகுடிகளைப் போல் வேடம் தரித்தனர்.
- ◈ பாஸ்டன் துறைமுகத்தில் தேயிலை வந்திருந்த மூன்று கப்பல்களில் ஏறினர்.
- ◈ 342 தேயிலைப் பெட்டிகளைக் கடலுக்குள் வீசி எறிந்தனர்.

KAVIN GUIDE 2020

**3. அமெரிக்க விடுதலைப் போருக்கு தாமஸ் பெயினின் அறிவுத்திறன் சார்ந்த பங்களிப்பு என்ன?**

**அமெரிக்க விடுதலைப் போருக்கு தாமஸ் பெயினின் அறிவுத்திறன் சார்ந்த பங்களிப்பு :**

- "பொது அறிவு" (1776) என்ற தலைப்பில் துண்டு பிரசுரம் ஒன்றை எழுதினார்.
- குடியேற்றங்களின் கோரிக்கைகளை நியாயப்படுத்தி விவாதங்களை எழுதினார்.
- சுதந்திரம் குறித்து சாதாரண மக்களும் புரிந்து கொள்ளும் விதத்தில் எழுதினார்.

**4. சரடோகா போரின் முக்கியத்துவத்தைக் குறிப்பிடுக.**

**சரடோகா போரின் முக்கியத்துவம் :**

- 1777 இல் சரடோகா போர் முனையில் ஆங்கிலப் படைகள் தோல்வியை தழுவின.
- வாஷிங்டன் போர்த் தந்திரங்களின் வாயிலாக ஆங்கிலப் படைகளை வீழ்த்தினார்.
- ஆங்கிலப் படைத்தளபதி ஜெனரல் புர்கோய்ன்-ஐ சரணடையுமாறு நிர்ப்பந்தித்தார்.

**5. பண்டைய ஆட்சி முறையின் மூன்று எஸ்டேட்டுகளை விவாதிக்கவும்.**

**பண்டைய ஆட்சி முறையின் மூன்று எஸ்டேட்டுகள் :**

- பிரெஞ்சு சமூகம் மூன்று பிரிவுகளைக் (எஸ்டேட்டுகள்) கொண்டிருந்தது.
- 1. மதகுருமார்கள், 2. நிலப்பிரபுக்கள், 3. உரிமைகளற்ற சாதாரண மக்கள்.
- மதகுருமார்களும், பிரபுக்களும் பல சிறப்பு உரிமைகளை அனுபவித்தனர்.

**6. மனிதன் மற்றும் குடிமக்களின் உரிமைப் பிரகடனத்தின் சாரம்சத்தை அடிக்கோடிட்டுக் காட்டவும்.**

**மனிதன் மற்றும் குடிமக்களின் உரிமைப் பிரகடனத்தின் சாரம்சம் :**

- தனிமனித உரிமைகளையும் கூட்டு உரிமைகளையும் வரையறை செய்தது.
- பொது மக்களின் ஒப்புதலின்றி வரிகளை உயர்த்தக் கூடாது எனக் குறிப்பிட்டது.
- சட்டத்தின் முன் அனைவரும் சமமாக நடத்தப்பட வேண்டும் என வலியுறுத்தியது.

**7. தொழிற்புரட்சியின் சிறப்புக் கூறுகளை முன்னிலைப்படுத்திக் காட்டவும்.**

**தொழிற்புரட்சியின் சிறப்புக் கூறுகள் :**

- தொழிலில் அறிவியல் புகுத்தப்பட்டது. இரும்பு, எஃகு ஆகியவற்றின் பயன்பாடு.
- நிலக்கரி, நீராவி ஆகியவற்றின் பயன்பாடு. புதிய இயந்திரங்கள் கண்டுபிடிப்பு.
- போக்குவரத்து மற்றும் செய்தி தொடர்புகளில் ஏற்பட்ட முன்னேற்றங்கள்.

KAVIN GUIDE 2020

**8. சாமுவெல் சிலேட்டர் ஏன் அமெரிக்கத் தொழிற்புரட்சியின் தந்தை எனக் கருதப்படுகிறார்?**

**சாமுவெல் சிலேட்டர் அமெரிக்கத் தொழிற்புரட்சியின் தந்தை எனக் கருதப்பட காரணம் :**

- ◈ சாமுவேல் சிலேட்டரின் ஜவுளி ஆலை 1793 இல் செயல்படத் துவங்கியது.
- ◈ அமெரிக்காவில் நீர் உருளையால் இயக்கப்பட்ட முதல் ஜவுளி ஆலையாகும்.
- ◈ 1800 இல் சிலேட்டரின் ஆலையைப் போன்றே பல ஆலைகள் உருவாகின.

**9. பீட்டர்லூ படுகொலையின் பின்னணி யாது?**

**பீட்டர்லூ படுகொலையின் பின்னணி :**

- ◈ 1819 இல் தொழிலில் மந்தநிலை, உணவு பொருட்களின் விலையேற்றம் ஏற்பட்டது.
- ◈ 60,000 மக்கள் ஹென்றி ஹண்ட் தலைமையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.
- ◈ கூட்டத்தினர் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் 17 நபர்கள் கொல்லப்பட்டனர்.

## III. சுருக்கமான விடையளிக்கவும்.

**1. 1783 இல் கையெழுத்திடப்பட்ட பாரிஸ் உடன்படிக்கையின் முக்கியச் சரத்துக்களை விவாதிக்கவும்.**

**1783 இல் கையெழுத்திடப்பட்ட பாரிஸ் உடன்படிக்கையின் முக்கியச் சரத்துக்கள் :**

- ◈ 13 குடியேற்ற நாடுகளின் சுதந்திரத்தை இங்கிலாந்து அங்கீகரித்தது.
- ◈ அமெரிக்க ஐக்கிய நாடுகள் என்ற புதிய நாடு உருவானதை அங்கீகரித்தது.
- ◈ ஸ்பெயின் இங்கிலாந்திடம் இருந்து புளோரிடாவைப் பெற்றது.
- ◈ ஹாலந்தும் இங்கிலாந்தும் போருக்கு முன்பு இருந்த நிலையை பின்பற்றின.
- ◈ மேற்கே மிசிசிபி ஆறு, தெற்கே 31வது இணைகோடு அமெரிக்காவின் எல்லையானது.

**2. அமெரிக்க புரட்சியின் முக்கியத்துவத்தை பகுப்பாய்வு செய்க.**

**அமெரிக்க புரட்சியின் முக்கியத்துவம் :**

- ◈ மக்களாட்சி, குடியரசு போன்ற கோட்பாடுகள் மேலும் விரிவடைந்தது.
- ◈ குடியேறிய அனைவருக்கும் சுதந்திரத்தையும் வாய்ப்பையும் வழங்கியது.
- ◈ கல்வியின் முக்கியத்துவம் சிறப்பிடத்தைப் பெற்றது.
- ◈ கூட்டாட்சிக் கோட்பாடு பரவலானது.
- ◈ அமெரிக்க புரட்சி காலனிய ஆதிக்கத்திற்கு ஒரு பின்னடைவு ஆகும்.

KAVIN GUIDE 2020

**3. "1789 ஆம் ஆண்டு புரட்சிக்கு நீண்ட காலத்திற்கு முன்னதாகவே கருத்துக்களின் களத்தில் ஒரு புரட்சி நடந்தது" - விளக்குக.**

**"1789 ஆம் ஆண்டு புரட்சிக்கு நீண்ட காலத்திற்கு முன்னதாகவே கருத்துக்களின் களத்தில் ஒரு புரட்சி நடந்தது" :**

**மாண்டெஸ்கியூ :**

- மாண்டெஸ்கியூ - சட்டங்களின் சாரம் எனும் நூலின் ஆசிரியர்.
- அதிகாரங்கள் அனைத்தும் ஒரே இடத்தில் குவிக்கப்படுவதை எதிர்த்தார்.

**வால்டேர் :**

- வால்டேர் - பதினான்காம் லூயியின் காலம் எனும் நூலின் ஆசிரியர்.
- முடியாட்சி மன்னர்களின் கீழ் நடைபெற்ற பிரெஞ்சு நிர்வாகத்தை விமர்சித்தார்.

**ரூஸோ :**

- ரூஸோ - சமூக ஒப்பந்தம் எனும் நூலின் ஆசிரியர்.
- ஆள்பவர் நேர்மையற்று ஆட்சி புரிந்தால் தண்டிக்கப்பட வேண்டும் என்றார்.

**4. "செப்டம்பர் படுகொலைகள்" எதனால் ஏற்பட்டது?**

**"செப்டம்பர் படுகொலைகள்" ஏற்படக் காரணம் :**

- அரசியல் கைதிகள் சதி திட்டத்தில் இணையப் போவதாக மக்கள் நம்பினர்.
- இதன் விளைவாக மக்கள் கூட்டம் சிறைச்சாலைகளைத் தாக்கின.
- அரச குடும்ப ஆதரவாளர்கள் எனக் கருதப்பட்ட அனைவரும் கொல்லப்பட்டனர்.
- 1792 செப்டம்பர் 2 முதல் அடுத்த நான்கு நாட்களில் 1,200 கைதிகள் கொல்லப்பட்டனர்.

**5. தொழிற்புரட்சியின் இரண்டாம் கட்டத்தில் ஜெர்மனியில் நடந்தது என்ன?**

**தொழிற்புரட்சியின் இரண்டாம் கட்டத்தில் ஜெர்மனியில் நடந்தவை :**

- மோட்டார் வாகன உற்பத்தியில் தலைமை வகிக்கும் நாடாக மாறியது.
- இரும்பு, எஃகுத் தொழிலில் ஜெர்மனி தனது முத்திரையைப் பதித்தது.
- வேளாண்மையில் ரசாயனப் பொருட்களின் பயன்பாடு அறிமுகமானது.
- ஜவுளி சாயம், மின்சார சாதனங்கள் உற்பத்தியில் முக்கிய பங்கு வகித்தது.

KAVIN GUIDE 2020

## IV. விரிவான விடையளிக்கவும்.

### 1. அமெரிக்க விடுதலைப் போருக்கான காரணங்கள், அதன் போக்கு, விளைவுகள் குறித்து விவாதிக்கவும்.

**அமெரிக்க விடுதலைப் போருக்கான காரணங்கள் :**

- நாவாய் சட்டங்கள், சர்க்கரை வரி ஆகியவற்றை இங்கிலாந்து அறிமுகம் செய்தது.
- முத்திரை சட்டம், டவுன்ஷெண்ட சட்டம் ஆகியவற்றை அமெரிக்கர்கள் எதிர்த்தனர்.
- பாஸ்டன் படுகொலைக்கு எதிர் வினையாக பாஸ்டன் தேநீர் விருந்து அரங்கேறியது.
- பொறுத்துக்கொள்ள முடியாத சட்டங்கள், கியூபெக் சட்டம் ஆகியன இயற்றப்பட்டன.

**அமெரிக்க விடுதலைப் போரின் போக்கு :**

- 1776 ஜுலை 4 இல் 13 குடியேற்ற நாடுகளும் விடுதலை பெறுவதாக அறிவித்தன.
- புரூக்ளின், நியூயார்க், நியூஜெர்சி நகரில் ஆங்கிலேயப் படை வெற்றி பெற்றது.
- 1777 இல் சரடோகா போர் முனையில் அமெரிக்கப் படை வெற்றி பெற்றது.
- 1781 இல் யார்க்டவுன் போரில் இங்கிலாந்து படைகள் சரணடைந்தன.

**அமெரிக்க விடுதலைப் போரின் விளைவுகள் :**

- 1783 இல் பாரிஸ் அமைதி உடன்படிக்கை கையெழுத்தானது.
- அமெரிக்க ஐக்கிய நாடுகள் என்ற ஒரு புதிய நாடு உருவானது.
- ஜார்ஜ் வாஷிங்டன் அமெரிக்காவின் முதல் குடியரசு தலைவரானார்.
- மக்களாட்சி, குடியரசு போன்ற கோட்பாடுகள் மேலும் விரிவடைந்தது.

### 2. பாஸ்டில் சிறை தகர்ப்பு முதல் ரோபஸ்பியர் கொல்லப்பட்டது வரையிலுமான பிரெஞ்சுப் புரட்சியின் போக்கினை வரைக.

**பாஸ்டில் சிறை தகர்ப்பு முதல் ரோபஸ்பியர் கொல்லப்பட்டது வரையிலுமான பிரெஞ்சுப் புரட்சியின் போக்கு :**

**பாஸ்டில் சிறை தகர்ப்பு :**

- 1789 ஜுலை 14 இல் பாஸ்டில் சிறையை தகர்த்த மக்கள் கைதிகளை விடுவித்தனர்.

**தேசிய சட்டமன்றம் :**

- நிலமானிய முறையை ஒழித்தது. 1791 இல் புதிய அரசியலமைப்பை உருவாக்கியது.

**அரசியலமைப்பு உருவாக்கம் :**

- 1789 இல் மனிதன் மற்றும் குடிமகனின் உரிமைப் பிரகடனம் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

**வெர்செய்ல்ஸ் நோக்கி பெண்களின் அணிவகுப்பு :**

- வெர்செய்ல்ஸ் நோக்கி சென்ற பெண்கள் அரசரை தம்முடன் வர கட்டாயப்படுத்தினர்.

**ஆஸ்திரியா, பிரஷ்யாவுக்கு எதிரான போர் :**

- ஆஸ்திரியா, பிரஷ்யாவுக்கு எதிராக தேசிய சட்டமன்றம் போர் அறிவிப்பு செய்தது.

KAVIN GUIDE 2020

**தேசிய பேரவை :**

◈ தேசியப் பேரவை அரசரை சிறையில் அடைத்ததுடன் தேர்தல் நடத்தவும் முன்வந்தது.

**செப்டம்பர் படுகொலைகள் :**

◈ 1792 இல் அரச குடும்ப ஆதரவாளர்கள் எனக் கருதி 1200 கைதிகள் கொல்லப்பட்டனர்.

**16 ஆம் லூயி கொல்லப்படுதல் :**

◈ 1793 ஜனவரி 21 இல் 16 ஆம் லூயி கில்லட்டின் கொலைக் கருவியில் கொல்லப்பட்டார்.

**ஜேகோபியன்களின் ஆட்சி :**

◈ சர்வாதிகார ஆட்சி நடத்திய ரோபஸ்பியர் பல தலைவர்களை சிரச்சேதம் செய்தார்.

**ரோபஸ்பியர் தூக்கிலிடப்படல் :**

◈ சக உறுப்பினர்களால் குற்றம் சாட்டப்பட்ட ரோபஸ்பியர் 1794 இல் தூக்கிலிடப்பட்டார்.

**3. தொழிற்புரட்சி ஏன் முதலில் இங்கிலாந்தில் தொடங்கிற்று? நவீன சமூகத்தின் மீது அது என்ன தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது?**

**தொழிற்புரட்சி முதலில் இங்கிலாந்தில் தொடங்கக் காரணம் :**

◈ முதலாளிகள் வர்க்கம் முதலீடு செய்வதற்கான வாய்ப்புகளைத் தேடினர்.

◈ காலனிகளை உருவாக்கும் போட்டியில் இங்கிலாந்து மேலாதிக்கம் பெற்றது.

◈ இங்கிலாந்தின் மக்கள்தொகை வளர்ச்சிக்கு ஏற்ப சந்தைகளும் விரிவடைந்தன.

◈ நிலக்கரி, இரும்பு போன்ற வளங்கள் இங்கிலாந்தில் அதிக அளவில் கிடைத்தது.

◈ இங்கிலாந்தின் துறைமுகங்கள், புவியியல் அமைவிடம், மிதமான தட்ப வெப்பநிலை.

◈ வேளாண்மை இயந்திரமயமானது. பண்ணை முறை, பயிர் சுழற்சி முறை அறிமுகமானது.

**தொழிற்புரட்சி நவீன சமூகத்தின் மீது ஏற்படுத்தி உள்ள தாக்கம் :**

◈ ஆலைகள் இயந்திரமயமானதால் உற்பத்தி மிகப்பெருமளவு பெருகியது.

◈ செல்வம் பெருகியது. முதலாளிகள் என்ற சிறு குழுவிடமே செல்வம் குவிந்தது.

◈ இயந்திரங்களின் பயன்பாடு கைவினைத் தொழில்களைப் பாழ்படுத்தினர்.

◈ பெண்கள், குழந்தைகளிடம் இருந்து மலிவான விலையில் உழைப்பு பெறப்பட்டது.

◈ சுரங்கங்கள் ஆபத்து நிறைந்ததாகவும் சுகாதாரம் இல்லாததாகவும் இருந்தன.

◈ ஆலை முதலாளிகள், ஆலை தொழிலாளர்கள் என இரு வர்க்கங்கள் தோன்றின.

KAVIN GUIDE 2020

# அலகு - 13 ஏகாதிபத்தியமும் அதன் தாக்கமும்

## I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

**1. ஜெர்மனியின் முன்னேறி வந்து கொண்டிருந்த படைகளை பிரான்ஸ் வெற்றிகரமாக தடுத்து தோற்கடித்த போரின் பெயர் என்ன?**

**அ) மார்னே போர்** ஆ) டானென்பர்க் போர் இ) வெர்டுன் போர் ஈ) சோம் போர்

**2. "அரசின் தடையற்ற" (Laissez Faire) என்னும் பதத்தை உருவாக்கியவர் ..............**

அ) ஜான் A. ஹாப்சன் ஆ) கார்ல் மார்க்ஸ் இ) ஃபிஷர் **ஈ) கௌர்னே**

**3. *An Inquiry into the Nature and Cause of the Wealth of Nations* என்ற நூலை எழுதியவர் ........................... ஆவார்.**

**அ) ஆடம் ஸ்மித** ஆ) தாமஸ்பைன் இ) குஸ்னே ஈ) கார்ல் மார்க்ஸ்

**4. இங்கிலாந்து .............................. ஆம் ஆண்டில் தடையற்ற வணிகக் கொள்கையைப் பின்பற்றத் துவங்கியது.**

**அ) 1833** ஆ) 1836 இ) 1843 ஈ) 1858

**5. ..................... க்குப் பின் ஷிமனோசெகி ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது.**

அ) ரஷ்ய-ஜப்பனியப் போர் ஆ) இரண்டாம் அபினிப் போர்

இ) இரண்டாம் ஆங்கிலோ-சீனப் போர் **ஈ) சீன-ஜப்பானியப் போர்**

**6. போர்ட்ஸ்மவுத் ஒப்பந்தம் ஏற்படும் பொருட்டு மத்தியஸ்தம் புரிந்த நாடு ......................**

அ) ஸ்பெயின் ஆ) பிரிட்டன் **இ) அமெரிக்க ஐக்கிய நாடு** ஈ) பிரான்ஸ்

**7. எந்த நாடு 21 நிர்ப்பந்தங்களை புதிதாக உருவாக்கப்பட்ட சீன குடியரசின் தலைவர் முன் சமர்ப்பித்தது?**

அ) பிரான்ஸ் ஆ) ரஷ்யா **இ) ஜப்பான்** ஈ) பிரிட்டன்

**8. ................ ஐ அடிப்படையாக கொண்டு அல்பேனியா எனும் புது நாடு உருவாக்கப்பட்டது.**

அ) புக்காரெஸ்ட் உடன்படிக்கை, 1913 ஆ) வெர்செய்ல்ஸ் உடன்படிக்கை, 1919

**இ) லண்டன் உடன்படிக்கை, 1913** ஈ) செயின்ட் ஜெர்மெய்ன் உடன்படிக்கை

**9. கீழ்க்காண்பனவற்றுள் எந்நாடு மைய நாடுகள் சக்தியில் அங்கம் வகிக்கவில்லை?**

அ) பல்கேரியா ஆ) ஆஸ்திரிய-ஹங்கேரி இ) துருக்கி **ஈ) மான்டிநீக்ரோ**

**10. பாரிசை நெருங்கிக் கொண்டிருந்த தாக்குதலை உணர்ந்து பிரெஞ்சு அரசு ................ பகுதிக்கு நகர்ந்து சென்றது.**

அ) மார்செல்லிஸ் **ஆ) போர்டியாக்ஸ்** இ) லியோன்ஸ் ஈ) வெர்செய்ல்ஸ்

KAVIN GUIDE 2020

**11. கீழ்க்காண்பனவற்றுள் வெர்செய்ல்ஸ் ஒப்பந்தத்தின் பகுதியாக கருதப்படாதது எது?**

அ) ஜெர்மனி அல்சேஸ் மற்றும் லொரைன் பகுதிகளை பிரான்சிடம் ஒப்படைக்க வேண்டும்

ஆ) சார் பள்ளத்தாக்கு பிரான்சிற்கு வழங்கப்பட வேண்டும்

இ) ரைன்லாந்தை தோழமை நாடுகள் ஆக்கிரமித்துக் கொள்ள வேண்டும்

**ஈ) டான்சிக் போலந்தின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு செல்லப்பட வேண்டும்**

## II. குறுகிய விடையளிக்கவும்.

**1. ஜெர்மனி பிரான்சை தனிமைப்படுத்த முனைந்தது ஏன்?**

**ஜெர்மனி பிரான்சை தனிமைப்படுத்த முனைந்ததன் பின்னணி :**

- ◈ அல்சேஸ், லொரைனை இழந்தமைக்காக பிரான்ஸ் பழிவாங்கும் என்ற அச்சம்.
- ◈ 1871 - பிராங்கோ பிரஷ்ய போர் தோல்விக்கு பிரான்ஸ் பழிவாங்க நினைத்தது.
- ◈ தாதுவளம் மிக்க மொராக்கோ பகுதியை பிரான்ஸ் கைப்பற்ற நினைத்தது.

**2. பிரிட்டனுக்கும் பிரான்சுக்கும் இடையே 1904 இல் கையெழுத்திடப்பட்ட நாடுகளுக்கு இடையே நட்புறவின் (Entente Cordiale) முக்கியத்துவம் யாது?**

**1904 இல் கையெழுத்திடப்பட்ட நாடுகளுக்கு இடையே நட்புறவின் முக்கியத்துவம் :**

- ◈ மொராக்கோ, எகிப்து சார்ந்த பிணக்குகளைத் தீர்க்க முன்வந்தது.
- ◈ மொராக்கோவில் பிரான்ஸ் தன்னிச்சையாக செயல்பட அனுமதித்தது.
- ◈ பிரிட்டன் எகிப்தை ஆக்கிரமித்ததை பிரான்ஸ் அங்கீகாரித்தது.

KAVIN GUIDE 2020

**3. பால்கன் சிக்கலின் விளைவுகள் உள்ளடக்கிய சிறப்புக் கூறுகளை எழுதுக.**

**பால்கன் சிக்கலின் விளைவுகள் :**

- ◈ பல்கேரியர்கள் செர்பியர்களை பழிவாங்கத் துடித்தனர்.
- ◈ செர்பியர்கள் மிதமிஞ்சிய வெற்றிக் களிப்பில் திளைத்தனர்.
- ◈ ஆஸ்திரியாவுக்கு எதிரான போராட்டம் செர்பியா, போஸ்னியாவில் தீவிரமானது.

**4. "மூவர் தலையீடு" எனப்படுவது யாது?**

**மூவர் தலையீடு :**

- ◈ ஜப்பானின் வளர்ச்சியைக் கண்டு ஐரோப்பிய சக்திகள் அச்சம் கொண்டன.
- ◈ 1895 இல் இங்கிலாந்து, பிரான்ஸ், ரஷ்யா ஆகிய நாடுகள் செய்த குறுக்கீடு.
- ◈ ஜப்பானை லியோடுங் தீபகற்பத்தை ஒப்படைக்கும்படி செய்ததே மூவர் தலையீடு.

**5. முதல் உலகப் போரின் காலத்தில் கிழக்கு திசையில் வான் ஹிண்டன்பர்க் ஆற்றிய பங்கை விளக்குக.**

**முதல் உலகப் போரில் கிழக்கு திசையில் வான் ஹிண்டன்பர்க் ஆற்றிய பங்கு :**

- ◈ ரஷ்யப் படைகள் பிரஷ்யாவின் கிழக்குப் பகுதி வரை ஊடுருவிச் சென்றன.
- ◈ டானென்பர்க் போரில் ஹிண்டன்பர்கிடம் ரஷ்யா பேரிழப்புகளை சந்தித்தது.
- ◈ ஹிண்டன்பர்க் ரஷ்யர்களின் போலந்தை தாக்கப் படையெடுத்துச் சென்றார்.

**6. ஜட்லாந்து போரின் முக்கியத்துவம் பற்றி எடுத்தியம்புக.**

**ஜட்லாந்து போரின் முக்கியத்துவம் :**

- ◈ முடிவுபடாத ஒரு போராகவும் மிகப்பெரும் கடற்போராகவும் அமைந்தது.
- ◈ நீர்மூழ்கி கப்பல்களுக்கு தடை ஏற்படுத்துவதை ஜெர்மானி கண்டித்தது.
- ◈ நேச நாடுகளின் கப்பல்களை தடையின்றி தாக்க அதிகாரம் வழங்கியது.

## III. சுருக்கமான விடையளிக்கவும்.

**1. முதல் மொராக்கோ சிக்கல் எவ்வாறு நிகழ்ந்தது?**

**முதல் மொராக்கோ சிக்கல் :**

- ◈ இங்கிலாந்துடன் ஏற்பட்ட புரிதலை முன்னிறுத்தி பிரான்ஸ் செயல்பட துவங்கியது.
- ◈ 1905 இல் பிரெஞ்சு தூதுக்குழு மொராக்கோவின் ஃபெஸ் நகரை சென்றடைந்து.
- ◈ ஃபெஸ் நகரை பிரான்சின் பாதுகாப்பிற்குட்பட்ட பகுதியாக கருதி செயல்பட்டது.
- ◈ ஜெர்மனி கடும் எதிர்ப்பை தெரிவித்தது. ஆனால் பிரிட்டன் பிரான்சை ஆதரித்தது.

**2. அகழிப் போர் எவ்வாறு நடத்தப்பட்டது?**

**அகழிப் போர் நடத்தப்பட்ட விதம் :**

- ◈ வீரர்கள் தமது உடலையும் உயிரையும் பாதுகாக்க அகழிகளை தோண்டினர்.
- ◈ குண்டுகள் வெளியிட்ட தீயில் இருந்து வீரர்களைப் பாதுகாக்க உதவியது.
- ◈ இரண்டு முதல் நான்கு அகழிகள் ஒன்றுக்கொன்று இணையாக இருந்தன.
- ◈ உணவு, வெடிபொருள்கள், புதிய துருப்புகள், கடிதங்கள் ஆகியன வந்தன.

**3. மிக ஆபத்தான U - படகுகள் மற்றும் Q - கப்பல்கள் பற்றி நீவீர் அறிந்தது என்ன?**

**U - படகுகள் :**

- ◈ ஜெர்மனி வைத்திருந்த மிக அச்சுறுத்தும் ஆயுதம் U - படகுகள் (நீர்மூழ்கிகள்).
- ◈ ஒரே மாதத்தில் 8,80,000 டன் கனத்திற்கு பிரிட்டன் கப்பல்களை மூழ்கடித்தது.

**Q - கப்பல்கள் :**

- ◈ ஜெர்மனியின் U - படகு தாக்குதலுக்கு பதிலடியே பிரிட்டனின் Q - கப்பல்கள் ஆகும்.
- ◈ ஜெர்மனியை தாக்குதலுக்கு தூண்டச் செய்து மறைந்து இருந்து பதிலடி கொடுத்தது.

KAVIN GUIDE 2020

**4. போரில் அமெரிக்கா நுழைந்த பிறகு நிகழ்ந்தவற்றை வரிசைக்கிரமமாக எடுத்துக் கூறுக.**

**போரில் அமெரிக்கா நுழைந்த பிறகு நிகழ்ந்தவை :**

◈ அமெரிக்கா போரில் இறங்கியது நேச நாடுகளின் வெற்றியை உறுதி செய்தது.

◈ 1918 நவம்பர் 3 இல் ஆஸ்திரியா போர் நிறுத்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.

◈ முதலில் பல்கேரியா சரணடைத்தது. துருக்கி போர் நிறுத்த ஒப்பந்தம் விரும்பியது.

◈ கெய்சர் ஹாலந்திற்கு தப்பி ஓடினார். நவம்பர் 11 இல் ஜெர்மனி சரணடைத்தது.

## IV. விரிவான விடையளிக்கவும்.

**1. முதல் உலகப்போரின் காரணங்களையும், விளைவுகளையும் கணக்கிடுக.**

**முதல் உலகப்போரின் காரணங்கள் :**

**கூட்டணி முறையின் பரிணாமம் :**

◈ 1882 இல் ஜெர்மனி, ஆஸ்திரியா, இத்தாலி இணைந்து மூவர் கூட்டணி உருவானது.

◈ 1907 இல் பிரிட்டன், பிரான்ஸ், ரஷ்யா இணைந்து முக்கூட்டு நட்பு உருவானது.

**மொராக்கோ பிரச்சனை :**

◈ 1905 இல் பிரெஞ்சு தூதுக்குழு மொராக்கோவின் ஃபெஸ் நகரை சென்றடைந்து.

◈ ஜெர்மனி கடும் எதிர்ப்பை தெரிவித்தது. ஆனால் பிரிட்டன் பிரான்சை ஆதரித்தது.

**போஸ்னிய சிக்கல் :**

◈ தனது பாதுகாப்பில் இருந்த போஸ்னியாவை இணைப்பதாக ஆஸ்திரியா அறிவித்தது.

◈ கொந்தளித்த செர்பியா மற்றும் ரஷ்யா சரியான நேரத்தை எதிர்நோக்கி காத்திருந்தது.

**பால்கன் போர்கள் :**

◈ 1912 இல் நடந்த முதல் பால்கன் போரில் துருக்கி மோசமாகத் தோல்வி அடைந்தது.

◈ 1913 இல் நடந்த இரண்டாவது பால்கன் போரில் பல்கேரியா தோல்வி அடைந்தது.

**உடனடிக் காரணம் :**

◈ ஆஸ்திரிய இளவரசர் போஸ்னியாவில் ஒரு செர்பிய மாணவனால் கொல்லப்பட்டார்.

◈ 1914 ஜூலை 28 இல் ஆஸ்திரியா, போர் பிரகடனம் செய்து செர்பியாவை தாக்கியது.

**முதல் உலகப்போரின் விளைவுகள் :**

◈ ஜனவரி 1919 இல் நட்பு நாடுகள் பாரிஸ் அமைதி மாநாட்டை துவங்கியது.

◈ முதல் உலகப் போரின் முக்கிய விளைவு 1917 - ரஷ்யப் புரட்சியே ஆகும்.

◈ உலக அமைதியை காக்க 1920 இல் பன்னாட்டு சங்கம் உருவாக்கப்பட்டது.

◈ அமெரிக்க குடியரசு தலைவர் உட்ரோ வில்சன் 14 சரத்து திட்டம் அறிவித்தார்.

◈ 1919 ஜூன் 28 இல் அமைதி உடன்படிக்கையில் ஜெர்மனி கையெழுத்திட்டது.

◈ ஆஸ்திரியாவுடன் - செயின்ட் ஜெர்மெய்ன் உடன்படிக்கை செய்து கொண்டன.

◈ பல்கேரியாவுடன் - நியூலி, துருக்கியுடன் -செவ்ரெஸ் ஒப்பந்தம் கையெழுத்தானது.

KAVIN GUIDE 2020

**2. வெர்செய்ல்ஸ் ஒப்பந்தம் ஜெர்மனியைப் பொறுத்தமட்டில் கடுமையானதாகவும், அவமானப்படுத்தக் கூடியதாகவும் தெரிந்தது - இக்கூற்றினுக்கான ஆதாரப் பின்புலத்தை உறுதிப்படுத்துக.**

**வெர்செய்ல்ஸ் ஒப்பந்தம் ஜெர்மனியைப் பொறுத்தமட்டில் கடுமையானதாகவும், அவமானப்படுத்தக் கூடியதாகவும் தெரிந்தது :**

- அல்சேஸ், லொரைன், சார் பள்ளத்தாக்கின் நிலக்கரி சுரங்கங்கள் ஆகியவற்றை ஜெர்மனி பிரான்சிடம் ஒப்படைக்க வேண்டும்.
- சார் பகுதியை 1935 வரை பன்னாட்டு சபை நிர்வகிக்கும். போலந்தை ஒன்றிணைத்து பால்டிக் கடல் வெளிக்கு பாதை அமைப்பது.
- உரிமைகள், பட்டங்கள், கடல்வெளியில் ஜெர்மனி வைத்திருந்த பகுதிகள் அனைத்தையும் விட்டுக் கொடுக்க கட்டாயப்படுத்தியது.
- ரைன் பள்ளத்தாக்கில் அரண்களை அமைக்கவோ, படைகளைக் குவிக்கவோ ஜெர்மனிக்கு தடை விதிக்கப்பட்டது.
- ரைன்லாந்தை தோழமை நாடுகள் ஆக்கிரமித்தன. ரைன் நதியின் கிழக்கு கரைப்பகுதியை இராணுவக் கட்டுப்பாடுகளில் இருந்து விடுவித்தன.
- பின்லாந்து, எஸ்டோனியா, லாட்வியா, லிதுவேனியா ஆகியவற்றை சுதந்திர குடியரசுகளாக மாற்றவும் உத்தேசிக்கப்பட்டது.
- ஜெர்மனி தனது நீர்மூழ்கிக் கப்பல்கள் மற்றும் போர்க் கப்பல்களை இழந்தது. ஜெர்மனி போர் விமானங்களை வைத்திருக்கக் கூடாது.
- தரைப்படை அதிகாரிளையும் பணியாளர்களையும் சேர்த்து ஜெர்மன் இராணுவம் 1,00,000 என்ற எண்ணிக்கையை தாண்டக்கூடாது.
- ஜெர்மனியும், ஆஸ்திரியாவும் ஐக்கியமாதலை தவிர்க்க ஆஸ்திரியாவின் சுதந்திரத்தை அங்கீகரிக்க வற்புறுத்தப்பட்டது.
- ஜெர்மனியும் அதன் கூட்டு நாடுகளுமே போர் இழப்புகள் மற்றும் சேதங்களுக்கு பொறுப்பு என்று அறிவிக்கப்பட்டது.
- ஜெர்மன் பேரரசர் மீது நன்னடத்தை மீறல், ஒப்பந்தங்களை மதிக்கத் தவறியது போன்ற குற்றங்கள் சுமத்தப்பட்டது.

KAVIN GUIDE 2020

# அலகு - 14

# இரண்டாம் உலகப்போரும் காலனிய நாடுகளில் அதன் தாக்கமும்

## I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

**1. கீழ்க்காண்பனவற்றுள் இரண்டாம் உலகப்போர் உருவாக எது காரணமாக இருக்கவில்லை?**

அ) ஜெர்மனியோடு ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் நீதியற்ற தன்மை

ஆ) பன்னாட்டு சங்கத்தின் தோல்வி இ) 1930 களில் ஏற்பட்ட பொருளாதாரப் பெருமந்தம்

**ஈ) காலனிய நாடுகளில் ஏற்பட்ட தேசிய விடுதலை இயக்கங்கள்**

**2. கெல்லாக் - பிரையாண்ட் ஒப்பந்தம் .................. ஆண்டில் கையெழுத்தானது.**

அ) 1927 **ஆ) 1928** இ) 1929 ஈ) 1930

**3. சரியான விடையைத் தேர்வு செய்க.**

**கூற்று :** ஆயுதக் குறைப்பு மாநாடு பன்னாட்டு சங்கத்தால் ஜெனீவாவில் நடத்தப்பட்டது.

**காரணம் :** பிரான்சுக்கு சமமாக ஜெர்மனி தளவாடங்களை கொண்டிருக்க முயல்வது பேச்சுவார்த்தைகளின் ஒரு முக்கிய அம்சமாகத் தோன்றியது.

அ) கூற்றும், காரணமும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.

**ஆ) கூற்றும், காரணமும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.**

இ) கூற்று சரி. காரணம் தவறு. ஈ) கூற்று தவறு. காரணம் சரி.

**4. சீனாவிடமிருந்து மஞ்சூரியாவை ஜப்பான் எந்த ஆண்டு படையெடுத்து கைப்பற்றியது?**

**அ) 1931** ஆ) 1932 இ) 1933 ஈ) 1934

**5. பத்தொன்பதாம் நூற்றாண்டின் முடிவில் ஐரோப்பியக் கண்டத்திற்குள் தொழிற்துறையில் வலிமையான சக்தியாக .................. நாடு உருவாகியிருந்தது.**

அ) பிரான்ஸ் ஆ) ஸ்பெயின் **இ) ஜெர்மனி** ஈ) ஆஸ்திரியா

**6. வெர்செய்ல்ஸ் ஒப்பந்தத்தின் சரத்துகளின்படி ஜனவரி 1935 இல் ..................... பகுதியில் பொதுவாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்று முடிவானது.**

அ) சூடட்டன்லாந்து ஆ) ரைன்லாந்து **இ) சார்** ஈ) அல்சேஸ்

**7. சரியான விடையைத் தேர்வு செய்க.**

**கூற்று :** இரண்டாம் உலகப்போரின் காலத்தில் போர்முறைகள் பெரிதும் மாற்றமடைந்திருந்தன.

**காரணம் :** அகழிப்போர் முறை ஒதுக்கப்பட்டு விமான குண்டுவீச்சு பிரபலமானது.

**அ) கூற்று, காரணம் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.**

ஆ) கூற்று, காரணம் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.

இ) கூற்று சரி. காரணம் தவறு. ஈ) கூற்று தவறு. காரணம் சரி.

KAVIN GUIDE 2020

8. ஜெர்மனி 1939 இல் ஆக்கிரமிப்பு தவிர்ப்பு ஒப்பந்தம் ஒன்றை ........................ நாட்டோடு ஏற்படுத்திக் கொண்டது.

அ) ஆஸ்திரியா ஆ) இத்தாலி **இ) ரஷ்யா** ஈ) பிரிட்டன்

9. பேர்ல் துறைமுகத்தை ஜப்பான் தாக்குவதற்குத் திட்டம் வகுத்தவர் .................. ஆவார்.

**அ) யாமமோடோ** ஆ) ஸ்கூஸ்னிக்

இ) இரண்டாம் கெய்சர் வில்லியம் ஈ) ஹிரோஹிடோ

10. குடியரசுத் தலைவர் ரூஸ்வெல்ட் அறிமுகப்படுத்திய கடன்-குத்தகை முறை ...................... வகையில் உதவி புரிந்தது.

**அ) பாசிச சக்திகளை எதிர்த்துப் போராடிக் கொண்டிருக்கும் நாடுகளுக்கு கூடுதல் வீரர்களை அனுப்புதல்**

ஆ) யூதர்களை ஹிட்லரின் படைகள் கட்டவிழ்த்துவிட்ட கொலைவெறித் தாக்குதலில் இருந்து பாதுகாத்தல்

இ) தோழமை நாடுகளின் வளங்களை பெருக்கி, அவர்களுக்கு தேவையான ஆயுதங்களையும், வெடிபொருட்களையும் வழங்குதல்

ஈ) இரண்டாம் உலகப்போரில் காயமடைந்தோருக்கு மருத்துவ வசதிகளை ஏற்படுத்துதல்

11. அமெரிக்க ஐக்கிய நாட்டின் படைகளை ஆகஸ்ட் 1942 இல் பசிபிக் பகுதியில் தலைமை ஏற்று வழிநடத்தியவர் .......................... ஆவார்.

**அ) மெக்ஆர்தர்** ஆ) ஐசன்ஹோவர் இ) ஜெனரல் டி கால் ஈ) ஜார்ஜ்மார்ஷல்

12. ஜப்பானிய கடற்படையை அமெரிக்க ஐக்கிய நாட்டின் கடற்படை தோற்கடித்தமை ................ போரிலாகும்.

அ) பிரிட்டன் ஆ) குவாடல்கனல் இ) எல் அலாமின் **ஈ) மிட்வே**

13. ஜெர்மானியப் படைகள் முதல் பின்னடைவை சந்தித்தது ................ என்னுமிடத்தில் ஆகும்.

அ) போட்ஸ்டாம் **ஆ) எல் அலாமின்** இ) ஸ்டாலின்கிராட் ஈ) மிட்வே

14. கீழ்க்காண்பனவற்றுள் போட்ஸ்டாம் மாநாட்டின் அறிவிப்புகளில் அடங்காத ஒன்று எது?

அ) கிழக்கு பிரஷ்யா இரு பகுதிகளாகப் பிரிக்கப்பட வேண்டும் : அதில் வடக்குப் பகுதி சோவியத் நாட்டையும், தென் பகுதி போலந்தையும் சென்று சேரும்.

ஆ) முன்பு சுதந்திர நகரமாக இருந்த டான்சிக் போலந்தின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு சேர்க்கப்படும்.

இ) ஜெர்மனி நான்கு தொழில் மண்டலங்களாக பிரிக்கப்பட்டு, பிரித்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு பகுதியும் முறையே சோவியத் நாடு, பிரிட்டன், அமெரிக்க ஐக்கிய நாடு, பிரான்ஸ், ஆகியவைகளின் கட்டுப்பாட்டில் விடப்படும்.

**ஈ) ட்ரிஸ்டியை A மண்டலம் என்றும் B மண்டலம் என்றும் பிரிப்பது என்றானது. A மண்டலம் இத்தாலிக்கு கொடுக்கப்படவும், B மண்டலம் யுகோஸ்லோவியாவிற்கு வழங்கப்படவும் முடிவு செய்யப்பட்டது.**

KAVIN GUIDE 2020

**15. கீழ்க்காண்பனவற்றுள் இரண்டாம் உலகப்போரின் விளைவுகளில் சேராத ஒன்று எது?**

அ) இரண்டாம் உலகப்போர் ஐரோப்பாவில் இருந்த பல முடியரசுகளுக்கு மரண அடி கொடுத்தது.

ஆ) பிரிட்டனில் தொழிலாளர் கட்சி ஒரு பொதுநல அடிப்படை கொண்ட நாட்டை உருவாக்கியது.

**இ) பாசிசவாதத்திற்கு எதிரான போராட்டம் ஏகாதிபத்தியத்திற்கு வெற்றியை வழங்கியது.**

ஈ) அமெரிக்க ஐக்கிய நாடும், சோவியத் நாடும் இரு வல்லரசுகளாக உருவெடுத்தன.

**16. கீழ் பொருத்தப்பட்டிருப்பவையில் சரியான இணைகள் எது?**

(1) ஜெனரல் டி கால் - பிரான்ஸ்

(2) ஹேல் செலாஸி - எத்தியோப்பியா

(3) ஜெனரல் படோக்லியோ - ஜப்பான்

(4) அட்மிரல் யாம்மோடோ - இத்தாலி

**அ) (1) மற்றும் (2)** ஆ) (2) மற்றும் (3)

இ) (3) மற்றும் (4) ஈ) அனைத்தும்

## II. குறுகிய விடையளிக்கவும்.

**1. கெல்லாக் - பிரையாண்ட் உடன்படிக்கையின் முக்கியத்துவத்தை எடுத்தியம்புக.**

**கெல்லாக் - பிரையாண்ட் உடன்படிக்கையின் முக்கியத்துவம் :**

- 1928 இல் கெல்லாக் - பிரையாண்ட் ஒப்பந்தம் கையெழுத்தானது.
- அமெரிக்கா உட்பட பல உலக நாடுகள் கூட்டத்தில் கலந்து கொண்டது.
- உலக நாடுகள் அனைத்தும் "போரை கைவிடுவது என்பதை தங்களின் தேசிய கொள்கையாக" ஏற்க உறுதிமொழி எடுத்துக் கொண்டன.

**2. பன்னாட்டு சங்கத்தில் இருந்து 1933 ஆம் ஆண்டில் ஜெர்மனி ஏன் வெளியேறியது?**

**பன்னாட்டு சங்கத்தில் இருந்து 1933 ஆம் ஆண்டில் ஜெர்மனி வெளியேற காரணம் :**

- பிரான்சிற்கு இணையாக ஜெர்மனியும் மறுஆயுதமயமாக்கல் கோரிக்கை விடுத்தது.
- பிரெஞ்சுக்காரர்கள் இந்த கோரிக்கைக்கு உடன்பட மறுத்துவிட்டனர்.
- 1933 இல் ஜெர்மனி மாநாட்டிலிருந்தும், பன்னாட்டு சங்கத்திலிருந்தும் வெளியேறியது.

**3. ரோம் - பெர்லின் அச்சின் உருவாக்கத்திற்குப் பின்புலமாக அமையப்பெற்றது எது?**

**ரோம் - பெர்லின் அச்சின் உருவாக்கத்திற்குப் பின்புலம் :**

- முசோலினியின் எத்தியோப்பிய படையெடுப்பை பிரிட்டனும் பிரான்சும் கண்டித்தன.
- ஹிட்லர் இத்தாலியோடு நெருங்கிய நட்பை வளர்த்துக் கொள்ள விரும்பினார்.
- ஹிட்லாரும் முசோலினியும் இணைந்து ரோம் - பெர்லின் அச்சு உருவாக்கினர்.

KAVIN GUIDE 2020

**4. மூனிச் ஒப்பந்தத்தின் கூறுகள் யாவை?**

**மூனிச் ஒப்பந்தத்தின் கூறுகள் :**

- மூனிச் மாநாட்டில் பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி கலந்து கொண்டன.
- சூடட்டன்லாந்தை ஜெர்மானிய படைகள் ஆக்கிரமித்துக் கொள்ள அனுமதித்தது.
- செக்கோஸ்லோவாகியா பகுதிகளை போலந்து, ஹங்கேரிக்கு பிரித்து கொடுப்பது.

**5. டங்கிர்க் வெளியேற்றம் குறித்து நீவீர் அறிவது யாது?**

**டங்கிர்க் வெளியேற்றம் :**

- 1940 மே - ஜூனில் 1,98,000 பிரிட்டிஷ் துருப்புகள், 1,40,000 நேச நாடுகளின் துருப்புகள் டங்கிர்க் கடற்கரைக்கு விரட்டப்பட்டனர்.
- கடும் துப்பாக்கி முழக்கங்களுக்கு இடையே படகுகளிலும், சிறு கப்பல்களிலும் புறப்படும் நிலை ஏற்பட்டு வெளியேறினர்.

**6. பேர்ல் துறைமுகத்தை ஜப்பான் தாக்கியதன் முக்கியத்துவத்தை முன்னிலைப்படுத்துக.**

**பேர்ல் துறைமுகத்தை ஜப்பான் தாக்கியதன் முக்கியத்துவம் :**

- அமெரிக்கா ஜப்பான் மீது போர்ப் பிரகடனம் செய்தது.
- முழுமையான உலகப்போருக்கு வழி வகுத்தது.
- பிரிட்டனும், சீனாவும் அமெரிக்க நாட்டுடன் கைகோர்த்தன.

**7. அட்லாண்டிக் பட்டயத்தின் சிறப்புக் கூறுகளைப் பட்டியலிடுக.**

**அட்லாண்டிக் பட்டயத்தின் சிறப்புக் கூறுகள் :**

- மக்களின் ஒப்புதல் இல்லாமல் பிரதேச சீரமைப்புகள் ஏற்படுத்த முடியாது.
- அரசைத் தேர்ந்தெடுக்க முழு உரிமை கொண்டவர்கள் குடிமக்களே.
- தடையின்றி கடல்கடந்து செல்வதற்கான சுதந்திரத்தை உறுதிப்படுத்துதல்.

KAVIN GUIDE 2020

## III. சுருக்கமான விடையளிக்கவும்.

**1. ஸ்டாலின்கிராடை ஆக்கிரமிப்பதற்கு ஹிட்லர் ஏன் அதிக அக்கறை கொண்டார்? அது அவரின் "வாட்டர்லூவாக" மாறிப்போனது எவ்வாறு என்பதனை சுட்டுக.**

**ஸ்டாலின்கிராடை ஆக்கிரமிப்பதற்கு ஹிட்லர் ஏன் அதிக அக்கறை கொண்டார்? அது அவரின் "வாட்டர்லூவாக" மாறிப்போனது :**

- மிகப்பெரும் தொழில் நகரான ஸ்டாலின்கிராட் வெற்றி கனியாக ஹிட்லர் கருதினார்.
- எண்ணெய் வளம் மிக்க காகசஸ் பகுதியின் மீது ஹிட்லரின் கண்கள் படர்ந்திருந்தன.
- சோவியத் தலைவர் ஸ்டாலின் பெயர் கொண்ட நகரை ஆக்கிரமிப்பதை விரும்பினார்.
- ரஷ்யாவின் தாக்குதல், கடுங்குளிர் மற்றும் பசிக்கு முன் ஜெர்மனி படைகள் வீழ்ந்தன.

**2. நேச நாடுகள் ஜெர்மனி மீது குண்டுவீசி தாக்கியது பயங்கர தாக்குதல் பிரச்சாரங்களுக்கு அடையாளமாக அமைந்தது - விளக்குக.**

**நேச நாடுகள் ஜெர்மனி மீது குண்டுவீசி தாக்கியது பயங்கர தாக்குதல் பிரச்சாரங்களுக்கு அடையாளமாக அமைந்தது :**

- ஜெர்மனியின் ட்ரெஸ்டன் நகரை முற்றிலும் குண்டு வீசி அழித்தனர்.
- இது ஜெர்மனிக்கு எதிரான திகிலூட்டும் குண்டுவீச்சாக அமைந்தது.
- குண்டு வீச்சில் 6,00,000 ஜெர்மன் குடிமக்கள் கொல்லப்பட்டனர்.
- படிப்படியாக ஜெர்மானியப் படைகள் பின்னுக்குத் தள்ளப்பட்டன.

**3. இரண்டாம் உலகப்போரின் முக்கிய விளைவுகளை முன்னிலைப்படுத்துக.**

**இரண்டாம் உலகப்போரின் முக்கிய விளைவுகள் :**

- சுமார் 6 கோடி மக்கள் இறந்தனர். மக்கள் பலர் தங்களது வீடுகளை இழந்தனர்.
- ஐரோப்பா தனது அந்தஸ்த்தை இழந்தது. பொருளாதாரம் சரிந்து நொறுங்கியது.
- உலகின் இரு ஆதிக்க சக்திகளாக அமெரிக்காவும் ரஷ்யாவும் உருவாகின.
- காலனிய நாடுகளில் சுதந்திரப் போராட்டத்தை தீவிரப்படுத்த தூண்டியது.

## IV. விரிவான விடையளிக்கவும்.

**1. "இரண்டாம் உலகப்போரின் விதைகளை வெர்செய்ல்ஸ் ஒப்பந்தமே தூவியது" என்பதனை தகுந்த காரணத்தோடு விளக்குக.**

**"இரண்டாம் உலகப்போரின் விதைகளை வெர்செய்ல்ஸ் ஒப்பந்தமே தூவியது" என்பதற்கான காரணங்கள் :**

- முதல் உலகப்போர் முடிவில் ஜெர்மனி மீது கடுமையான விதிமுறைகள் சுமத்தப்பட்டன.
- ஜெர்மனியிடம் இருந்த காலனிய நாடுகள் பறிக்கப்பட்டது. படையளவு சுருக்கப்பட்டது.
- அல்சேஸ், லொரைன் பகுதிகளை பிரான்சுக்கு விட்டுக் கொடுக்க கட்டாயப்படுத்தியது.
- சார் பள்ளத்தாக்கில் பிரான்சு தற்காலிக படைகளை நிறுத்திக் கொள்ள நிர்ப்பந்தித்தது.
- தொழிற்சாலைகள் நிறைந்த பகுதியான சைலேசியா போலந்திடம் ஒப்படைக்கப்பட்டது.
- 6,600 மில்லியன் பவுண்டுகள் போர் இழப்பீட்டுத் தொகை ஜெர்மனியிடம் கோரப்பட்டது.
- தங்களுக்கு அநியாயம் இழைக்கப்பட்டதாக ஜெர்மனிக்குள் எண்ண அலை ஏற்பட்டது.
- பின் தொடர்ச்சியாக ஜெர்மனியில் நாஜி கட்சியின் அரசியல் வெற்றிக்கு வழி வகுத்தது.
- சிறு குடியரசாக மாற்றப்பட்ட ஆஸ்திரியாவை, ஜெர்மனியிடம் இருந்து பிரித்து வைத்தது.
- டால்மேஷியாவை யுகோஸ்லோவியாவிடம் கொடுத்ததால் இத்தாலி பாதிப்பு அடைந்தது.

KAVIN GUIDE 2020

**2. இரண்டாம் உலகப்போர் ஏற்பட ஜெர்மனியும், ஹிட்லரும் எந்த அளவிக்குக் காரணமாவார்கள் என்பதனை ஆய்ந்து கூறுக.**

**இரண்டாம் உலகப்போர் ஏற்பட ஜெர்மனியும், ஹிட்லரும் காரணமாவார்கள் :**

**I. சார் பகுதியை ஜெர்மனியோடு இணைத்தது :**

◈ 1935 இல் சார் பகுதியில் பொது வாக்கெடுப்பு நடத்தி ஜெர்மனியோடு இணைத்தார்.

◈ 96 சதவீதம் மக்கள் ஜெர்மனியோடு இணைவதை விரும்புவதாக வாக்களித்தனர்.

**II. ரைன்லாந்து இணைக்கப்படல் :**

◈ 1936 இல் ஹிட்லர் மீண்டும் ரைன்லாந்து பகுதியில் இராணுவத்தைக் குவித்தார்.

◈ வெர்செய்ல்ஸ் ஒப்பந்தத்தை மீறியதோடு ரைன்லாந்தை ஜெர்மனியுடன் இணைத்தார்.

**III. ஆஸ்திரியாவை ஜெர்மனியோடு வலுக்கட்டாயப்படுத்தி இணைத்தது :**

◈ ஆஸ்திரியாவில் பிறந்த ஹிட்லர் அதை ஜெர்மனியின் ஒரு பகுதியாக்க விரும்பினார்.

◈ ஹிட்லரின் நிர்ப்பந்தத்தால் ஆஸ்திரிய பிரதமர் அங்கு நாஜி அரசை ஏற்படுத்தினார்.

**IV. சூடட்டன்லாந்து ஆக்கிரமிப்பு :**

◈ சூடட்டன்லாந்தில் வாழும் ஜெர்மானியர்கள் ஒடுக்கப்படுவதாக பிரச்சாரம் செய்தார்.

◈ பொதுவாக்கெடுப்பு நடத்தும் முன்னரே சூடட்டன்லாந்தை ஹிட்லர் ஆக்கிரமித்தார்.

**V. மூனிச் ஒப்பந்தம் :**

◈ மூனிச் மாநாட்டில் பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி கலந்து கொண்டன.

◈ சூடட்டன்லாந்தை ஜெர்மானிய படைகள் ஆக்கிரமித்துக் கொள்ள அனுமதித்தது.

**VI. செக்கோஸ்லோவாகியாவிற்கு எதிரான அத்துமீறிய தாக்குதல் :**

◈ செக் நாட்டினர் தாங்கள் ஏமாற்றப்பட்டதாக உணர்ந்தார்கள்.

◈ செக்கோஸ்லோவாக்கியாவின்

**VII. நாஜி - சோவியத் உடன்படிக்கை :**

◈ ஜெர்மனியுடன் போரிட விரும்பாத ரஷ்யா அமைதி மற்றும் பாதுகாப்பை விரும்பியது.

◈ 1939 இல் க்ரெம்ளின் நகரில் நாஜி - சோவியத் உடன்படிக்கை கையெழுத்தானது.

**VIII. போலந்து மீது படையெடுப்பும், போரின் துவக்கமும் :**

◈ ஹிட்லர் ஐரோப்பா முழுவதையும் ஆக்கிரமிக்கும் நோக்கம் கொண்டிருந்தார்.

◈ 1939 செப்டம்பர் 1 இல் போலந்து சதி திட்டம் தீட்டுவதாக கூறி படையெடுத்தார்.

KAVIN GUIDE 2020

# அலகு - 15 இரண்டாம் உலகப்போருக்கு பிந்தைய உலகம்

## I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

**1. சரியான விடையைத் தேர்வு செய்க.**

**கூற்று :** பன்னாட்டு சங்கம் ஒரு தோல்வி என்பதை இரண்டாம் உலகப்போர் நிரூபித்தது.

**காரணம் :** மற்றொரு போர் ஏற்படா வண்ணம் தடுக்க ஒரு சக்திவாய்ந்த அமைப்பை உருவாக்க வேண்டியதன் அவசியத்தை தலைவர்கள் உணர்ந்தனர்.

**அ) கூற்று, காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.**

ஆ) கூற்று காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.

இ) கூற்று சரி. காரணம் தவறு.

ஈ) கூற்று தவறு. காரணம் சரி.

**2. ஐக்கிய நாடுகள் சபை 1945 அக்டோபர் 24 இல் .................... உருவானது.**

அ) 100 உறுப்பினர்களுடன் ஆ) 72 உறுப்பினர்களுடன்

**இ) 51 உறுப்பினர்களுடன்** ஈ) 126 உறுப்பினர்களுடன்

**3. பின்வரும் கூற்றுகளில் எக்கூற்றுகள் சரியானவை?**

**கூற்று I :** ஐக்கிய நாடுகள் சபையின் தோற்றம் பனிப்போரின் தொடக்கத்துடன் ஒருங்கே நடைபெற்றது.

**கூற்று II :** பனிப்போர் காலக்கட்டத்தில், போர்கள் நிகழாமல் தடுப்பதில் ஐ.நா. சபை முக்கிய பங்காற்றியது.

**கூற்று III :** பாதுகாப்பு சபையின் நிரந்தர உறுப்பினர்கள் தொடர்புடைய பிரச்சனைகளில் ஐ.நா. சபை மௌனமான பார்வையாளராகவே இருந்தது.

அ) I, II ஆ) II, III இ) I, III **ஈ) மேற்கூறப்பட்ட அனைத்தும்**

**4. சூயஸ் கால்வாய் செங்கடலை ................. இணைக்கிறது.**

அ) ஏடன் வளைகுடாவுடன் ஆ) காம்பே வளைகுடாவுடன்

**இ) மத்தியதரைக் கடலுடன்** ஈ) அரபிக் கடலுடன்

**5. ஐ.நா. சபையின் முதல் பொதுச்செயலாளர் டிரிக்வே லை ................ சேர்ந்தவராவார்.**

அ) பர்மா ஆ) ஜப்பான் இ) சிங்கப்பூர் **ஈ) நார்வே**

KAVIN GUIDE 2020

## II. குறுகிய விடையளிக்கவும்.

**1. ஐ.நா. சபையில் நிறைவேற்றப்பட்ட "அமைதிக்காக இணைகிறோம்" எனும் தீர்மானத்தின் சிறப்பினைக் குறிப்பிடவும்**

**ஐ.நா. சபையில் நிறைவேற்றப்பட்ட "அமைதிக்காக இணைகிறோம்" எனும் தீர்மானத்தின் சிறப்பு :**

- அமைதிக்காக ஒன்றுபடுகிறோம் என்ற தீர்மானத்தை அமெரிக்கா நிறைவேற்றியது.
- பாதுகாப்பு சபையில் ஒரு உடன்பாட்டை எட்டமுடியாத நெருக்கடிச் சூழலில் பொது சபை இராணுவத்தை பயன்படுத்தும் பரிந்துரையைச் செய்யலாம் எனக் கூறியது.

**2. ஹங்கேரியச் சிக்கலின் பின்னணி யாது?**

**ஹங்கேரியச் சிக்கலின் பின்னணி :**

- ஸ்டாலின் நியமித்த ஹங்கேரி பிரதமர் ரகோசி 1953 இல் பதவி நீக்கம் செய்யப்பட்டார்.
- ஆனால் ரகோசி பொதுவுடைமை கட்சியைத் தனது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்தார்.
- 1956 அக்டோபர் 23 இல் ஒரு அறிவார்ந்த மக்கள் கிளர்ச்சி புதாபெஸ்ட்டில் வெடித்தது.

KAVIN GUIDE 2020

## III. சுருக்கமான விடையளிக்கவும்.

**1. ஐ.நா. சபையின் சாசனம் முடிவாக ஏற்றுக் கொள்ளப்பட்டதன் பல்வேறு கட்டங்கள் குறித்து எழுதுக.**

**ஐ.நா. சபையின் சாசனம் முடிவாக ஏற்றுக் கொள்ளப்பட்டதன் பல்வேறு கட்டங்கள் :**

- 1943 இல் மாஸ்கோ பிரகடனம், பன்னாட்டு அமைப்பின் அவசியத்தை அங்கீகரித்தது.
- 1944 இல் வாஷிங்டன் நகரில், உலக அமைப்புக்கான செயல்திட்டத்தை உருவாக்கினர்.
- 1945 யால்டா மாநாடு - பாதுகாப்பு சபையில் வாக்களிக்கும் முறை பற்றி விவாதித்தனர்.
- 1945 இல் சான்பிரான்சிஸ்கோவில் ஐ.நா. சபையின் சாசனம் இறுதி செய்யப்பட்டது.

**2. சூயஸ் கால்வாய் சிக்கல் குறித்து சுருக்கமாக வரைக.**

**சூயஸ் கால்வாய் சிக்கல் :**

- 1956 இல் எகிப்தின் அதிபர் நாசர் சூயஸ் கால்வாயை தேசியமயமாக்கினார்.
- இஸ்ரேலிய படைகள் சினாய் தீபகற்பம் மீது படையெடுத்து சென்றன.
- பிரிட்டிஷ் மற்றும் பிரான்ஸ் எகிப்தின் விமானத் தளங்கள் மீது குண்டு வீசின.
- ஐ.நா. சபை கண்டணம் செய்தது. இஸ்ரேல், பிரிட்டன், பிரான்ஸ் போரை நிறுத்தின.

## IV. விரிவான விடையளிக்கவும்.

**1. அரபு - இஸ்ரேலிய முரண்பாட்டின் தோற்றத்தை விவாதிக்கவும். தொடர்ந்து ஏற்பட்ட நிகழ்வுகள் எவ்வாறு இரு நாடுகளுக்கிடையே 1967 இல் பெரும் போர் ஏற்படக் காரணமாயிற்று என்பதை விளக்கவும்.**

### அரபு - இஸ்ரேலிய முரண்பாட்டின் தோற்றம் :

- பாலஸ்தீனத்தில் தங்களுக்கு ஒரு தாயகம் வேண்டுமென யூதர்கள் கோரினர்.
- அராபியர்கள் இதை எதிர்த்தனர். அப்பிரச்சனை ஐ.நா. சபையின் முன் வந்தது.
- 1947 மே மாதம் ஐ.நா. பொது சபையில் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியது.
- ஐ.நா. சபை பாலஸ்தீனத்திற்கான சிறப்பு குழு ஒன்றை (UNSCOP) அமைத்தது.
- பாலஸ்தீனம் இரு நாடுகளாக பிரிக்கப்பட வேண்டும் என பரிந்துரைத்தது.
- 55 சதவீத நிலப்பரப்பைக் கொண்ட யூத நாடு உருவாகும் நிலை ஏற்பட்டது.
- 1948 மே 14 இல் இஸ்ரேல் எனும் புதிய நாடு உருவாக்கப்பட்டது.

### அரபு - இஸ்ரேல் இடையே 1967 இல் பெரும் போர் ஏற்படக் காரணமான தொடர் நிகழ்வுகள் :

- 1947 நவம்பரில் பாலஸ்தீனத்தை இரண்டாகப் பிரிக்க ஐ.நா. சபை முடிவு செய்தது.
- பாலஸ்தீனத்தில் அராபியர்களுக்கும் யூதர்களுக்கும் இடையே போர் மூண்டது.
- ஆங்கிலப் படை வெளியேறியதும் இஸ்ரேல் தன்னை சுதந்திர நாடாக அறிவித்தது.
- ஐ.நா. அமைதி காக்கும் படை எகிப்து - இஸ்ரேல் எல்லையில் முகாமிட்டு இருந்தது.
- அகதிகள் தங்கள் வீடுகளுக்குத் திரும்பும் காலம் வரை அவர்களுக்கு உதவியது.
- அமெரிக்கா இஸ்ரேலுக்கு புதிய ரக போர் விமானங்கள், ஏவுகணைகள் வழங்கியது.
- இஸ்ரேல் - அரபு நாடுகள் இடையே பதட்டம் அதிகரித்து 1967 இல் போர் வெடித்தது.

KAVIN GUIDE 2020

---

**வாழ்த்துக்களுடன்**

**மாணவர்கள் நலனுக்காக**

---